

# பிரசவத்தின்போது வைத்தியர்கள், பயிற்றப்பட்ட தாதியர்கள் இருக்க வேண்டும்

**டொக்டர் முகம்மட் ரிஷாட் (MBBS)**
சிரேஷ்ட விரிவுரையாளர் கொழும்பு மருத்துவ பீடம், பெண்ணியல் மற்றும் மகப்பேற்று வைத்திய நிபுணர் டீசொய்சா மருத்துவமனை.

07



03

## கூட்டணியில்லாத கட்சிகளைத் தேடி...



09

## துரோகத்தின் தருணம்


# மீள்பார்வை

මීල්පාර්වෙ

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/75/NEWS/2017 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඩ
சமூக மாற்றத்திற்கான குரல்


இதழ் - 384 • 22 டிசம்பர் 2017 வெள்ளிக்கிழமை • ரபீஉல் ஆகிர் 1439 • விலை 40.00







# கிழக்கு ஜெருஸலத்தை பலஸ்தீனின் தலைநகராக ஏற்கக் கோரி இலங்கையில் பேரணி




உலக நீதிக்கு எதிராக இஸ்ரேலின் தலைநகராக ஜெரூசலத்தை அங்கீகரித்ததோடு மட்டுமல்லாமல் இந்தத் தீர்மானத்தை எதிர்த்து ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்ஸிலில் முன்னெடுக்கப்பட்ட வாக்கெடுப்பையும் தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி நிராகரித்துள்ள அமெரிக்காவின் தான்தோன்றித்தனமான போக்குக்கு எதிரான கண்டனங்கள் உலகெங்கும் உக்கிரமடைந்து வருகின்றன.

ஜெரூஸலத்தை இஸ்ரேலின் தலைநகராக இலங்கை ஏற்றுக் கொள்வதில்லை எனவும் இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதரகத்தை ஜெரூஸலம் நகருக்கு மாற்றுவதில்லை என்ற இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை, கடந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின் போது அமைச்சரவை இணை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்திருந்தார்.

(பக்.14)



'நிலையாய் ஓர் ஊடகம்' என்ற இலக்கை நோக்கி மீள்பார்வையை முன்னெடுத்துச் செல்வதற்காக நாடு முழுவதும் கலண்டர் விற்பனை நடைபெறுகிறது. மீள்பார்வை வாரத்தை ஒட்டி காங்கயனோடையிலும் கலண்டர் விற்பனை களைகட்டியது.

# 14,000 மலேசிய வீடுகள் வடக்கு மீள்குடியேற்றத்துக்கும் கிடைக்குமா?

மலேசியப் பிரதமர் நஜீப் ரஸாக்குக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குமிடையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இரு தரப்பு பேச்சுவார்த்தையின் போது இலங்கையில் 14,000 மத்திய தர வீடுகளை நிர்மாணிப்பதற்கு மலேசியா இணக்கம் தெரிவித்துள்ளது.

மலேசியாவுக்கும் இலங்கைக்குமிடையில் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து இரு நாடுகளின் தலைவர்களும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடினர்.

விமான நிலைய முகாமைத்துவம், மத்திய தர வர்க்க வீடமைப்பு, விஞ்ஞான தொழில்நுட்பம், நெனோ தொழில்நுட்பம் மற்றும் உயிரியல் தொழில்நுட்பம், சுற்றுலாத் துறை, மருத்துவம், கல்வி, (பக்.14)



# மூன்று இலட்சம் வாக்காளர்களுக்கு அடையாள அட்டை இல்லை



உள்ளூராட்சித் தேர்தல்கள் பெப்ரவரி 10 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், வாக்களிக்க தகுதிபெற்றவர்களில் சுமார் 3 இலட்சம் பேருக்கு தேசிய அடையாள அட்டை இல்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவுக்கும் ஆட்பதிவு திணைக்களத்திற்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் பிறப்பு சான்றிதழ் இல்லாதவர்களுக்கு தேசிய அடையாள அட்டை வழங்குவதற்காக திணைக்களத்தில் விசேட பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் நாயகம் வியானி குணத்திலக தெரிவித்தார். (பக். 15)

# தேர்தல் முறைப்பாடுகளை ஏற்க தனி அலுவலகம்



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை பொறுப்பேற்பதற்காக தேர்தல்கள் செயலகத்தில் தனியான அலுவலகமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தேர்தல்கள் தொடர்பான சட்டமீறல்களை இங்கு முறைப்பாடு செய்ய முடியும் எனவும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். முஹம்மட் தெரிவித்துள்ளார். (பக். 15)

# மு.த.சட்டம்: அறிக்கை கைச்சாத்தாவதில் இழுபறி

நீண்ட காலமாக இழுத்தடிக்கப்பட்டு வருகின்ற முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தத்துக்கான பிரேரணைகள் கடந்த 20 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டு அறிக்கை இறுதிப்படுத்தப்படுவதாக இருந்த போதிலும் இரு தரப்புக்கு மத்தியில் நிலவுகின்ற இழுபறியினால் இம்முறையும் அறிக்கை இறுதிப்படுத்தும் முயற்சி கைகூடவில்லை எனத் தெரியவருகிறது.

கடந்த எட்டு வருடங்களாக நீதியரசர் ஸலீம் மர்சூப் தலைமையிலான குழு முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தத்துக்கான பிரேரணைகளை தயாரித்து வருகின்றது. (பக். 15)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாக்கு கேட்பதற்கான தகுதி

- றமீஸ் அபூபக்கர்

புதிய தேர்தல் முறையில் கீழ் நடக்கும் இந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில், வட்டாரத்தில் வேட்பாளர்களின் தகுதிகள் முக்கியத்துவம் பெறும் என்பதால் பொதுமக்கள் அவ்வேட்பாளர்களின் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தலாம்:

1) இறைபக்தி உள்ளவரா? (படைத்தவனுக்கு மட்டுமே அஞ்சி அடிபணிந்து கடமை செய்யக்கூடியவரா)
2) ஊழலில் ஈடுபடாதவரா? (பொது மக்கள் சொத்தை அபகரிக்காதவரா)
3) சமூக சேவையில் நாட்டமுள்ளவரா?
4) பதவிப்பித்து பிடிக்காதவரா?
5) உள்ளூராட்சி மன்றங்களில் நிறைவேற்றப்படும் அபிவிருத்தி, நிதி திட்டமிடல்களை விளங்கிக்கொள்ளும் திறமை உள்ளவரா?
6) கடன் சுமை, வருமானம் தரும் வழிகள் எதுவும் அற்றவரா? (இப்படியானவர்கள் அரசியல் ஈடுபடுவதே மக்கள் பணத்தை சுருட்டத்தான்)
7) மக்களுடன் பண்பாக பழகக்கூடியவரா?
8) ஆளுமை உள்ளவரா?

போன்ற இன்னோரன்ன விடயங்களை கவனத்தில் கொண்டு வாக்களிக்க முடியும்.




- நப்லான் நபீஸ்

ஒரு சமூகத்தின் தலைமை பொறுப்பு தீயவர்கள் வசம் சென்று விட்டால், அச்சமூகம் அழிக்கப்பட உள்ளது என்று பொருள்.
- மௌலானா மௌதூதி (ரஹ்) -

- முாஸ் வஹாப்தீன்

எந்த பதவி, பட்டம் கிடைக்கிறதோ, இல்லையோ உண்மையையும், நேர்மையையும் இழந்து விட வேண்டாம், அபேட்சகர்களே !

நபர் 1:- வருடம் முழுவதும் தேர்தல் நடந்தா நல்லா இருக்கும்.
நபர் 2 :-ஏன் அப்படி சொல்றீங்க!!!????
நபர் 1:- அப்படியான காலத்துல தானே ஊரில அபிவிருத்தி வேல நெறய நடக்குது.
நபர் 2:-அது சரிதான்.

- ஸயீம் ஏ. ரஹ்மான்

### பத்வா

- நிஷா மன்சூர்

சுக்கில்லாத அற்ப விஷயங்களில் தர்க்கித்துக் கொள்வதும் தீப்பொறி பறக்க விவாதித்துக் கொள்வதும் பிணங்கிக் கொண்டு ஃபத்வா கொடுப்பதும் சுவாரஸ்யமான பொழுதுபோக்கு இவர்களுக்கு...

- ஆதில் அலி ஸப்ரி

போஸ்டர் பசையுடன் கண்ணாடி தூல் களந்து ஒட்டுறாங்க. அகற்றும்போது கை வெட்டுது.

- அஷ்கர் ஜஹ்ஃபர்

*முன்னர் காண்ற இடத்திலெல்லாம் சிரிச்ச வேட்பாளர் இப்ப வட்டாரத்துக்குள்ள கண்டா மட்டும்தான் சிரிக்கார்...*

### (அதிகாரக்) கதிரை

- அஷ்ரப் சிஹாப்தீன்

கதிரை உங்களுக்கானதுதான்
ஆனால், வாங்கியது எங்கள் பணத்தில்
எங்கள் எல்லோரையும்
அமர்த்த முடியாது என்பதற்காகத்தான்
நீங்கள் அமர்த்தப்படுகிறீர்கள்.

## வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தொழிலாளர்களுக்கு ஒரு ஆப்பு

- றஸானா மனாப்

வெளிநாட்டில் தொழில்புரிபவர்கள் இலங்கைக்கு அனுப்பும் பணத்திற்கு இலங்கை அரசினால் 1% வரி அறவிடப்பட போவதாக ஒரு செய்தி கண்ணில் பட்டது.

அறவிடப்படும் இந்த வரி நாட்டின் அபிவிருத்திக்கு மட்டும் பயன்படுமாக இருந்தால் அந்த வரியை மனமுவந்து அளிப்பதில் மகிழ்ச்சி. ஆனால், வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கை பணியாளர்களில் பெரும்பாலானவர்கள் மத்திய கிழக்கு நாடுகளிலேயே பணி புரிகின்றார்கள். அதிலும் குறைந்த மாதாந்த ஊதியங்களில் பணிபுரியும் ஆண், பெண், தொழிலாளர்களே அதிகம்.



வீட்டுப் பணிப்பெண்களாக, வீடுகளிலும் நிறுவனங்களிலும் சாரதிகளாக, துப்புரவு பணியாளர்களாக, கைக்குழந்தைகளை பராமரிப்பவர்களாக, தோட்டப் பராமரிப்பாளர்களாக, கட்டிட நிர்மாண தொழிலாளர்களாக, கால்நடை வளர்ப்பாளர்களாக, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வேலை செய்கின்றவர்களாக, பல்பொருள் அங்காடிகளில் கூடை சுமப்பவர்களாக, தள்ளுவண்டி தள்ளுபவர்களாக என பல்வேறு பட்ட கதாபாத்திரங்களை ஏற்று வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் இன்னும் அதிகம்.

இவ்வாறு பணிபுரிகின்றவர்கள் ஒவ்வொரு நாளும் தமது எஜமானர்களால் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. இவர்களுக்கு மாதாந்த சம்பளம் ஒழுங்காக வழங்கப்படுவதில்லை, வேலை நேரம் ஒழுங்காக வரையறுக்கப்பட்டு கொடுக்கப்படுவதில்லை, ஒப்பந்த வேலை நேரத்திற்கு அதிகமான நேரம் வேலையில் ஈடுபடுத்துவது, தங்குமிட வசதிகள் ஒழுங்கான முறையில் வழங்கப்படுவதில்லை, விடுமுறைகள் முறையாக வழங்கப்படுவதில்லை, மருத்துவ விடுமுறைகளில் வேலை செய்யக் கோருவது, அல்லது மருத்துவ விடுமுறையில் இருக்கும் போது அதற்கான ஊதியம் மறுக்கப்படுவது போன்ற பல பிரச்சினைகளில் ஒவ்வொருவரும் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சில வீடுகளில் வீட்டுப் பணிப்பெண்களை வீட்டுக் கைதிகளாக வைத்துக் கொண்டு நடத்தப்படும் அவலமும் நடந்தேறுகின்றது, மொத்தத்தில் மத்திய கிழக்கு வாழ்க்கை என்பது பஞ்சு மெத்தையில் படுத்துப் புரளும் ஒரு வாழ்க்கையல்ல; அது முட்களின் மேல் தூங்குவதை போன்றது. கண்ணீருடனும், வலிகளுடனும், இழப்புகளுடனும், துயரங்களுடனும் வாழ்ந்து ஒவ்வொரு ரூபாயாக சம்பாதிக்கும் அவர்களிடமிருந்து அறவிடப்படும் அந்த வரி மிகவும் பிரயோசனமுள்ளதாக மட்டுமே இருக்க வேண்டும். அப்போதுதான் அவர்களின் இழப்புகளுக்கும் ஒரு அர்த்தம் இருக்கும்.

வரி அறவிடுகிறோம் என்கின்ற பெயரில் அவர்களின் உழைப்புகளை திருடி ஒவ்வொரு அரசியல்வாதியும் தமது சட்டைப் பைகளை நிரப்பிக் கொண்டு தாம் மட்டும் சுகபோகமாக வாழ நினைத்தால் அந்த வரி அறவீடு அர்த்தமற்ற ஒன்றாகி விடும்.

தொழிலாளர்களின் வரி எவ்வாறு செலவு செய்யப்படுகின்றது என அரசாங்கமே ஊர்ஜிதப்படுத்து!

O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான
PERSONALITY DEVELOPMENT
& DIPLOMA IN ENGLISH LANGUAGE

கற்கைநெறியின் உள்ளடக்கம்

PERSONALITY DEVELOPMENT
□Tharbiya :
- Thajweed
- Hifl
- Thafseer
- Duas
- Prayers
□Personality and Leadership
□Positive thinking
□Critical and creative thinking
□Decision making
□Problem solving
□Stress management
□Time management
□Information management
□Anger management
□Commmunication skills
□Self-regulated learning
□Physical fitness and games

ENGLISH LANGUAGE
you will...
□Learn from the basic grammar
□Read more than 20 books in English
□Listen to the news and speeches
□Translate paper articles and stories
□Take part in conversations and role plays
□Participate in discussions
□Do presentations

Residential programme for boys:
40 DAYS
□ பாதுகாப்பான இஸ்லாமிய சூழல்
□ 9 வருட கால அனுபவம்
□ துறை சார்ந்த வளவாளர்கள்
□ மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி



கட்டணம் ரூபா
18,500
(உணவு, தங்குமிட வசதிகளுடன்)

COMMENCEMENT
Batch 1
03/01/2018
Batch 2
07/02/2018
Batch 3
10/03/2018

FOR FURTHER INFORMATION & APPLICATION
TEXT YOUR NAME AND ADDRESS TO
0777 23 1234

MINDRICH
COLLEGE OF MANAGEMENT STUDIES
كلية الدراسات الإدارية
Enrichment of Excellence

NO. 49, Second Lane, Dehiwala.
T : 0112 76 1884
E : infomindrich@gmail.com

## வாக்காளன் பேசுகிறேன்

- மனூஸ் அபூபக்கர்



'யாருக்கு வாக்களிக்க வேண்டும்?'
பதில் எனக்கானது அல்ல நமக்கானது.
வட்டாரத் தேர்தல் வஸ்தவம்தான் என்று குதித்திருக்கும் வேட்பாளர்களே!

1) உங்கள் வட்டாரத்திலுள்ள வாக்காளர் எண்ணிக்கை உங்களுக்குத் தெரியும். ஆண், பெண் தெரியும். ஆனால் அந்த வாக்காளர்களில்,

- எத்தனை வயோதிபர்கள்? எத்தனை பேர் முதியோர் கொடுப்பனவுகள் பெறுகிறார்கள்?
- விதவைகள்?
- கடந்த இரண்டு ஆண்டுகளில் எத்தனை திருமணங்கள் நடந்துள்ளன? எத்தனை விவாகரத்து?
- மாற்றுத் திறனாளிகள் எத்தனை? அவர்களில் எத்தனை பேர் மாதாந்தக் கொடுப்பனவு பெறுகிறார்கள்?
- கணவனை விட்டுப் பிரிந்த அபலைப் பெண்கள்?
- சிறுவர்கள் எத்தனை? அவர்களுக்கான பொழுது போக்கு இடங்கள் எவை?
- வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுச் சென்றுள்ளவர்களின் தொழில் நிலை, குடும்பக் கட்டமைப்பு?
- சமுர்த்திப் பயனாளிகள் எத்தனை?
- பெண்தலைமைக் குடும்பங்கள் எத்தனை?
- கல்வியறிவு மட்டம் (சாதாரண தரம், உயர்தரம் சித்தி பெற்ற ஆண்கள், பெண்கள்)
- வேலையில்லாமல் வீட்டில் முடங்கிக் கிடக்கும் எனது சமூகத்தின் முதுகெலும்புகள் (இளைஞர்கள்) எத்தனை?
- வட்டாரத்திலுள்ள சமூக அமைப்புக்கள் எத்தனை உள்ளன? அவற்றில் பதிவு செய்தது எத்தனை? இயங்குவது எத்தனை?
- கடந்த ஐந்து ஆண்டுகளில் கிராமத்தில் எத்தனை அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் நடந்துள்ளன? அவற்றில் எது நிலைத்தது? எவை காசை செலவளிப்பதற்காக திட்டமிடப்படாமல் செய்யப்பட்டுள்ளது?
- அனர்த்தம் ஏற்பட அதிக வாய்ப்புள்ள அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடங்கள் எவை? [illegible] இடம் எது?
- வெள்ள நீர் வடிந்து ஓடாமல் தேங்கி நிற்கும் வீதிகள் எவை? ஏன் அவ்வாறு நிற்கிறது?
- மஸ்ஜிதுகள் எத்தனை? அங்குள்ள இமாம், முஅத்தின் என்போருக்கு எவ்வாறு சம்பளம் கொடுக்கிறார்கள்?
- வட்டாரத்தின் தொழுகை வீதம் எத்தனை?
- பாடசாலை அமைந்திருக்குமாயின் தற்போதைய நிலை, தேவைப்பாடுகள்? மனித, பௌதீக வளப்பற்றாக்குறைகள் என்ன?
- வட்டாரத்தில் புகைத்தல் பாவிப்போர் எத்தனை? ஏனைய போதைவஸ்துக்கு அடிமையானோர் எத்தனை? அல்லது கடத்தல், விற்பனையில் ஈடுபடுவோர் எத்தனை?

2) இஸ்லாமிய அரசியல், பெரும்பான்மை இன மக்கள் செறிந்து வாழும் நாட்டில் எவ்வாறு அமுல்படுத்துவது, அதன் அடிப்படைகள் எவை?

- மக்கள் பிரதிநிதி என்ற வகையில் மார்க்கம் சொல்லும் கடமைப் பொறுப்புக்கள் எவை?

3) பொதுச் சொத்துக்கள், அமானிதம் தொடர்பில் உங்களது அறிவு, தெளிவு எப்படி? பொது நிகழ்வுகளில் பங்கேற்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள், ஒழுக்கங்கள் எவை?

4) அரச நிறுவனங்கள், நிருவாகிகள், ஏனைய அரசியல் கட்சிகள் தொடர்பில் உங்களது நிலைப்பாடு?

5) பொது மக்களின் பிரதிநிதி என்ற அடிப்படையில் செயற்படத் தவறுகின்ற பொது மக்கள் தீர்ப்புக்கு, மக்களின் அபிலாஷைக்கு மதிப்பளிப்பீர்களா?

6) உங்கள் விசுவாசம் முதலில் கட்சிக்கா? வட்டார மக்களுக்கா?

7) நீங்கள் சார்ந்துள்ள ஜமாஅத், இயக்க சிந்தனைக்கு அப்பால் வட்டார மக்களுக்கான ஆன்மீக வழிகாட்டல் திட்டங்கள் எவை?

இந்தக் கேள்விகளுக்கு யார் பதில் தருகிறார்களோ அவர்களுக்கு உங்களது வாக்குகளை அளியுங்கள்.
''ஆட்சி அதிகாரத்தைக் கொடுப்பதும் எடுப்பது அல்லாஹ் ஒருவனே''
அமானிதம் காப்போம், உறவுகளைப் பேணுவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டணியில்லாத கட்சிகளைத் தேடி...

• எம்.எஸ்.எம். ஐயூப்

எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கான ஆயத்தங்கள் அரசியல் கட்சிகளாலும் தேர்தல் திணைக்களத்தாலும் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், சிறிய, பெரிய மற்றும் இனரீதியான சகல அரசியல் கட்சிகளும் ஒருவித அச்ச உணர்வோடு செயற்படுவதாகவே தெரிகிறது.

நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளில், மக்கள் விடுதலை முன்னணி மட்டுமே தமது சொந்தப் பலத்தின் மீது நம்பிக்கை வைத்து, தேர்தல் களத்தில் இறங்கத் தயாராக இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

ஏனைய சகல கட்சிகளும், கூட்டணிகளை அமைக்க அரசியல் கூட்டாளிகளைத் தேடித் திரிவதையும், சிலர் அந்தக் கட்சியின் பின்னாலும் இந்தக் கட்சியின் பின்னாலும் அலைவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

அரசியல் கட்சிகளின் இந்தப் பதற்றத்தின் காரணமாக, சாதாரண உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது காட்டும் அக்கறையைப் போலன்றி, நாடாளுமன்றத் தேர்தலின்போது காட்டும் அக்கறையை சில கட்சித் தலைவர்கள், இந்தத் தேர்தலுக்குக் காட்டுகிறார்கள். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள், இதற்கு முன்னர் இவ்வளவு முக்கியத்துவம் பெறவில்லை.

நாட்டிலுள்ள தற்போதைய அரசியல் நிலைமையே இந்த நிலைக்குக் காரணமாகும். ஒருபுறத்தில், நாட்டில் தனிக் கட்சியொன்றின் நிலையான ஆட்சி இல்லை. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மஹிந்த ராஜபக்ஷ அணிக்கும் மைத்திரிபால சிறிசேன அணிக்கும் இடையே பலத்த அதிகாரப் போட்டியொன்று நிலவுகிறது.

மறுபுறத்தில், அரசாங்கத்துக்குள் மைத்திரி அணிக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில், பலத்த பனிப்போரொன்று நிலவுகிறது.

எனவே, இம்மூன்று பிரிவினரும் தத்தமது பலத்தைக் காட்டவும் மற்ற இரு பிரிவினரையும் மட்டம் தட்டவும், பெரும் முயற்சி எடுத்துவரும் காலகட்டம் இது. ஒருபுறம் அவர்களுக்குள் ஒருவித அச்ச உணர்வு நிலவுகிறது. மறுபுறம், இந்த அச்ச உணர்வு காரண



மாகவே, ஏதாவது செய்து, தாம் முதலிடத்துக்கு வரவேண்டும் என்று துடிக்கிறார்கள். இந்தத் தேர்தலுக்கு முக்கியத்துவம் கிடைக்க இது ஒரு காரணமாகும்.

இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், பல உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல், இரண்டு வருடங்களுக்கு முன்னரே நடைபெறவிருந்தவை. ஏனையவை கடந்த வருடம் நடைபெறவிருந்தவை. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் காரணமாக, மேலும் பல தொழில்நுட்ப விடயங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தன.

அதனால் தேர்தல்கள் தாமதமாகின. அத்தோடு முன்னாள் அரசாங்கத்தினதும் இந்த அரசாங்கத்தினதும் சில அரசியல்வாதிகளின் சில கபட நடவடிக்கைகள் காரணமாகவும் அவை தாமதமாகின.

இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கு முக்கியத்துவம் கிடைக்க, தேர்தல்கள் தாமதமாகியமையும் ஒரு காரணமாகும். தேர்தல் தாமதத்தின் காரணமாக, ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையே பலத்த விவாதங்கள் இடம்பெற்றன. அதனால் தேர்தல்கள் ஊடகங்களில் பேசுபொருளாக மாறின.

எனவே இத்தேர்தல்கள், தமது எதிர்காலத்தின் திசையை நிர்ணயிக்கும் தேர்தல்களாக மாறிவிடும் என அரசியல் கட்சித் தலைவர்கள் நினைக்கும் அளவுக்கு, அவை முக்கியத்துவம் பெற்றுள்ளன. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அவ்வாறு நினைக்கிறார். ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி என்ற கட்சியின் தேர்தல் அணிக்குத் தலைமை தாங்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவ்வாறு நினைக்கிறார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும் அவ்வாறே நினைக்கிறார்கள் என்றே தெரிகிறது.

வழமையாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் போன்ற உள்ளூர் தேர்தல்களின்போது, மத்திய அரசாங்கத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டு இருக்கும் கட்சியே வெற்றி பெறும். ஆனால், இந்தச் சூத்திரம் இம்முறை தேர்தல்களுக்குப் பொருந்துமா என்பது சந்தேகமே.

இந்த நிச்சயமற்ற தன்மை காரணமாக, இந்தத் தேர்தல்களின் முடிவுகள் 2020 ஆம் ஆண்டில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களின் முடிவுகளையும் நிர்ணயிக்கும் எனச் சகல பிரதான கட்சிகளின் தலைவர்களும் நினைக்கிறார்கள்.

எந்தக் கட்சிக்கு, நாட்டில் பெரும்பான்மையான மக்களின் ஆதரவு கிடைக்கும் என்பதை, ஊகிக்க முடியாத நிலைமையே காணக்கூடியதாக இருக்கிறது. எந்தக் கட்சியின் பக்கமும் அலை வீசவில்லை. இந்த நிலையின் காரணமாகவே, அரசியல் கட்சித் தலைவர்கள் அச்சத்தில் இருக்கிறார்கள்.

அதனால், பிரதேச மட்டத்தில் இந்தத் தேர்தல்கள் நடைபெற்றாலும் மைத்திரிக்கும் மஹிந்தவுக்கும் இடையிலான போராட்டமாகவும் மஹிந்தவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான போராட்டமாகவும் வடக்கில் சம்பந்தனுக்கும் சுரேஷுக்கும் இடையிலான போராட்டமாகவும் மலையகத்தில் தொண்டமானுக்கும் திகாம்பரத்துக்கும் இடையிலான போராட்டமாகவும் கிழக்கில் ஹக்கீமுக்கும் ரிஷாத்துக்கும் இடையிலான போராட்டமாகவும் நிலைமை மாறியிருக்கிறது.

ஐக்கியத்துக்காக மைத்திரி - மஹிந்த அணிகளுக்கிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்திருந்தால், நாட்டின் நிலைமை முற்றாக மாறியிருக்கும். ஆனால், அப்பேச்சுவார்த்தைகள் அரசியல் யதார்த்தத்துக்கு முரணாக இருந்ததால், அவற்றின் தோல்வி முன்னரே நிர்ணயிக்கப்பட்டு இருந்தது.

இரு தலைவர்களினதும் கைகளைப் பலப்படுத்துவதே பேச்சுவார்த்தைகளின் நோக்கமெனக் கூறப்பட்டாலும், இருவரில் எவரும் மற்றவரது கை பலமடைவதை விரும்பவில்லை. அதனால் ஏற்பட்ட நிச்சயமற்ற தன்மை காரணமாக, கூட்டணிகளுக்கான பேச்சுகள் ஆரம்பமாகின. தம்மோடு 20 அரசியல் கட்சிகள் இணைந்திருப்பதாக மஹிந்த தலைமையிலான ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி கூறுகிறது.

ஆனால், 20 நிரந்தர உறுப்பினர்கள் உள்ள, 10 அரசியல் கட்சிகளையாவது தேடிக் கொள்வது கடினமாக இருக்கும் நிலையில், எவ்வாறான கட்சிகளைப் பொதுஜன முன்னணி சேர்த்துக் கொண்டுள்ளது என்பதை ஊகிக்க முடிகிறது.

இந்தக் கூட்டமைப்பில் தினேஷ் குணவர்தனவின் தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி, தற்போது உட்கட்சி சண்டையில் சிக்கிக் கொண்டிருக்கும் விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி, உதய கம்மன்பிலவின் பிவிதுரு ஹெல உருமய, திஸ்ஸ வித்தாரணவின் தலைமையிலான லங்கா சமசமாஜக் கட்சி மற்றும் வாசுதேவ நாணயக்காரவின் புதிய இடதுசாரி முன்னணி ஆகிய கட்சிகளும் இருக்கின்றன.

இவற்றுக்கு எந்தளவு மக்கள் ஆதரவு இருக்கிறது என்பது எல்லோரும் அறிந்த விடயம். இவற்றுக்குத் தனியே போட்டியிட்டு ஒரு நாடாளுமன்றத் தொகுதியேனும் வெற்றி பெற முடியாது. அதே வேளை, இவை மஹிந்த அணியோடு எப்போதோ சேர்ந்துவிட்ட கட்சிகள்.

ஐ.தே.க.வுக்கு அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் தலைமையிலான ஜாதிக ஹெல உருமய,

அமைச்சர் ரவூப் ஹக்கீமின் தலைமையிலான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் அமைச்சர் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு முன்னணி ஆகிய கட்சிகள் ஆதரவு வழங்குகின்றன. இந்தக் கட்சிகளுக்கு ஓரளவுக்கு மக்கள் ஆதரவு இருக்கிறது. ஆயினும், இக்கட்சிகளும் ஐ.தே.க.வின் பழைய நண்பர்களே. ஐ.தே.க.வும் புதிதாக எந்தக் கட்சியினதும் ஆதரவை வென்றதாக இல்லை.

முஸ்லிம் காங்கிரஸும் தமிழ் முற்போக்கு முன்னணியும் தமது கோட்டைகளில் அதாவது மு.கா கிழக்கிலும் த.மு.மு மலையகத்திலும் தத்தமது சின்னத்தின் கீழும், ஏனைய பிரதேசங்களில் ஐ.தே.க. சின்னத்திலும் போட்டியிடுவதாக முடிவு செய்துள்ளன.

நாட்டின் பிரதான மூன்று தலைவர்களில் ஜனாதிபதி மைத்திரிபாலவின் அணிக்கே குறைந்தளவு (பக்.14)

# புத்திஜீவிகளின் மௌனம் மாற்றங்களைக் கொண்டுவராது

• லத்தீப் பாரூக்



சுமார் ஐந்து வருடங்களுக்கு முன் நான் எழுதிய ஒரு கட்டுரையில் அகில இலங்கை ஜம்மிய்யத்துல் உலமாவில் (உலமா சபை) காலத்துக்கு ஏற்ற மாற்றங்கள் செய்யப்பட வேண்டிய தேவையை வலியுறுத்தி இருந்தேன். ஆனால் எதிர்ப்பார்த்தபடியே சமூகம் அதில் வித்தியாசமான கருத்துக்களையே கொண்டிருந்தது.

அடிப்படை உரிமைகளை முடக்குவதற்கு பாரம்பரிய மரபுகளை காரணம் காட்டும் சமயத் தலைவர்களை முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டங்களை திருத்தக் கூடியவர்களாக நம்ப முடியாது என்று மகளிர் செயற்பாட்டு வலையமைப்பு (WAN) தெரிவித்துள்ளது. இலங்கையில் முஸ்லிம் பெண்களும் சிறுவர்களும் இரண்டாம் தர பிரஜைகள் அல்ல என்பதை அரசாங்கம் ஊர்ஜிதம் செய்ய வேண்டும் என WAN வலியுறுத்தியுள்ளது. எவ்வாறேனும் WAN இன் கரிசனையானது முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டம் அடிப்படை உரிமைகளோடு ஒத்துப் போகவில்லை என்பதே. இருந்தாலும் அவர்கள் அதில் உள்ள குறைகளைக் குறிப்பிடவில்லை. அது இஸ்லாத்துக்கு எதிரானதாகக் கூட இருக்கலாம்.

உலமா சபையின் கூற்று அது மறுசீராக்கம் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்காமை என்பன ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்தின் நலன்களையும் பேணும் ஒரு அமைப்பாக உலமா சபை தன்னை உரிமை கோர முடியாது என்பதையே தெளிவாக்கியுள்ளது. சட்ட ரீதியான மறுசீரமைப்புக்களில் உலமா சபையின் மிகத் தீவிரமானதும் விடாப்பிடியானதுமான நிலைப்பாடானது அவர்கள் தமது நிலைப்பாடுகளில் எந்தளவு மந்த நிலையில் இருக்கின்றார்கள் என்பதையே காட்டுகின்றது.

தமது சொந்த சமூகத்தின் நம்பிக்கைகளையும் அபிமானத்தையும் வெல்ல முடியாதவர்கள் சாதகமான மாற்றங்களைக் கொண்டு வருவதற்காக பணியாற்றும் ஒரு குழுவில் இருந்து நீக்கப்பட வேண்டியவர்கள் என்பதே WAN இன் நிலைப்பாடாகும்.

> முஸ்லிம் தனியார் சட்டத்தை உருவாக்கிய எமது முன்னோடிகள் அதை மிகவும் சரியான ஒன்றாக ஆக்குவதற்கு பெரும் முயற்சிகளை எடுத்துள்ளனர் என்பதே அவர்களின் நிலைப்பாடாகும். அன்றைய காலப்பகுதியை பொருத்தமட்டில் அது மிகச் சரியானதாகவே இருக்கலாம். அவை இன்று மறுசீரமைக்கப்படக் கூடாது அல்லது அவ்வாறான தேவை அற்றது என்பதோ இதன் அர்த்தம் அல்ல.

முஸ்லிம் தனியார் சட்ட மீளாய்வு பற்றி ஆராயும் குழுவின் தலைவரான முன்னாள் உச்ச நீதிமன்ற நீதியரசர் சலீம் மர்சூப் இந்த விடயத்தில் உலமா சபையின் நிலைப்பாடு பற்றி குறிப்பிடுகையில் உலமா சபை மக்கள் அதன் மீது கொண்டிருந்த நல்ல நம்பிக்கைக்கு மாறாக செயற்பட்டு விட்டனர். இந்தக் குழுவின் செயற்பாடுகளை முடக்குவதற்கு அவர்கள் தமது எல்லா வளங்களையும் பயன்படுத்தி உள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

இந்தக் குழுவின் உறுப்பினர்கள் மீது உலமா சபை கடும் தாக்கத்தைக் கொண்டிருந்தது. 2009ல் நீதி அமைச்சால் நியமிக்கப்பட்ட முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டம் பற்றி மீளாய்வு செய்யும் குழுவில் உலமா சபை தலைவர் றிஸ்வி முப்தியும் முபாரக் மௌலவியும் உறுப்பினர்களாக உள்ளனர்.

சில தகவல்களின் படி உலமா சபை பிரதிநிதிகள் குழுவொன்று சகல முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்துள்ளது. இது சம்பந்தமான குழுவின் இரகசியப் பார்வைக்கும் மீளாய்வுக்குமாக என்னால் தயாரிக்கப்பட்ட ஆவணம் உட்பட பல ஆவணங்களை அவர்கள் கையளித்துள்ளனர். இது பற்றி பேஸ்புக் வழியாகவும் கருத்துக்கள் கோரப்பட்டுள்ளதாக சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

பதில் பிரதம நீதியரசராகக் கூட கடமையாற்றிய அனுபவம் உள்ள சட்ட மேதையான முன்னாள உச்ச நீதிமன்ற நீதியரசர் உலமா சபை தனது குழுவின் நடவடிக்கைகளை முடக்குவதற்கு தனது வளங்கள் அனைத்தையும் பயன்படுத்தியதாகத் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் தனியார் சட்டத்தில் எந்தவொரு திருத்தங்களும் கொண்டு வரப்படுவதை ஆட்சேபிக்கும் வகையில் ஜும்ஆ பிரசாரங்களும் கையெழுத்து பிரசாரங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அது இறைவனிடமிருந்து கிடைக்கப் பெற்ற சட்டம் என்ற ரீதியில் தான் இந்த எதிர்ப்புக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இதனால் எனது குழுவில் உள்ள சில உறுப்பினர்கள் ஒரு வகை அச்சத்துக்கு ஆளாகியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான விரிவான ஒரு கட்டுரையில் பத்திரிகை எழுத்தாளர் அமீனா ஹுஸேன் இது பற்றிய விரிவான விளக்கங்களை வழங்கியுள்ளார். இந்த விடயம் தொடர்பாகவே அல்லது முஸ்லிம் தனியார் சட்டத்தில் மேற்கொள்ளக் கூடிய ஏனைய சீராக்கங்கள் பற்றியோ எந்தவொரு முடிவுக்கும் வரக் கூடிய அதிகாரம் தனக்கே உள்ளது போன்ற ஒரு பிரகடனத்தை உலமா சபை செய்துள்ளது போல் தெரிகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

(பக்.13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL

49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## மூன்றாவது சக்திக்கான சரியான தருணம்

கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது தகுதியானவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்புங்கள் என்று பல தடவைகள் சமூகத்தை மன்றாடிய போதும், அதற்குச் செவிசாய்க்காததன் விளைவை சமூகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. முஸ்லிம் கட்சிகளின் சார்பில் வாக்குக் கேட்டு பாராளுமன்றத்துக்கு அனுப்பப்பட்டவர்கள் எல்லோருமே முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகள் என்ற தகைமையை இழந்து விட்டார்கள்.

இயற்கை அனர்த்தங்களின் பின்னர் சேதமடைந்த இடங்களைப் பார்வையிடச் செல்பவர்கள் போலத்தான் கிந்தோட்டை கலவரத்தின் பின்னர் இவர்கள் களத்துக்குச் சென்றார்கள். நானும் வெளியேற்றப்பட்டவன் தான் என்று மார்தட்டிக் கொள்பவர்களாவது கால்நூற்றாண்டு கால முஸ்லிம்களின் மீள்குடியேற்றப் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத் தர முயற்சிக்கவில்லை. வர்த்தமானி அறிவித்தல் மூலம் முஸ்லிம்களின் காணிகள் பறிக்கப்பட்ட போது இந்த முஸ்லிம் தலைவர்கள் எல்லாரும் பாராளுமன்றத்தில் தான் இருந்தார்கள். என்றாலும் அதனைத் தடுப்பதற்கு அவர்கள் முயற்சிக்கவில்லை.

எல்லை நிர்ணயம், வட்டாரப் பிரிப்பு, புதிய தேர்தல் முறை, மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தம் என முஸ்லிம்களுக்குப் பாதகமான பல சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட போதும் இவர்கள் முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகளாக இருந்து அவற்றை எதிர்க்கவில்லை. மாறாக, அரசாங்கத்தின் எடுபிடிகளாக இருந்து அவற்றையெல்லாம் அவர்கள் ஆதரித்தார்கள். உத்தேச அரசியல் யாப்பு வரையப்பட்டபோது கூட முஸ்லிம்களின் பிரச்சினைக்கான தெளிவான தீர்வொன்றை இவர்களால் முன்வைக்க முடியவில்லை.

இந்த நிலையில் அரசாங்க சொகுசுகளில் கண்ட சுவையினால் மீண்டும் பல இடங்களில் அரசாங்கத்துடன் இணைந்து மக்களிடம் வாக்குக் கேட்கும் நிலைக்கு தனித்துவக் கட்சிகள் தள்ளப்பட்டிருக்கின்றன. இவர்கள் அமைக்கின்ற எந்தக் கூட்டும் சமூகத்தின் நன்மைக்கானதல்ல என்பதனை அவர்களே தமது கடந்த காலச் செயற்பாடுகளின் மூலம் நிரூபித்துவிட்டார்கள்.

இனியும் அரசியலுக்கூடாக சமூகத்தின் விடிவை முஸ்லிம் சமூகம் நாடுவதாக இருந்தால் அதனை சோரம் போன இந்த அரசியல் தலைமைகளிடம் எதிர்பார்க்க முடியாது. இந்த நேரத்தில்தான் முஸ்லிம் அரசியலுக்கான மூன்றாவது சக்தியின் தேவை வெகுவாக உணரப்படுகிறது. முஸ்லிம் சமூகத்துக்கென அர்ப்பணித்து உழைக்கின்ற, அதனுடைய விடிவையே இலக்காகக் கொண்ட, சமூகத்தை அடகு வைத்து பிழைப்பு நடத்தாத தூரநோக்குடன் சமூகத்தை வழிநடத்திச் செல்லக் கூடிய அரசியல் இயக்கம் ஒன்று, அரசியல் கட்சிகளுக்கு அப்பால் இருந்து பரிணமிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாக மாறியிருக்கிறது.

நாட்டில் நல்லாட்சியொன்றை விரும்பும் மக்கள் இந்த மூன்றாவது சக்தியை நோக்கி முன்னணியில் இருந்து உழைப்பது தான் சமூகத்தின் விடிவுக்கான இறுதி எதிர்பார்ப்பாக அமைய முடியும். இந்த முறைய உள்ளூராட்சித் தேர்தலை சமூகம் அதற்கான ஆரம்பமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்திபடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல : 96, கிருல வீதி, கொழும்பு - 05
தொலைபேசி : 011-5353635
பெக்ஸ் : 011-5335500
ஈமெயில் : srockwood@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

# வில்பத்து எனும் போர்வையில் முன்னெடுக்கப்படும் இனவாதம்

• ரேகா நிலுக்ஷி ஹேரத்

"இப்பெறுமதியான சூழல் கட்டமைப்பில் பழைய மறிச்சுக்கட்டி எனும் சிறிய கிராமத்தை காண்பித்து, அதற்கருகில் உள்ள வில்பத்து வனசரணாலயத்தில் ஆயிரக் கணக்கிலான ஏக்கர் நிலங்களை அழித்து, அரபு நாடுகளின் உதவியில் வீட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன."

கடந்த டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி வில்பத்துவை பாதுகாப்போம் எனக்கூறி விகாரமகாதேவி பூங்காவுக்கு அருகில் நடைபெற்ற பாரியதொரு ஆர்ப்பாட்டத்தின்போது பகிர்ந்தளிக்கப்பட்ட துண்டுப் பிரசுரத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்வார்ப்பாட்டத்தில் ரவீந்திர ரண்தெனிய, ஸ்ரீயந்த மெண்டிஸ் உள்ளிட்ட புகழ்பெற்ற சிங்களக் கலைஞர்களும் கலந்து கொண்டிருந்தனர். அத்துடன் பெரும்பாலான சூழலியலாளர்களும் பங்குபற்றியிருந்தனர். இவ்வார்ப்பாட்டத்தின் நோக்கம் காடுகளைப் பாதுகாப்பதா? அல்லது இனவாதத்தை மூட்டுவதா? என்பது பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இவ்வெதிர்ப்பு நடவடிக்கையில் சூழல் பற்றுள்ளவர்களும் இனவாத மனப்பான்மையற்ற பலரும் பங்குபற்றியிருந்தனர் என்பது உண்மை. எனினும் அத்தகைய சூழலியலாளர்களது சூழல் பற்றுகளையும் விஞ்சும் வகையில் இனவாத நோக்கம் படைத்தோரின் செயல்பாடுகளே அதிகளவில் மேலெழுப்பப்பட்டன.

"வில்பத்துவில் ஒரு லட்சம் ஏக்கரைக் கோரும் சூழல் பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கு பத்து லட்சம் தேசப்பற்றாளர்களை கொண்ட அமைப்பில் நாமும் ஒன்றிணைந்தோம். நீங்களும் ஒன்றிணையுங்கள்" வில்பத்துவை பாதுகாக்கும் தேசிய அமைப்பு கடந்த 14ஆம் திகதி தமது எதிர்ப்பு நடவடிக்கை குறித்து மேற்போந்த வகையில் அழைப்பு விடுத்திருந்தது.

'பயங்கரவாதம்', 'தேசப்பற்று' போன்ற வசனங்கள் இணையும் போதே அதன் உண்மையான நோக்கம் தெளிவாகிறது. 'அரேபிய' நாடுகளின் உதவி, 'விகாரமகாதேவியில் புத்தர் சிலை' என்கின்ற வசனங்கள் பயன்படுத்தப்படும் போது அதன் உண்மையான குறிக்கோள் சூழல் பற்றாக இருக்குமா? அல்லது வேறு நோக்கமொன்றாக இருக்குமா? என்பதை ஊகித்துக்கொள்ள முடியும்.

அத்துடன் இந்நூற்றாண்டின் மிகப்பெரும் அழிவொன்றாக வில்பத்து காடழிப்பு தொடர்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. வில்பத்து காட்டிலிருந்து ஒரு லட்சம் ஏக்கர் நிலம் கோரப்பட்டுள்ளதாக தெரிவித்தாலும் அவ்வகையில் எவ்வித வேண்டுகோள்களும் விடுக்கப்படவில்லை. உண்மையில் அது காடழிப்பை பன்மடங்கு அதிகரித்துக் காண்பிக்கும் விடயங்களாகும்.

இலங்கையில் இடம்பெறுகின்ற ஏனைய சூழல் அழிவுகளை விட வில்பத்து காடழிப்பை இந்நூற்றாண்டின் மிகப்பெரும் அழிவொன்றாகக் காண்பிப்பதன் மூலம் தெளிவாகவே திட்டமிடப்பட்ட இனவாத நடவடிக்கையொன்றாகவே இவ்விடயம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பது தெளிவாகின்றது.

வில்பத்துவில் காடழிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுவதற்கு எதிராக கிளர்ந்தெழ வேண்டும் என்பது முக்கியமானது. எனினும் அதை விட பாரிய அளவில் இடம்பெற்றுள்ள காடழிப்புக்கள் தொடர்பில் ஏன் குரல் எழுப்புவதில்லை? அவை தொடர்பில் ஏன் மௌன நிலைப்பாட்டில் உள்ளார்கள்? அண்மைக்காலத்தில் இடம்பெற்றுள்ள அத்தகைய மிகப்பாரிய சூழல் அழிவுகள் யாவை?

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அண்மைக் காலத்தில் மிகப்பாரியளவில் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. மத்தளை விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்கு வனப்பாதுகாப்பு திணைக்களத்திற்குச் சொந்தமான 5000 ஏக்கர் நிலம் அழிக்கப்பட்டுள்ளது. வனப்பாதுகாப்பு திணைக்களத்திற்குச் சொந்தமான காட்டின் மத்திய பகுதியும் யானைகள் சஞ்சரிக்கும் இடமும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

மாகம்புர துறைமுகம், சூரியவெவ விளையாட்டு மைதானம், மிரிஜ்ஜவில முதலீட்டு வலயம், ... நிலையம் உள்ளிட்ட திட்டங்களுக்கு சுமார் 10,000 ஏக்கர் அளவிலான காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இக்காடழிப்பு ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் யானை மனித போராட்டங்கள் உக்கிரமடைவதற்கும் காரணமாக அமைந்துள்ளது.

கருவலங்காலிக் குளம் எனும் போகஸ்வெவ காடழிப்பு அண்மைக் காலத்தில் இடம்பெற்ற மிகப்பெரும் சூழல் அழிவு என அடையாளப்படுத்தலாம். வில்பத்துவில் இடம்பெற்றுள்ள காடழிப்பை விட கருவலங்காலிக் குளம் காடு மிகப்பாரிய அளவில் அழிக்கப்பட்டுள்ளமைக்கான ஆதாரங்கள் உள்ளன. வில்பத்து வனப்பகுதியுடன் இணைந்ததாக உள்ள காடுகளில் இடம்பெற்றுள்ள அழிவுகளை போலல்லாமல் கருவலங்காலி குளம் பிரதான காட்டின் நடுப்பகுதியிலேயே அழிவுகள் இடம்பெற்றுள்ளன. இங்கு குடியமர்த்தப்பட்டிருப்பவர்கள் சிங்களவர்கள் என்பதால் அக்காடழிப்பு குறித்தோ அல்லது அக்காட்டை பாதுகாப்போம் என்பது தொடர்பிலோ எவரும் குரல் எழுப்புவதில்லை.



ஆந்துகுளம் வனசரணாலயத்திற்குட்பட்ட 60,000 ஏக்கர் நிலம் மஹாவலி எல் வலயம் என பெயரிடப்பட்டு அரசியல் ஆதரவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அது மிகப் பாரியதொரு காடழிப்பு. இதுதவிர, சுற்றுலாத்துறை திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக சிங்ஹராஜ, யால, குமண போன்ற காடுகளும் அழிக்கப்பட்டு வருவதால் அவையும் பாரிய ஆபத்துக்களை எதிர்நோக்கியுள்ளன. ஹோர்டன்தென்ன வனசரணாலயமும் பாரிய அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது. இதுதவிர பதுளை ஹல்தும்முள்ளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பலஹெர, அபபொல பிரதேசத்தில் 1000 ஏக்கர் நிலம் ஹப்புதளை பிரதேச அரசியல்வாதியொருவரின் தலைமையில் அழிக்கப்பட்டு வருவதுடன், இன்னும் 500 ஏக்கர் நிலப்பகுதி ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த அரசியல் தலைவரொருவரின் தலைமையில் அழிக்கப்பட்டு வருகிறது.

நில்கல வனப்பகுதியில் 505 ஏக்கர் நிலம் அரசியல்வாதியொருவரின் ஆதரவாளர்களால் அழிக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் நாம் பல தடவைகளில் எழுதியும் உள்ளோம். வில்பத்து வன சரணாலயமும் அழிந்து கொண்டு வருகிறது. அதற்கெதிராகப் போராட வேண்டும். வில்பத்துவைப் பற்றிக் கதைக்காமல் இவை பற்றி கதைக்குமாறு நாம் கூற வரவில்லை. ஆனால் காடழிப்புக்கு எதிரான போராட்டமாக அல்லாமல் வில்பத்து தொடர்பில் மாத்திரம் கதைப்பதும், கிளர்ந்தெழுவதும் இனவாத அவசியமொன்றிற்காகவேயன்றி சூழல் தொடர்பில் உள்ள பற்றினாலல்ல.

சுற்றாடல் மற்றும் இயற்கை வள கற்கைகள் நிலையத்தின் ஏற்பாட்டாளர் கலாநிதி ரவீந்திர காரியவசம் வில்பத்து எதிர்ப்பு இனவாதப் போராட்டமாக முன்னெடுக்கப்பட்டு வருவது குறித்து நல்ல பல கருத்துக்களை தெரிவித்துள்ளார். இவ்வெதிர்ப்பு நடவடிக்கை குறித்து அவர் வெளியிட்டிருந்த காணொளியை வெறும் 500 பேர் மாத்திரமே பார்வையிட்டுள்ளனர். இத்தகைய கருத்துக்களுக்குப் பதிலாக சமூக வலைதளங்களில் இனவாதக் கோஷங்கள் பரவும் வேகம் அதிகமாகும். அவர் எம்மிடம் தெரிவித்த கருத்துக்கள் பின்வருமாறு:

"வில்பத்து தேசிய வன சரணலாயம் அழிக்கப்படுவது தொடர்பில் நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற எதிர்ப்புக்கள் நியாயமானவை. வில்பத்து வனப்பகுதியின் உள்ளகப் பகுதி அழிந்து வருவதே அதற்கான காரணம். அது மிக நீண்டகாலமாக இடம்பெற்று வரும் விடயம். ஆனால் இவ்வழிவுகளுக்கு அமைச்சர் ரிசாத் பதியுதீன் மாத்திரம் பொறுப்பல்ல என்பது எமது கருத்து. காரணம், அவர் தற்பொழுது தேசிய பௌதிக திட்டத்தையே அமுல்படுத்திக்கொண்டுள்ளார்.

சுற்றாடல் அமைச்சரும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரே இதன் குற்றவாளிகள். இவ்வெதிர்ப்பு உலக வங்கித் திட்டத்திற்கேயன்றி அமைச்சர் ரிஷாதை மாத்திரம் அடிப்படையாக கொண்டுக் அமையக்கூடாது என்பதே எமது நிலைப்பாடு. பதியுதீனும் நிரபராதியல்ல. அவரும் காட்டில் ஒரு பகுதியை சுற்றுலா ஹோட்டல்களை நிர்மாணிப்பதற்கும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களுக்கும் அழித்து வருகின்றார்.

வில்பத்து தேசிய வன் சரணாலயத்தையும் ஏனைய வனப்பகுதிகளையும் பாதுகாக்காமல் இருப்பதற்கு எதிராகவே நாம் போராட வேண்டும். நாம் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக மாத்திரம் கதைப்பதாக இருந்தால் இதற்கு உண்மையாகவே பொறுப்புச் சொல்லக் கூடியவர்களை நாம் கைவிட்டுவிடுகின்றோம் என்பது அர்த்தம். நாம் பதியுதீனுக்கு மாத்திரம் எதிர்ப்பு தெரிவித்தால் நாம் இதை இனவாதப் போராட்டமாக மாற்றுகின்றோம் என்பது அர்த்தம். ஒட்டுமொத்த காடழிப்புக்கு எதிராகவே எமது போராட்டம் அமைய வேண்டுமே தவிர பதியுதீனுக்கு எதிராக மாத்திரம் அது முன்னெடுக்கப்படக் கூடாது என்பதே எமது நிலைப்பாடு."

ரவீந்திர காரிவசம், சஜீவ சாமிகர போன்ற சூழலியலாளர்கள் சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்ற முனைப்பில் வில்பத்து வனப்பகுதி உள்ளிட்ட நாட்டின் ஏனைய வனப்பகுதிகள் அழிக்கப்படுவதற்கு எதிராக குரலெழுப்பி வரும் நிலையில் இனவாத நோக்கத்திற்காக மாத்திரம் சூழலைப் பாதுகாக்க வேண்டும் எனப் போராடுவது ஒரு தெளிவான இனரீதியிலான போராட்டமொன்றாக மாற்றப்பட்டு வருகின்றது.

நாட்டின் பெரும்பாலானவர்களினது ஆதரவு கிடைக்கின்ற, பாரிய ஊடக நிறுவனங்கள் மற்றும் வியாபாரிகளிடமிருந்து ஒத்துழைப்பு பெற்று முன்னெடுக்கப்படுகின்ற வில்பத்து எதிர்ப்பு நடவடிக்கைகளை கைகளால் தடுத்து நிறுத்தும் சக்தி எமக்கில்லை. அதற்கெதிராக சிறியதொரு குரலை மாத்திரமே எமக்கு எழுப்ப முடியும். ஆனாலும் இவ்வனைத்து நடவடிக்கைகளும் ஒரு மிகப்பெரும் அழிவை நோக்கி இட்டுச்செல்லலாம் என்கின்ற எச்சரிக்கையை எமக்கு விடுக்கலாம்.

வனஜீவராசிகளையும், வனவளங்களையும் பாதுகாக்க வேண்டும் எனக்கூறி ஆரம்பிக்கப்படுகின்ற இவ்வெதிர்ப்பு நடவடிக்கைகள் நாட்டில் ஓரிடத்தில் உள்ள வனஜீவராசிகளையும், வனவளங்களையும் பாதுகாக்க வேண்டும் என்பதாகப் பரிணமிக்கும் போது இறுதியில் அது மிருகங்களது பாதுகாப்பு எப்படிப் போயினும் பல மனித உயிர்களை காவுகொள்வதற்கு அடிப்படையாக அமையுமோ என்கின்ற அச்சம் எமக்குள் ஏற்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊமை ஊரைக் கெடுக்கும்

## அதி மேதகு ஜனாதிபதிக்கு இலங்கை பிரஜை ஒருவர் எழுதும் மடல்



றவூப் ஸெய்ன்



> ஒரு முறை மாத்திரமே பதவி வகிப்பேன் என்று பகிரங்கமாய்ச் சொன்ன வார்த்தைகள் பொய்ப்பட்டு வருவதாகவும் கேள்வி. யாராக இருந்தாலும் தவறு செய்தவர்களைத் தண்டிப்பேன் என்று அன்று தேர்தல் மேடையில் பேசிய வார்த்தைகளுக்கு என்ன நடந்தது? அவை காற்றில் கரைகின்றதே.

மேதகு ஜனாதிபதி அவர்களே! முதலில் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். தேர்தல் திருவிழாவில் வெற்றி வாகை சூட பொருட்களின் விலையைக் குறைக்க வேண்டும் என்று தீர்மானம் எடுத்துள்ளீர்கள். உங்களுக்கு வாழ்த்தும் சொல்ல வேண்டும். சுதந்திரத்திற்குப் பிந்திய ஏழு தசாப்தங்களில் வெளிநாடு ஒன்றிடமிருந்து மிகப் பெருந்தொகை பெறுமதியான காசோலை ஒன்றைப் பெற்றுள்ளீர்கள். ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கான 29 கோடி டொலர்களுக்கான காசோலை உங்கள் நல்லாட்சி அரசாங்கத்துக்கே கிடைத்துள்ளது. இரண்டாவது; சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாம் கட்டக் கடனும் மிக விரைவில் உங்களுக்குக் கிடைத்து விடும்.

இவை எல்லாவற்றையும் தாண்டி, உங்களின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டிய சில முக்கிய விடயங்கள் உள்ளன. தேர்தல் முடிந்த கையோடு மக்களால் நிராகரிக்கப்பட்ட ஊழல் பேர்வழிகளுக்கு உங்கள் ஆட்சியில் அமைச்சர் பதவி வழங்கினீர்கள். அதிலும் முன்னைய ஆட்சியின் திருட்டுக் கூட்டம் முக்கிய பதவிகளில் அமர்த்தப்பட்டது. ஜனவரி தேர்தலில் 6.2 மில்லியன் மக்கள் உங்களுக்கு வாக்களித்தது பழைய திருடர்களைப் பிடித்து வந்து அமைச்சரவையில் அமர்த்துவதற்கா?

சட்டத்தின் ஆட்சியை விட, தேசிய நலன்களை விட, நீதியை நிலைநாட்டுவதை விட, கொள்ளையிடப்பட்ட கோடிகளை மீட்டி தேசத்தைக் கட்டியெழுப்புவதை விட உங்களுக்கு கட்சி தான் இன்று முக்கியமாகியுள்ளதேன்? பசிலை தொலைபேசியில் தொடர்பு கொண்ட நீங்கள், ''ஏன் என்னோடு பேசுவதில்லை'' என்று அன்பு ததும்ப உரையாடி கட்சியை ஒன்றிணைக்க படாத பாடுபடுவதேன்?

Out Gota, together for all என்ற வாசகம் பொறிக்கப்பட்ட விளம்பரப் பதாகைகள் எல்லா இடங்களிலும் ஒட்டப்படுகின்றன. பழைய படை வீரர் ஒருபோதும் இறப்பதில்லை. ஆனால், கோத்தாவின் புகழ் கூட இன்னும் மங்கவில்லை. என்ன அதிசயம்! பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் கோத்தாவை கைதுசெய்யாது தடுப்பதும் நீங்கள்தான் என்று வதந்தி பரவுகின் றது உண்மையா?

ஒரு முறை மாத்திரமே பதவி வகிப்பேன் என்று பகிரங்கமாய்ச் சொன்ன வார்த்தைகள் பொய்ப்பட்டு வருவதாகவும் கேள்வி. யாராக இருந்தாலும் தவறு செய்தவர்களைத் தண்டிப்பேன் என்று அன்று தேர்தல் மேடையில் பேசிய வார்த்தைகளுக்கு என்ன நடந்தது? அவை காற்றில் கரைகின்றதே.

இளம் சுஜீவ உங்களைக் கடுமையாக விமர்சிப்பதாக பொது மேடைகளில் அங்கலாய்க்கிறீர்கள். விமர்சிக்கும் ஐ.தே.கட்சிக்காரர்களை பிரதமர் தான் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறீர்கள். ஆனால், இளம் சுஜீவ கேட்கும் ஒரு நியாயமான கேள்வி உண்டு. மிகுந்த உற்சாகத்துடனும் வீராவேஷத்துடனும் மத்திய வங்கியின் பிணைமுறி ஊழல் விசாரணைக்காக ஜனாதிபதி ஆணைக் குழுவை நியமித்த நீங்கள், கடந்த ஆட்சியில் எல்லை மீறிய ஊழலில் ஈடுபட்ட குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கும் கொள்ளையிடப்பட்ட கோடிகளை மீட்பதற்கும் நியமித்த ஆணைக் குழுக்கள் எங்கே?

நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவு என்பது அரைவாசி அறுபட்ட கோழிக்கு ஒப்பானது. அது கலைக்கப்பட்டு வட்டதாகவும் ஒரு செய்தி. தேர்தல் மேடையில் முழங்கிய கோஷங்கள் எங்கே? அதே ஊழல் பேர்வழிகளை இணைத்துக் கொண்டு கட்சியைக் காப்பாற்ற முயலும் நீங்கள், உங்கள் வாக்குறுதிகளுக்கு மாறு செய்கிறீர்கள் என்பதை உணர்கிறீர்களா?

ரவி கருணாநாயக்க பதவி விலக்கப்பட்டபோது எதிரணியினர் -அதாவது மஹிந்த பக்தர்களும் முன்னாள் ஆட்சியாளர்களும் இதே கதி தமக்கும் நேரும் என்பதை எதிர்ப்பார்த்திருங்கள் என்று எச்சரிக்கை செய்தீர்கள். அப்போதெல்லாம் நாம் உங்களை நம்பியிருந்தோம். ஆனால், நீங்கள் எவ்வளவு பெரிய வாய் வீரர் என்பதை இப்போது உணர்கிறோம்.

உங்களது இன்றைய பதவிக் காலத்தில் சட்டத்தின் ஆட்சிக்கு என்ன நடந்தது? முன்னாள் ஆட்சியாளர்கள் -குறிப்பாக பசில் மற்றும் கோத்தா போன்றவர்கள் தமக்கெதிரான வழக்குகளை தாம் விரும்புகின்ற நீதிமன்றங்களிலேயே விசாரிக்க வேண்டும் என்று எண்ணி, அவர்களது விருப்பப்படியே நீதிமன்றங்களையும் தேவைப்பட்டால் நீதிபதிகளையும் மாற்றிக் கொள்கிறார்கள். இதுதான் சட்டத்தின் ஆட்சியா?

மஹிந்த ராஜபக்ஷவும் அவருடன் இருந்த 40 பேரும் வெளியில் சுதந்திரமாய் சுற்றிவர, ராஜபக்ஷவின் செயலாளரை அதிரடியாகக் கைதுசெய்ததுதான் உங்கள் சட்டத்தின் ஆட்சியா? திமிங்கிலங்களை விட்டு விட்டு, சின்ன மீன்களை சிக்க வைப்பதுதான் ஜனநாயகமா?


முன்னாள் ஆட்சியில் எத்தனை திருகுதாழங்கள், எத்தனை தகிடுதத்தங்கள், எத்தனை திருட்டு உபாயங்கள் அவற்றையெல்லாம் விசாரணைக்குக் கொண்டு வருவேன் என்று வீர முழக்கம் விசும்பிய நீங்கள், இன்று பெட்டிப் பாம்பு போல் அமைதியடைந்ததன் அர்த்தம் என்ன?

உங்கள் நல்லாட்சியில் தேர்தல் வாக்குறுதிகள் ஒன்றுமே நிறைவேறவில்லையே என்று பத்திரிகையாளர் ஒருவர் கேள்வியெழுப்பியபோது, நீங்கள் தந்த பதில் உங்கள் மீதான நம்பிக்கையை சிறுகச் சிறுக சாகடித்தது.

2016 நவம்பர் 06 இல் சண்டே டைம்ஸ் பத்திரிகைக்கு நீங்கள் வழங்கிய செவ்வியொன்றில், ''உங்கள் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லையே'' என்றும் ஊழல் விசாரணைகளை பத்திரிகையாளர் நினைவுபடுத்தியபோது, ஆம், சீரியஸான வழக்குகள் குறித்து எதுவும் நடக்கவில்லை. சின்னச் சின்ன விடயங்கள் குறித்து அலட்டிக் கொள்கிறார்கள் என்று கூறினீர்கள்.

அதில் சீரியஸான சம்பவங்கள் என எதைக் கருதுகிறீர்கள் எனக் கேட்கப்பட்டபோது,

''டுபாய் வங்கியில் பணம் வைப்பிலிடப்பட்ட விசாரணை அவற்றில் ஒன்று. அந்த விசாரணை நின்று விட்டது. எவென் கார்ட் மிதக்கும் ஆயுதக் கப்பல் விசாரணை நின்று விட்டது. இது குறித்து அரசாங்கப் புலனாய்வு அறிக்கை தெளிவற்றதாக உள்ளது. கப்பலில் இருந்த ஆயுதங்கள் எத்தனை என்ற தகவல் அரசாங்க அறிக்கையில் நீக்கப்பட்டுள்ளது. நான் கேள்விப்பட்ட வகையில் இப்போது அப்படியொரு வழக்கு இருப்பதாகத் தெரியவில்லை. தாஜுதீனின் கொலைச் சம்பவமும் விசாரிக்கப்பட்டு வந்தது. அதுவும் அவ்வாறே அமுக்கப்பட்டது. MIG 27 விமானக் கொள்வனவு குறித்த விசாரணை கிடப்பில் போடப்பட்டுள்ளது. இப்படி எனக்கு அதிக



சம்பவங்களைக் குறிப்பிடலாம்'' என்று நீங்கள் பதிலளித்தீர்கள்.

அப்படியானால் சுஜீவ கேட்கும் கேள்வி நியாயமானதுதான். நீங்கள் பதவியேற்று மூன்று ஆண்டுகள் நிறைவடையும் இத்தருணத்தில் நாம் சொல்ல வேண்டிய ஒரு உண்மையுள்ளது. ''துஷ்பிரயோகம் செய்கின்ற சர்வதிகாரிகளிடம் நிறைவேற்று அதிகாரம் இருப்பதும், அதிகாரத்தை பிரயோகிக்கத் தெரியாதவர்களிடம் அதிகாரம் குவிந்து கிடப்பதும் ஒன்றுதான்.''

சோபித தேரர் உங்கள் தேர்தல் மேடையில் இருந்து முழங்கிய முக்கிய கோஷம், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்போம், அதற்காகவே நாம் மைத்திரியை தெரிவுசெய்துள்ளோம் என்பதாகும். அது உங்களுக்கு நன்றாக நினைவிருக்கும். ஆனால், மூன்றாண் டுகளுக்குள் அதனை வசதியாக மறந்துள்ளீர்கள் போலவே தோன்றுகிறது. நீங்களும் உங்கள் பிரதமரும் சோபிதவும் சேர்ந்து வரைந்த 100 நாள் வேலைத் திட்டத்தில் 100 நாட்களுக்குள் ஒழிக்கப்பட வேண்டிய ஒன்றாக குறிக்கப்பட்டிருப்பது நிறைவேற்று ஜனாதிபதி முறைமை என்பது உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?

தேரரின் மறைவு குறித்த முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலியில் கலந்து [illegible]பை நிறைவேற்றுவதற்கு எம்மை நாம் அர்ப்பணிப்போம் என்று ஆவேசம் ததும்பக் கூறினீர்கள். அது வெறும் ஆவேசம் தானா அல்லது மக்களை ஆசுவாசப்படுத்தும் ஆறுதல் வார்த்தையா என்பது எங்களுக்குப் புரியவில்லை.

நாம் ஆட்சிக்கு வந்தால் வெளிநாடுகளுடன் நல்லுறவைப் பேணுவோம், ஆதரவைப் பெறுவோம் என்று பேசினீர்கள். ஆனால், உங்கள் பிரதமரின் போக்கு மஹிந்தவின் பழைய பாதையையே தெரிவு செய்வதாக உள்ளது. இலங்கையின் பௌதிக வளங்களை கண்ணாங்கொத்திப் பாம்பு போன்று கவனித்துக் கொண்டிருக்கும் ஏகாதிபத்தியங்கள் நாட்டை விழுங்கி ஏப்பமிட்டு விடுமோ என்று அஞ்சும் நிலைக்கு சிவில் சமூகம் வந்துள்ளது.

ஒன்றுக்கொன்று எதிரும் புதிருமான ஏகாதிபத்திய சக்திகள் விழுந்தடித்துக் கொண்டு இலங்கையை விழுங்கும் நிலைக்கு வந்துள்ளன. அமெரிக்கா-ரஷ்யா, அமெரிக்கா-சீனா, சீனா-இந்தியா என்று எதிராளிகளின் ஆடுகளமாக நாடு மாற்றப்படுகிறது.

முன்னைய ஆட்சியாளர்களின் பாவத்திற்கு பரிகாரம் தேடுகின்றோம் என்று கூறிக் கொண்டிருக்கும் பிரதமர், மஹிந்தவின் பழைய பல்லவியையே பாடி வருகிறார். வெளிநாட்டுக் கடன்களைத் தீர்ப்பதற்கு வெளிநாடுகளிடமிருந்து கடன்படுவதுதான் ஒரே வழியென்று நம்புகிறீர்கள். அப்படியானால் முன்னைய ஆட்சிக்கும் நல்லாட்சிக்கும் உள்ள வேறுபாடு என்ன?

உங்கள் நல்லாட்சியில் ஊழல் மோசடிகள் இடம்பெறுவதாக தேர்தல் மேடையில் உங்களால் ஊழல் பேர்வழிகள் என்று கூறப்பட்டவர்கள் இன்று குற்றம் சாட்டத் தொடங்கியுள்ளார்கள். இது குறித்து நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்? உங்கள் ஆட்சியில் குறைந்தபட்சம் பொருத்தமான, திறமையான, மக்கள் நலப் பணியில் ஆர்வமுள்ள, நாட்டு நலன் என்ற தேசபக்தியுள்ளவர்கள் தான் பொறுப்பில் அமர்த்தப்பட்டுள்ளார்களா? அந்தப் பதவி தனக்கு பாரமானது என்று கூறிக் கொண்ட நிதியமைச்சர், பெரிய சப்பாத்தை தனக்கு அணிவிப்பதாக அறிவித்துக் கொண்டே சத்தியப் பிரமாணம் செய்கிறார்.

ஆசியாவின் அதிசயம் முன்னாள் ஆட்சியாளரிடம் மட்டும் இருக்கவில்லை. இந்த ஆட்சியிலும் தொடர்கிறது. மஹிந்த பட்ட கடனை அடைப்பதற்கு மக்களிடமிருந்து அறவிடுவதற்கு மங்கள சமரவீர விஷேட வரியொன்றை அறிமுகப்படுத்தியுள்ளார். அதனை நீங்கள் சிலவேளை பத்திரிகையில் படித்திருக்கலாம். அதற்கு 'மெதமுலான வரி' என்று அவர் பெயர் குறித்துள்ளார். எத்தனை அற்புதமான வரி இது?

உங்கள் கருத்தில் ஊழல் பேர்வழிகளை விசாரிப்பதும் தண்டனைகளை நிறைவேற்றுவதும் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் கடமையாகும். அதுதான் பத்திரிகைப் பேட்டியில் நீங்கள் சொல்லியிருப்பது. அதற்கு மேலாக இவ்விடயங்களில் தான் தலையீடு செய்யப் போவதில்லை என்றும் நீங்கள் நீதித் துறையின் சுயாதீனத்திற்கு சாட்சி பகர்கிறீர்கள். உங்கள் ஜனநாயக விழுமியங்கள் பாராட்டுக்குரியவை. ஆனால், உங்கள் தலையிடா இடைவெளியை ஊழல் பேர்வழி மிக்க எதிரணியினர் பயன்படுத்தி வருவது உங்களுக்குத் தெரியாதா என்ன?

திடீரென்று உங்கள் நல்லாட்சியில் வாகனங்களுக்கான எரிபொருள் இல்லாமல் போவதேன்? (மன்னிக்கவும், இதை அர்ஜுன ரணதுங்கவிடம் தான் கேட்டிருக்க வேண்டும்.) 2020 இல் இலங்கையில் பாரிய மின்சாரப் பற்றாக்குறை ஏற்படும் என்று இலங்கை மின்சார சபை பணிப்பாளர் எச்சரிக்கிறார். புதிய மின்உற்பத்தி ஆலைகள் நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ள போதும், உயர் அதிகாரிகள் அதனை அமுல்படுத்துகிறார்கள் இல்லை என்று அவர் ஆதங்கப்படுகிறார். இது குறித்து நல்லாட்சியின் நிலைப்பாடு என்னவென்று எங்களுக்குப் புரியவில்லை.

கடந்த வார ஆங்கிலப் பத்திரிகையொன்றின் தலைப்புச் செய்தி ''கடனில் ஓடிக் கொண்டிருக்கும் இலங்கை விமான சேவை மூடப்படும் அபாயம்'' என்கிறது. இது பற்றி நாங்கள் விமான சேவை பணிப்பாளரைத் தான் கேட்க வேண்டும் போல.

இலங்கையர்களாகிய எங்களுக்கு சிங்கப்பூரைக் கட்டியெழுப்பிய ஒரு லீ குவான் கிடைக்கவில்லை என்பது துரதிஷ்டம்தான். அவரது சிந்தனைகளை இன்று அந்நாட்டில் கற்பிக்கிறார்கள். அவரது வெற்றியின் ரகசியம்; திறமையுள்ளவனிடம் பொறுப்பை பகிர்ந்தளி என்பதுதான். ஆங்கிலத்தில் இதனை Meritocracy என்பர். இலங்கையர்களாகிய எங்களுக்கு குறைந்தபட்சம் ஒரு மஹாதிரேனும் கிடைக்கவில்லை என்பதும் துரதிஷ்டம்தான். நாட்டைக் கட்டியெழுப்புவதற்குத் தேவை இனவாதமல்ல. இனத் தேசியமல்ல, மொழித் தேசியமல்ல, மதத் தேசியமுமல்ல. மாறாக பொருளாதாரத் தேசியம் (Economic Nationalism) என்றார் மஹாதிர். அதன்படியே பத்து ஆண்டுகளுக்குள் ஆசியப் புலிகளில் (Asian Tigers) ஒன்றாக மலேசியாவைக் கட்டியெழுப்பினார்.

அன்று தேர்தல் மேடையில் உங்களுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா, ''இன்று நாடு எதிர்கொண்டுள்ள சவால்களை வெற்றிகொள்வதற்கு முதுகெலும்புள்ள ஆட்சியாளர்கள் தேவை'' (This country needs rulers with backbones to take on its current challagers) என்று இன்று சூட்சுமமாகச் சுட்டுவது யாரை என்று எங்களுக்குப் புரியவில்லை.

மதிப்பிற்குரிய ஜனாதிபதி அவர்களே! நீங்கள் ஒரு லீ குவானாக, மஹாதிராக இருந்தால் மிகவும் நல்லது. எல்லாவற்றுக்கும் முன்பாக வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்ற ஒரு நல்லாட்சியாளராக நீங்கள் இருந்தால் அது அதைவிடவும் நல்லது. எங்கள் எதிர்பார்ப்புகளை அடுத்த இரண்டு ஆண்டுகளிலேனும் நிறை வேற்றுவீர்களா? இது என்னுடையது மட்டுமல்ல, இந்நாட்டு மக்கள் அனைவரினதும் ஒரே எதிர்பார்ப்பும் இதுதான். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ட்ரம்பின் தீர்மானம் நிராகரிக்கப்பட வேண்டும்

ஒரிறைவனை வழிபடும் 3 மதங்களைச் சேர்ந்த மக்கள் வசிக்கும் பொதுவான நகரமே ஜெரூஸலம். இந்நகரம் முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும், யு+தர்களுக்கும் முக்கியமானது. இஸ்ரேலின் தலைநகராக ஜெரூஸலம் அறிவிக்கப்பட்டமை தொடர்பில ஐக்கிய நாடுகள் சபை தீர்மானமொன்றை எடுத்துள்ளது. சமாதான நடவடிக்கைகளை தொடர்ந்து இந்நகரம் குறித்த தனியான முடிவுகளுக்கு வரக்கூடாது என்பதே அம்முடிவு. பெரும்பாலான நாடுகளும் இம்முடிவில் உள்ளது.

1917இல் பெல்பர் பிரகடனத்தை தொடர்ந்தே இங்கு பிரச்சினைகள் ஏற்பட ஆரம்பித்தது. பிரித்தானியா இதில் முன்னின்று செயற்பட்டது. ஐரோப்பியர்களால் தாக்கப்பட்டு வந்த யூதர்களை பலஸ்தீன் பூமியில் குடியமர்த்துவதற்கான திட்டம் அன்று முன்னெடுக்கப்பட்டது. இதன் மூலம் இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளானார்கள். பிற்பட்ட காலத்தில் ஆயுதமேந்திய காடையர்களை வைத்து பூர்வீக மக்களை விரட்டியடித்தார்கள். 2017இல் சரியாக இந்நிகழ்வுக்கு 100 வருடங்கள் பூர்த்தியாகின்றன. இன்று அமெரிக்கா உலகில் பலம் பொருந்திய நாடாக உள்ளது.

அமெரிக்காவுக்கு தலைமை வகிக்கும் ட்ரம்ப் அன்று பெல்பர் பிரகடனத்தின் போது பிரித்தானியாவின் வகிபங்கை இன்று அரங்கேற்ற முயற்சிக்கின்றார். ஜெரூஸலம் இஸ்ரேலின் தலைநகரமாக அறிவிக்கப்பட வேண்டும் என சுய முடிவெடுத்துள்ளார். தற்போது ஐ.நா. பாதுகாப்பு சபைக் கூட்டத் தொடரில் அமெரிக்கா, இஸ்ரேலை தவிர சகல நாடுகளும் இப்பிரகடனத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளன. பாப்பரசர் இப்பிரகடனத்தை நிராகரித்துள்ளார். இங்கிலாந்து சபை இத்தீர்மான்தை வன்மையாக கண்டித்துள்ளது. ஐரோப்பிய சங்கம், உலக இஸ்லாமிய அமைப்பு போன்றனவும் தங்களது எதிர்ப்புக்களை வெளியிட்டுள்ளன.

எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை இலங்கை பாராளுமன்றத்தின் சகல அரசியல் தலைவர்களும் ஒன்றிணைந்து இத்தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்க சிவில் சமூகத்துடன் ஓரிடத்தில் ஒன்றினையவுள்ளார்கள். அன்று தென்னாபிரிக்காவின் பெரும்பான்மை கறுப்பின மக்கள் தமது நாட்டிற்கு சுதந்திரத்தை பெற்றுக்கொள்வதற்கு போராடிய போது உலக நாடுகள் அவர்களுடன் இருந்தது. ஒரு சிலரே அதற்கு ஒத்துழைக்கவில்லை.

இன்று முழு உலகமும் ஓர் நிலைப்பாட்டில் உள்ளது. ஐக்கிய நாடுகள் சபையில் தொடர்ச்சியாக இவ்விவகாரம் பேசப்பட்டு வருகின்றது. ஒரு சில நாடுகளே அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் ஆதரவாக உள்ளது. டோகோ, மாசல் ஐலண்ட் போன்ற உலக அங்கீகாரமற்ற நாடுகளே அத்தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவிக்கின்றன. தென்னாபிரிக்க தலைவர்களான மண்டேலா மற்றும் டுடு போன்றவர்கள், பலஸ்தீனுக்கு விடுதலை பெற்றுக் கொடுக்கும் வரையில் தென்னாபிரிக்காவின் சுதந்திரப் போராட்டம் ஓயாது, நாம் முகம்கொடுத்ததை விடவும் அநீதியானதொரு இன ஒடுக்குமுறைக்கு இன்று பலஸ்தீன் மக்கள் முகம்கொடுத்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

இலங்கை போன்ற சிறிய நாட்டுக்கு பலம்பொருந்திய வல்லரசு நாடொன்று எமக்கு அச்சுறுத்தல் விடுத்தால் நாம் உலக நாடுகளிடம் நீதியை வேண்டுகிறோம். அது போன்றே பலஸ்தீனும் இன்று தங்களது அபிமானத்தை காப்பதற்கு உலக நாடுகளின் ஒத்துழைப்பை வேண்டுகின்றது. ஐக்கிய நாடுகள் சபை, இங்கிலாந்து சபை, பாப்பரசர் என பெரும் பட்டாளமே இதற்கெதிராக கிளர்ந்துள்ள நிலையில் நாமும் எமது பங்களிப்பை சரிவர நிறைவேற்ற வேண்டும்.

உலகின் பெரும்பான்மை நாடுகள் ஒன்றிணைந்து மேற்கொள்ளும் தீர்மானத்தை ஓரிரு நாடுகளுக்கு சிதைக்க இடமளிக்க முடியாது. இன்று சர்வதேச சமூகம் ஒரு தேசத்தை மீட்டெடுப்பதற்கு தங்களை அர்ப்பணித்திருப்பதாக ஐநா செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

எனினும் இருதரப்பும் விருப்பம் என்றால் இருநாடுகள் என்ற தீர்வுக்கு உதவுவதாக தெரிவித்திருந்தார். ஆனால் இஸ்ரேல் இரு நாடுகள் என்ற தீர்மானத்திற்கு விரும்புவதில்லை. எனவே நீதியை நிலைநாட்ட வேண்டுமெனில் ஆக்கிரமிப்பாளர்களையும் பாதிக்கப்பட்டு வருபவர்களையும் இனங்கண்டு கொள்ள வேண்டும். ஆனால் ஆக்கிரமிப்பாளர்களின் குரலுக்கே செவிமடுக்கின்றார் ட்ரம்ப். ஐக்கியநாடுகள் சபை அங்கீகரிக்காத தீர்மானத்தை உலக நாடுகளுக்கு ஏற்றுக்கொள்ளுமாறு திணிக்கிறார். இதன் மூலம் இதுவரை காலமும் அமெரிக்கா ஜன நாயகத்தின் காவல் நாயாக உலகில் தன்னை அடையாளப்படுத்திய பிம்பம் கேள்விக்குறியாகின்றது. அமெரிக்கா தொடர்பிலான நம்பகத்தன்மை சவாலுக்குட்படுகின்றது.

எனவே பலஸ்தீன மக்களின் உரிமைகளை பாதுகாக்க இலங்கையர்களாகிய நாமும் எமது பொறுப்பை சரிவர நிறைவேற்ற வேண்டும்.

# நாட்டின் வரலாற்றை மூடியுள்ள இன, மத, குலத் திரைகளை கிழித்தெறிய வேண்டும்




இலங்கைக்கு இரண்டாயிரம் வருட காலத்துக்குப் பிந்திய வரலாறு இருக்கிறது. பெரும்பாலான நாடுகளுக்குக் கிடைக்காத விஷேட தன்மை இது. இலங்கையின் இந்த நீண்ட நெடும் வரலாறு பிறந்து வளர்ந்ததெல்லாம் பௌத்த மதத்தை அடியாகக் கொண்டே அமைந்துள்ளது. இந்தப் பாரம்பரியத்தின் ஸ்தாபகர்களாகவும், அதனைப் பாதுகாத்து முன்னெடுத்துச் செல்பவர்களாகவும் பௌத்த பிக்குமாரே இருந்திருக்கிறார்கள்.

இந்த வகையில் இலங்கையின் புராதன வரலாறு பற்றி எழுதப்பட்டுள்ள அனைத்துமே பெருமளவில் மத ரீதியானதாகவும், இன்னுமொரு அளவில் இன ரீதியானதாகவும் இவற்றை விடக் குறைந்த அளவில் சாதியின் அடிப்படையில் அமைந்ததாகவுமே எழுதப்பட்டுள்ளன. பௌத்த மதத்தின் வரலாற்றை எழுதுவதே இந்தப் பாரம்பரியத்தின் நோக்கமாக இருந்துள்ளது. இப்படியாக எழுதப்பட்ட வரலாற்றின் ஊடாகத்தான் நாட்டின் வரலாறு புனையப்பட்டது. இந்த வரலாற்றில் மத, இன, சாதி என்பவற்றின் கோணத்தில் இருந்துதான் அனைத்துமே விபரிக்கப்பட்டுள்ளன.

பௌத்தம் இலங்கைக்கு வந்ததிலிருந்து சில காலம் மத ஏகாதிபத்தியம் இங்கு நிலவியது. கோத்திரங்களாகப் பிரிந்திருந்த சிங்கள இனத்தை ஒன்றுபடுத்தும் பொது அங்கீகாரம் பெற்ற காரணியாக பௌத்த மதம் அமைந்தது. இதனூடாக வர்க்க பேதம் இல்லாத பௌத்தம் ஒழிந்து, சிங்கள இனத்துக்கு அதிக இடம்கொடுக்கும் நிலை தோன்றியது.

அக்காலத்தில் இலங்கையில் குடியேறியவர்கள் அனைவரையும் சிங்களவர்களாக்கியது பௌத்தமே. பௌத்தத்தைத் தழுவிக்கொள்வதன் மூலமாக குடியேறிவர்கள் அனைவருக்கும் சிங்களவர்களாக முடிந்தது. இந்த வகையில் சிங்களத் தனமும் பௌத்தமும் ஒன்றுடன் ஒன்று பிணைந்ததாக அமைந்தது. தேவநம்பியதீசனுக்கு பட்டாபிஷேகம் செய்து அவரை இலங்கையின் அங்கீகாரம் பெற்ற அரசனாக்கியது பௌத்த மதமே. அதனூடாக உருவாக்கப்பட்ட புத்தசாசனத்துடன் இணைந்து இலங்கையில் புத்தசாசனத்தை வழிநடத்துபவர்களாக அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மாறினார்கள்.

இதனால் இதிகாசத்தை வடிவமைத்த சிங்கள சாதிய பிக்குமார்களுக்கு, சிங்கள இனத்தின் வழித்தோன்றல்களுக்கும் கௌதம புத்தருக்கும் இடையில் உறவுமுறையிலான தொடர்பு இருந்தது என்ற கருத்தை விதைக்கும் வகையிலும், சிங்கள இனம் கௌதம புத்தரினால் தமது தர்மத்தைப் பாதுகாப்பதற்காக விஷேடமாகத் தெரிவு செய்யப்பட்ட ஓர் இனம் என்ற கருத்தை விதைக்கும் வகையிலும் இதிகாசத்தை புனைய வேண்டியிருந்தது.


இது பற்றி பீ.எச். பாமர் எழுதியிருக்கும் குறிப்பு முக்கியமானது. "சிங்களவரின் தோற்றம் பற்றிய அபூர்வமான கருத்தொன்றை மகாவம்சம் முன்வைக்கின்றது. சிங்களவர்கள் விஷேட மனித இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற நம்பவே முடியாத கருத்தை விதைப்பதற்கு அது பிரயத்தனம் செய்கிறது. சிங்கமாக இருந்த பாரதத்தின் இளவரசியொருவருக்குப் பிறந்த விஜயனைப் பற்றி இது விபரிக்கிறது. இந்த விஜயனும் அவரது பரிவாரங்களும் புத்த பெருமானின் பாதுகாப்புடன் இலங்கையில் காலடி வைத்திருக்கிறார்கள். வட இந்திய தூர தேசத்தில் தரித்திருந்த புத்த பெருமான், சக்கர தேவனை (கடவுளை) நோக்கி பின்வருமாறு வேண்டுகிறார். "சிங்கபாகுவின் மகனான விஜய குமாரனும் அவனது 700 பரிவாரங்களும் இன்று இலங்கையில் காலடி வைக்கிறார்கள். எனது (புத்த) சாசனத்தை இவர்கள் எதிர்காலத்தில் இலங்கைத் தீவில் நிறுவவிருக்கிறார்கள். ஆகவே கடவுளே, விஜயனையும் அவனது பரிவாரங்களையும் இலங்கைத் தீவையும் பாதுகாப்பாயாக".

பாமருடைய கூற்றின்படி, சிங்கள இனத்தின் தோற்றம் பற்றி மகாவம்சம் சொல்லும் கருத்து, சிங்களவரை பௌத்தத்தின் காவலர்களாகவும், இலங்கையை புத்தசாசனத்தின் நிலமாகவும் சிங்களவர் மத்தியில் நம்பிக்கையை வளர்ப்பதற்குக் காரணமாகியது. அவர் மேலும் குறிப்பிடும்போது, இஸ்ரேலியர்கள் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டிருப்பது யூத இனத்தில் எவ்வளவு தாக்கம் செலுத்தியிருக்கிறதோ, அதேபோன்றதொரு எண்ணக்கருவை சிங்களவர் மத்தியில் மகாவம்சம் விதைத்திருக்கிறது.

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பிரச்சினையில் இனம், மதம், சாதி என்ற மூன்றுமே தாக்கம் செலுத்தியிருக்கிறது. எமது வரலாற்றுப் பாரம்பரியத்திலும் இவை தாக்கம் செலுத்தியிருக்கின்றன. எமது வரலாற்றுப் பாரம்பரியம் இனவாதமானது, [illegible] நிறைந்தது. இந்த வரலாற்றில் சிங்கள இனத்துக்கு மட்டுமான [illegible] உள்ளது. இலங்கையின் தமிழ், முஸ்லிம் இனங்களுக்குரிய மத ரீதியான வரலாறு இல்லை. அதிலும் பௌத்த மதத்தின் வரலாறு மட்டும்தான் வரையப்பட்டுள்ளது. இலங்கையின் ஏனைய மதங்களுக்கான வரலாறு இல்லை. இவர்கள் அல் லாவதவர்களிடம் இருந்து எந்தப் பங்களிப்பும் பெறப்படவில்லை.

இலங்கையின் உண்மையான வரலாற்றை அறிந்துகொள்ள வேண்டியிருந்தால், இதிகாசங்களை எழுதியவர்களால் வரலாற்றில் புதைத்து வைக்கப்பட்டுள்ள இனவாத, மதவாத, குலவாதத் திரைகளை கிழித்தெறிய வேண்டும். இது இலங்கையின் வரலாற்றாசிரியர்கள் முன்னெடுக்க வேண்டிய விடயம். ஆனாலும் இதற்குத் தேவையான சரியான வரலாற்றுப் பார்வையையோ, துணிச்சலையோ எமது வரலாற்றாய்வாளர்களிடத்தில் காணக் கிடைப்பதில்லை. இதற்கெதிராக எதிர்நீச்சல் போடுவதற்கு சிலர் தயாராக இருந்தாலும், ஒட்டுமொத்தமான வரலாற்றிலும் கைவைக்கக் கூடிய துணிச்சல் இவர்களிடம் இல்லை.

வரலாறு விடயத்தில் படித்தவர்கள் வாளாவிருக்கிறார்கள். தமது நேரத்தில் பெரும்பாலான பகுதியை ஆய்வுகளிலும் எழுதுவதிலும் கழிக்கின்றவர்கள் கூட, பாரம்பரியங்களுக்குச் சவால் விடக்கூடிய துணிச்சலானவர்களாக இருப்பதைக் காண முடியவில்லை. இதனால் இலங்கையின் வரலாறு விடயத்தில் புரட்சிகரமான விடயங்களை மிக அரிதாகவே அவதானிக்க முடிகிறது.



இந்திய வரலாற்றாய்வாளர்களுடன் ஒப்பிடும் போது, இலங்கையின் வரலாற்றாய்வாளர்கள் மைல்கணக்கில் தூரத்தில் இருக்கிறார்கள். இலங்கையின் வரலாற்றாசிரியர்கள், இலங்கையின் வரலாற்றை மூடியிருக்கின்ற இனவாத, மதவாத, குலவாதத் திரையைக் கிழிப்பதற்குப் பயப்படுகிறார்கள். பௌத்தம் சாதி பேதத்தை மறுக்கின்ற மதமாக இருந்தாலும், இலங்கையில் பௌத்தர்களிடம் மட்டுமன்றி புத்தசாசனத்திலும் கூட சாதி பேதம் பாதிப்புச் செலுத்தியிருக்கிறது.

நான் ஒரு வரலாற்றாசிரியன் அல்ல, வரலாறு தொடர்பில் அக்கறை காட்டும் ஒருவன் மட்டுமே. இலங்கையின் உண்மையான வரலாற்றை மூடியிருக்கின்ற இன, மத, சாதித் திரைகளைக் கிழித்தெறிவது நாட்டின் முன்னோக்கிய நகர்வுக்கான அடிப்படை நிபந்தனை என்ற வகையிலேயே வரலாற்றின் சப்யத்வய என்ற பெயரில் இலங்கையின் சமூக, அரசியல் வரலாறு பற்றிய புத்தகமொன்றை எழுதினேன். மறுமலர்ச்சி இயக்கத்தை தோற்றுவிக்கின்ற ஆரம்ப கட்ட நடவடிக்கைகளின் விளைவாகவே எனக்கு இந்த எண்ணம் தோன்றியது. இந்த நூல் தற்போது மூன்றாவது பதிப்பாக வெளிவந்திருப்பதில் இருந்து, நிறைய வாசகர்கள் இதனைப் படித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

அநகாரிக தர்மபாலவுடைய போதனைகளி[illegible] அங்கீகரிக்கப்பட்ட வரலாற்றுப் புத்தகங்களினூடாக கற்பிக்கப்படும் பாடங்களுக்கூடாகவும், அனுராதபுர, பொலன்னறுவ நாகரிகங்கள் தான் உலகின் பழமையானதும் உயர்ந்ததுமான நாகரிகங்கள் என இலங்கையர்கள் நினைக்கிறார்கள். இந்தப் பொய்யை மறுத்துரைப்பதற்கு எந்த வரலாற்றாய்வாளரும் முயற்சிக்கவில்லை. ஒன்றில் அதனை சரியாக மதிப்பீடு செய்கின்ற அறிவு இவர்களிடம் இருக்கவில்லை. அல்லது இந்தக் கருத்து நாட்டில் பொது அங்கீகாரத்தைப் பெற்றிருப்பதனால் இதில் கைவைப்பதற்கு அவர்கள் துணியவில்லை. உலக நாகரிகத்துடன் இலங்கையின் நாகரிகத்தை மதிப்பீடு செய்து பார்க்கும் அறிவு இவர்களிடம் இருக்கவில்லை என்பதே எனது கருத்தாகும்.

துட்டகைமுனுவுக்குப் பின்னர் உருவாகிய இலங்கையின் அரசர்கள், ஒரு மதத்துக்கு மட்டும் மட்டுப்பட்டவர்களாக இருக்கவில்லை. ஒரே நேரத்தில் இந்து மதத்தையும் பௌத்த மதத்தையும் பின்பற்றுபவர்களாக இருந்தார்கள் என்பது எனது கண்டுபிடிப்பேயன்றி இலங்கையின் வரலாற்றாசிரியர்கள் யாரும் கண்டுபிடித்ததல்ல. இது பொய்ப்படுத்த முடியாத உண்மை என்பதோடு, இது எதிர்கால ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட வேண்டிய கண்டுபிடிப்புமாகும்.

இலங்கையின் 2300 வருட காலத்தில் பௌத்த மதத்தைத் தவிர லோகாயுதக் கலைகள் எதிலும் இலங்கையில் எந்த நூலும் வெளியிடப்பட வில்லை என்பதோடு, குறைந்த பட்சம் உலக வாழ்க்கை தொடர்பிலோ, இயற்கை தொடர்பிலோ கூட எந்தப் பிரபந்தங்களும் இலங்கையில் படைக்கப்படவில்லை என்ற உண்மையும் முதன் முதலில் என்னாலேயே வரலாற்றுக்குச் சேர்க்கப்பட்டது.

புத்த பெருமான் பெரும் மகான்தான் என்றாலும் அவருடைய காலத்தில் இருந்த ஒரே தத்துவஞானி அவர் மட்டுமே என்பதல்ல. சோக்ரடீஸ், பிளேட்டோ, யூக்லீட், ஆகிமிடீஸ், அரிஸ்டோட்டில் போன்ற தத்துவ மேதைகளும் இவருடைய காலத்திலே வாழ்ந்தவர்கள்தான். இலங்கைக்கு இவர்களைப் பற்றித் தெரிந்திருக்கவில்லை. இந்த நீண்ட காலம் நெடுகிலும் இலங்கைக்கு அறிவு கிடைப்பதற்கான ஒரே வழியாக இருந்தது பௌத்த மதம் மட்டும்தான். என்னுடைய இந்தக் கருத்தையும் வரலாற்றாசிரியர்கள் ஆய்வுக்குட்படுத்த வேண்டும்.

நான் விஷேடமானவனல்ல. இலங்கையின் சமகால நிகழ்வுகளைப் பற்றிக் கவலைப்படுகின்ற, நல்லதொரு எதிர்காலத்தை கனவு காண்கின்ற, இதற்குத் தேவையான வரலாறு போன்ற விடயங்களில் அக்கறை செலுத்துகின்ற ஒரு விமர்சகன் மட்டுமே. இலங்கையின் கருத்தியலில் நிலவுகின்ற இன, மத, குல பேதங்களே இலங்கையின் முன்னேற்றத்துக்குத் தடையாக இருப்பதாக நான் கருதுகின்றேன். இது ஒரு நாட்டில் இருக்க வேண்டிய தேசிய ஒருமைப்பாட்டுக்கு குந்தகமாக அமைவதோடு, நாட்டில் இரத்தம் சிந்தக் கூடிய பிரச்சினைகளை அடிக்கடி உருவாக்கி நாட்டை நாகரிகமற்ற நிலைக்கு இட்டுச் செல்வதற்கும் காரணமாக அமைந்துள்ளது.

நாட்டில் இன, மத, குல பேதங்களுக்கு உள்ள அங்கீகாரத்தை இல்லாமல் செய்து, இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்கும் சமமான மானிட அந்தஸ்து கிடைக்கும் வகையில், நாட்டை ஒன்றுபடுத்தலில் சுதந்திரத்தின் போது விடப்பட்ட தவறை நிவர்த்திப்பது எமது மறுமலர்ச்சி இயக்கத்தின் நோக்கங்களில் ஒன்றாக அமைந்திருக்கிறது இந்த வகையில் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரசவத்தின்போது வைத்தியர்கள், பயிற்றப்பட்ட தாதியர்கள் இருக்க வேண்டும்

**டொக்டர் முகம்மட் ரிஷாட் (MBBS)**
சிரேஷ்ட விரிவுரையாளர் கொழும்பு மருத்துவ பீடம், பெண்ணியல் மற்றும் மகப்பேற்று வைத்திய நிபுணர் டீசொய்சா மருத்துவமனை.

டொக்டர் முகம்மட் ரிஷாட் அவர்கள் கேகாலை மாவட்டத்திலுள்ள ஹெம்மாதகமையை பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் தனது ஆரம்பக் கல்வியை கேகா/ஹெம்மாதகம அல் அஸ்ஹர் முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும் இரண்டாம் நிலை மற்றும் உயர்நிலைக் கல்வியை கேகா/மாவனெல்லை ஸாஹிரா தேசிய பாடசாலையிலும் கற்றுள்ளார்.

களனிப் பல்கலைக்கழகத்தில் மருத்துவத் துறையில் MBBS பட்டத்தையும், பெண்ணியல் மற்றும் மகப்பேற்று (Obstetrics and Gynaecology) துறையில் MD பட்டத்தையும், லண்டன் Whittington மருத்துவப் பயிற்சிக் கல்லூரியில் MRCOG பட்டத்தையும் பூர்த்திசெய்துள்ளார். 2013ஆம் ஆண்டு South Asian Young Gynaecologyst விருதைப் பெற்றுள்ள டொக்டர் ரிஷாத், கடந்த 14 ஆண்டுகளாக மருத்துவத் துறையில் சேவையாற்றி வருகின்றார்.

ஆரம்பத்தில் கொழும்பு மருத்துவமனையில் மருத்துவ நிபுணராகவும், 2015 ஆம் ஆண்டு கிளிநொச்சி மருத்துவமனையில் மகப்பேற்று வைத்திய நிபுணராகவும் பணியாற்றியுள்ளார். மருத்துவத் துறை சார்ந்த பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொன்டுள்ள டொக்டர் ரிஷாட், தற்போது கொழும்பு டீ சொய்சா மருத்துவமனையில் பெண்ணியல் மற்றும் மகப்பேற்று விஷேட வைத்திய நிபுணராகவும், கொழும்பு மருத்துவக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் பணியாற்றி வருகின்றார். இவர் மீள்பார்வை பத்திரிகைக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணல் இது.

நேர்காணல்– ஹெட்டி ரம்ஸி

- **இலங்கையில் மகப்பேற்று மருத்துவத் துறை முன்னேற்றமடைந்திருப்பதாக அண்மைய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இது தொடர்பில் உங்களது அவதானங்களை சற்றுக் குறிப்பிட முடியுமா?**

மகப்பேற்று மருத்துவத் துறையில் தெற்காசியாசியாவிலும் வளர்முக நாடுகளிலும் இலங்கை முன்னணியில் உள்ளது. சர்வதேச ரீதியில் நடைபெறுகின்ற மருத்துவ மாநாடுகளிலும் இலங்கையை உதாரணமாகக் காட்டிப் பேசும் அளவுக்கு தாய் சிசு மரண வீதம், தாய் சிசு நோய்வாய்ப்படும் நிலைமைகள் (maternal mortality and morbidity, neonatal mortality and morbidity) புள்ளிவிபர ரீதியாக குறைவடைந்துள்ளது. இதற்கு பல்வேறு காரணங்களை குறிப் பிடலாம்.

ஆரம்பகாலத்தில் சுகாதார அமைச்சு குடும்பநல சுகாதார மருத்துவ அதிகாரிகளை பிரதேச ரீதியில் நியமித்தது. இவர்கள் வீடு வீடாகச் சென்று தரவுகளைச் சேகரித்து நோயாளர்களை இனங்கண்டார்கள். நோய் தொற்றுக்கு ஆளாகக் கூடிய கர்ப் பிணித் தாய்களை ஏலவே இனங்கண்டு (early identification of the problem) மருத்துவ நிலையங்களுக்கு அனுப்பும் பணியை செய்தார்கள். இதுபோன்ற கள ரீதியான சேவைகள் ஏனைய வளர்முக நாடுகளில் இல்லை.

ஆரம்ப காலத்தில் நுண்ணுயிர்க் கொல்லி (Antibiotic) மருந்துகள் பயன்படுத்தப்படவில்லை. தற்போது இம்மருந்துகள் பரவலாக எல்லா இடங்களிலும் வழங்கப்படுகிறது. அத்தோடு சகல வைத்தியசாலைகளிலும் அவசர சிகிச்சை பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டமையினாலும் தாய் மரண வீதம் மற்றும் நோய் நிலைமைகள் குறைந்துள்ளது. இன்று 95 வீதமான மகப்பேறுகள் மருத்துவமனைகளிலேயே இடம்பெறுகின்றன. அதற்கு தேவையான வசதிகள் அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன. வைத்தியர்கள், பயிற்றப்பட்ட தாதியர்கள் இருக்க வேண்டும். அத்தோடு இரத்த வங்கி வசதிகளும் காணப்பட வேண்டும்.

- **வளர்முக நாடுகளில் இன்று மகப்பேற்று மருத்துவத்துறை எவ்வாறான நிலையில் உள்ளது?**

இன்று உலகில் ஒரு வருடத்திற்கு 127,000 பெண்கள் பிரசவத்தின் போதான குருதிப் பெருக்கினால் உயிரிழக்கிறார்கள். இதில் 90 வீதமான பெண்கள் வளர்முக நாடுகளிலேயே மரணிக்கின்றனர். அதாவது 4 நிமிடங்களுக்கு ஒரு பெண் வளர்முக நாடுகளில் இறக்கின்றார்கள். மகப்பேற்றின் போது ஏற்படக்கூடிய குருதிப்பெருக்கு (dramatic) என்பது விரைவில் நிகழக் கூடியது. அதனால் இதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

குருதிப்பெருக்கு ஆரம்பித்து 1 மணிநேரத்தில் வைத்தியர்கள், தாதியர்கள் ஒன்றிணைந்து குழுவாக செயற்பட்டு தீவிரமான சிகிச்சையளித்தாலே ஒழிய தாயை காப்பாற்ற முடியாமல் போய்விடும். கர்ப்பப் பை குருதியோட்டம் ஒரு நிமிடத்திற்கு 500 மி.லீ. என்றவாறு இருக்கும். எனவே ஒருவர் 2 லீற்றர் இரத்தத்தை இழந்தால் சுயநினைவற்றவராக மாறிவிடுவார். இன்னுமொரு லீற்றர் அதிகம் பெருக்கெடுத்தால் மரணம் கூட சம்பவிக்கும். இதற்காக வேண்டியே சகல இடங்களிலும் இரத்த வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தாதிமார் கர்ப்பிணித் தாய்மார்களை பரிசோதித்து இவ்வகையான ஆபத்துக்களை எதிர்நோக்கக்கூடிவர்களை இனங்கண்டு இரத்த வங்கியுள்ள மருத்துவ நிலையங்களுக்கு அனுப்புகிறார்கள். இத்தகைய வசதிகள் எல்லாம் செய்யப்பட்டும் கூட 2016 ஆம் ஆண்டு இலங்கையில் பிரசவத்தின் போதான குருதிப்பெருக்கினால் 15 பேர் உயிரிழந்துள்ளனர். 1995 ஆம் ஆண்டு தாய் மரண வீதம் ஒரு லட்சத்திற்கு 61 ஆகக் காணப்பட்டது.

- **இலங்கையில் சுகாதார அமைச்சு இதனை முற்றாக கட்டுப்படுத்துவதற்கான சகல வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுத்துள்ள போதும் பிரசவத்தின் போதான குருதிப் பெருக்கினால் இன்னும் மரணம் சம்பவித்துக்கொண்டுள்ளன. இதனை முற்றாக தடுப்பதற்குரிய வழிவகைகள் உள்ளனவா?**

அரசாங்கம் சகல வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதால் மாத்திரம் இப்பிரச்சினை தீர்ந்து விடாது. பிரச்சினை ஏற்பட்டவுடன் வைத்தியரை நாடுவதற்குரிய தேவையும் உள்ளது. அடுத்தது, வைத்தியசாலைகள் இருந்தாலும் உரிய நேரத்தில் அவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. அத்தோடு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டாலும் சிகிச்சையளிப்பதில் ஏற்படுகின்ற தாமதங்களும் இம்மரணங்களுக்கான காரணமாக இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

கர்ப்பிணித் தாய்மார்கள் குடும்பநல சுகாதார மருத்துவ அதிகாரிகளை அடிக்கடி நாடி தேவையான ஆலோசனைகளைப் பெறவேண்டும். ஏதும் ஆபத்துக்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டால் உடனடியாக மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சை பெற வேண்டும். இன்று எமது சமூகத்தில் இவ்வாறான அறிவுகள் குறைவு என்பதும் தாய் மரண வீதத்திற்கு முக்கிய காரணமாக உள்ளது.

குழந்தை பெற்றெடுத்தால் உயிருக்கு ஆபத்து என வைத்தியர்களால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ள நேரத்தில் அதாவது குருதிச் சோகை, இருதய நோய் போன்ற நோயுள்ளவர்கள் அதை மீறி குழந்தை பெற்றுக்கொள்ள முயற்சித்து இறந்தவர்கள் அதிகம் உள்ளனர். இதற்கு ஆங்கிலத்தில் unmet need of contraception என்பார்கள். கருத்தடைக்கான தேவையிருந்தும் அதை அவர்கள் பயன்படுத்துவதில்லை என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

2009 ஆம் ஆண்டு 09 பேர் இவ்வகையில் உயிரிழந்துள்ளனர். 2013 இல் 18 வீதமானவர்கள் unmet need of family planning குடும்பக் கட்டுப்பாடு செய்ய வேண்டிய தேவையிருந்தும் அவர்கள் அதனைச் செய்யாததால் உயிரிழந்திருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

- **இலங்கையில் இன்று வீடுகளில் பிரசவம் பார்க்கும் நிலையும் காணப்படுகின்றது. இதுவும் தாய்-சேய் மரணத்திற்குக் காரணமாக உள்ளதா?**

எமது நாட்டின் சுகாதாரத் துறை தரம் வாய்ந்ததாக உள்ளது. இன்னுமின்னும் இதன் தரங்களைக் கூட்டுவதற்கான வேலைத் திட்டங்களை நாம் மேற்கொண்டு வருகிறோம். இன்று சில பகுதிகளில் வீடுகளில் பிரசவம் பார்த்து விட்டு மருத்துவமனைக்கு எடுத்து வருவதாகக் கேள்விப்படுகிறேன். இது ஆபத்தானதொரு செயல்.

பிரசவம் என்பது இயற்கையானதொரு விடயம். என்றாலும் கூட பல்வேறு காரணங்களால் அது அசாதாரண நிலையாக மாறலாம். இது குறுகிய நேரத்தில் நிகழும் விடயம் என்றாலும், வரும் ஆபத்துக்களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய வசதிகள் எம்மிடம் காணப்பட வேண்டும். இவ் வசதிகள் இன்மையாலேயே ஆபிரிக்க நாடுகளில் தாய் மரண வீதம் அதிகமாக உள்ளது.

ஷாட் நாட்டில் 10 பெண்கள் கர்ப்பம் தரித்தால் ஒரு பெண் உயிரிழக்கிறாள். அங்கு பிரசவத்திற்குப் போகும்போது மரணத்திற்கு அனுப்பி வைப்பது போன்றே அனுப்பி வைப்பார்கள். ஆனால் இலங்கையில் அப்படியில்லை. இங்கு சகல விடயங்களும் மேம்படுத்தப்பட்டுள்ளன. வைத்தியசாலையில் இலவச சேவையே வழங்கப்படுகின்றது.

ஒரு தாய் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும்போது அங்கு சகல பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுகின்றது. இதனை நாம் சரியாகப் பயன்படுத்த வேண்டும். தாய்க்கு அல்லது சிசுவுக்கு ஆபத்து என்றால் மாத்திரமே சத்திர சிகிச்சை செய்யப்படும். இங்கிலாந்து போன்ற நாடுகளில் பெரியளவில் வீடுகளில் பிரசவம் பார்க்கும் முறை உள்ளது. அங்கு தாதிமார்கள் இருப்பார்கள். இப்படியான வசதியிருந்தும் அது வெற்றிகரமான முறையல்ல எனத் தெரிவிக்கப்படுகின்றது.

- **கருப்பை வாயில் ஏற்படுகின்ற புற்று நோய் ஏன் ஏற்படுகின்றது என்பது பற்றி சுருக்கமாகக் குறிப்பிட முடியுமா?**

கர்ப்பப்பை புற்றுநோய் பற்றி உலகளவில் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முன்பொரு காலத்தில் கர்ப்பப் பை, வாயில் ஏற்படக்கூடிய புற்றுநோய் ஒரு பயங்கரமான விடயமாகக் காணப்பட்டது. தற்போது பல்வேறு முன்னேற்றங்களைக் கண்டுள்ளோம். கர்ப்பப் பை வாய்ப் புற்றுநோய் என்பது இலங்கையில் மார்பகப் புற்றுநோய்க்கு அடுத்த படியாக 2 ஆவது ஏற்படக்கூடிய புற்றுநோயாக உள்ளது.

உலகளவில் 2012 ஆம் ஆண்டு 528,000 பெண்கள் கர்ப்பப் பை புற்றுநோயால் பாதிக்கப்பட்டனர் என ஒரு ஆராய்ச்சி கூறுகிறது. இதில் கிட்டத்தட்ட அரைவாசிக்கும் மேற்பட்டோர் கண்டுபிடிக்கப்பட்டு இரண்டாவது அல்லது அடுத்த வருடமே இறந்து போனார்கள். காரணம், இவர்கள் கடைசி கட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டமையாகும். இதில் 85 வீதத்திற்கும் மேற்பட்டவர்கள் வளர்முக நாடுகளைச் சேர்ந்தவர்கள். இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. இலங்கையில் ஒரு வருடத்திற்கு கிட்டத்தட்ட 850-950 கர்ப்பப் பை புற்றுநோயாளர்கள் கண்டுபிடிக்கப்படுகின்றனர். இதில் பலரும் கடைசி நிலையிலேயே கண்டுபிடிக்கப்படுகின்றனர். காரணம் இது நோய்க் குணங்குறிகளை காட்டாது.

- **கருப்பப் பை புற்றுநோய்க்கான நோய்க் குணங் குறிகள் யாவை என குறிப்பிட முடியுமா?**

புற்றுநோய் வந்த நிலையில் உடலுறவு கொண்டதன் பிற்பாடு குருதிப்பெருக்கு ஏற்படலாம். சிலருக்கு முதுகு வலியால் கைகால்கள் வீக்கத்தால், அடி வயிற்றில் உள்ள வீக்கம், சிறுநீர் தொகுதியில் ஏற்படும் பாதிப்புக்களால் ஏற்படலாம். சிலருக்கு மாதவிடாய் நின்றுவிட்டதன் பின்னால் ஏற்படுகின்ற குருதிக் (பக்.14)




உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் என்பதால் ஊர் மட்டங்களில் எல்லா இடங்களிலும் தேர்தல் களைகட்ட ஆரம்பித்திருக்கிறது. ஒவ்வொரு ஊரும் தத்தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான தமது பிரதிநிதியை தேர்ந்தெடுத்துக் கொள்ளும் அபிலாஷைகளுடன் தேர்தலை எதிர்நோக்குகிறார்கள். தமக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பம் இது. இதனைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஆர்வத்துடன் திட்டமிடுகிறார்கள்.

அரச நிர்வாக இயந்திரம் மக்களை நோக்கி நெருங்க நெருங்க மக்களின் ஈடுபாடு அதிகம் என்பதையே இது காட்டுகிறது. நாட்டின் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்ற தேர்தலை விட, பாராளுமன்றத்துக்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்கின்ற தேர்தலை விட, மாகாண சபை உறுப்பினர்களை நியமிக்கின்ற தேர்தலை விட இந்தத் தேர்தல் மக்களுக்கு மிக நெருக்கமானது. இதுதான் மக்களது ஆர்வக் கிளர்ச்சிக்கு காரணமாயமைகிறது.

ஜனநாயக வழிமுறையில் இந்தத் தேர்தல் முக்கியமானது. தேர்தலுக்குப் பின்னர் ஜனநாயகம் நிலவுகிறதோ இல்லையோ தேர்தல் என்ற ஜனநாயக வழிமுறை மக்களுக்கு மறுக்கப்படுமானால் அதற்கெதிராக அடிப்படை உரிமை மீறல் வழக்குகளைத் தாக்கல் செய்கின்ற உரிமை மக்களுக்கு இருக்கிறது. குறித்த காலத்தில் தேர்தலை நடத்தாமல் பல தடவைகள் ஒத்திவைக்கப்பட்ட பின்னர் இம்முறைய உள்ளூராட்சித் தேர்தல் தற்போது நடைபெறுகிறது. இந்த நிர்ப்பந்தத்துக்கு அரசு ஆளாவதற்கு மக்களின் அழுத்தங்களும் காரணமாயமைந்தது என்பது மறுப்பதற்கில்லை.

இந்த ஜனநாயக வழிமுறை முஸ்லிம் சமூகத்துக்குள்ளால் எந்த நிலையில் இருக்கிறது? முஸ்லிம் சமூகத்தில் ஜனநாயகத்துக்குரிய பெறுமானம் என்ன? முஸ்லிம் தலைமை நிறுவனங்களில் ஜனநாயகம் நிலவுகிறதா? முஸ்லிம் அரசியல் கட்சிகளிடம் காணப்படும் ஜனநாயகம் ஒரு கிலோ என்ன விலை? இதை எல்லாம் விட்டு விட்டு அரசியல், தேர்தல் என்று வரும்போது மட்டும் ஜனநாயக விழுமியங்கள் பேணப்பட வேண்டும் என்று வாய்கிழியக் கத்துவது என்ன பெறுமானத்தைக் கொடுக்கப் போகிறது?

ஒரு முஸ்லிமுடைய முதலாவது பயிற்சிப் பாசறை அவனது வீடு. அடுத்தது அவனது சமூகம். பின்னர் அது தேசம், நாடு என்று விரிகிறது. ஜனநாயகத்தையும் அராஜகத்தையும் அவன் இந்த வட்டத்துக்குள் இருந்து தான் பெற்றுக் கொள்கிறான். சமூக வாழ்க்கை துவங்கிய பயணத்திலிருந்து அவன் நிறைய விடயங்களை சமூகத்தில் இருந்து கற்றுக் கொள்கிறான்.

சமூக நிறுவனங்களுடன் தொடர்படுவதன் ஊடாக அவன் நாட்டை வளப்படுத்துவதற்குத் தேவையான அறிவையும் அனுபவத்தையும் பெற்றுக் கொள்கிறான். சமூகம் ஜனநாயகமாகவும் நீதியாகவும் செயற்படுமாக இருந்தால் நாட்டை அந்த வழியில் வழிநடத்துவதற்குரிய அனுபவம் அவனுக்கு சமூகச் செயற்பாட்டினூடாக கிடைக்க வழியிருக்கிறது.

ஆனால் முஸ்லிம் சமூகத்தில் இந்த நீதியும் ஜனநாயகமும் எந்த நிலையில் இருக்கிறது? சமூக வாழ்வில் அவன் தொடர்புபடுகின்ற முதல் இடமும் முன்மாதிரியை எதிர்பார்க்கும் இடமும் தான் பள்ளிவாசல்கள். இங்கு ஜனநாயகம் எப்படிப் போனாலும் ஜனநாயகம் இருக்கிறது என்பதைக் காட்டிக் கொள்வதற்காக நடத்தப்படுகின்ற தேர்தலாவது முறையாக நடக்கிறதா? தேர்தலே நடத்தாமல் அல்லாஹ்வையும் மக்களையும் ஏமாற்றிக் கொண்டிருக்கின்ற பள்ளிவாசல்கள் நம்மில் ஏராளம்.

எந்தத் தேர்தலும் இல்லாமல் தமக்கு ஒத்திசைவான தலையாட்டி உறுப்பினர்களை தாமே நியமித்துக் கொண்டு அராஜகம் நடத்தும் பள்ளிவாசல்கள் தாராளம். மக்கள் மீது அடக்குமுறையையும் அநியாயத்தையும் திணிக்கின்ற இவ்வாறான பள்ளிவாசல்களின் நிர்வாகிகளும் உள்ளூராட்சித் தேர்தலில் பல இடங்களில் வேட்பாளராக நியமிக்கப்பட்டிருப்பது, சாத்தான் வேதமோதும் கதையாகவே இருக்கிறது.

இலங்கை முஸ்லிம்கள் இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஆர்வத்துடன் பங்கெடுப்பது தெரிகிறது. இந்த அரசியல் ஆர்வம் மேலும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். உலமாக்கள் கற்றுத் தராத, மிம்பர்களிலே முழங்காத ஜனநாயகத்தை மக்கள் இந்த அரசியல் செயற்பாடுகளினூடக வாவது பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த அனுபவங்களை வைத்து, தேர்தல் முடிந்த கையோடு சமூகத்தின் நேரடி அலகுகளிலும் முறையான தேர்தல்களை நடத்தவும் சிறந்த வேட்பாளர்களைத் தெரிவு செய்யவும் சமூகம் முன்வர வேண்டும்.

முஸ்லிமல்லாத(அ)வர்களுக்குக் கொடுப்பதற்கு எம்மிடம் எதுவுமே இல்லாவிட்டால் அவர்களிடமிருப்பதை இரவல் வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டிய நிலைக்கு சமூகத்தை மாற்றிவிட்டவர்களை மாற்றிவிடுவது தான் தேறுவதற்கான வழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசப் பார்வை

## காஷ்மீரில் மீண்டும் வன்முறைகள்



இந்திய ஆக்கிரமிப்புக்கு உட்பட்டுள்ள காஷ்மீரில் பொது மக்கள் சிலரை இந்திய இராணுவம் படுகொலை செய்ததை அடுத்து பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. கிளர்ச்சியாளர்கள் என்று இராணுவம் கூறும் சாதாரண சிவில் சமூக பிரதியொருவர் கொல்லப்பட்டமைக்கு பல்லாயிரணக்கான மக்கள் தமது கண்டனங்களையும் எதிர்ப்புக்களையும் தெரிவித்தபோது, வன்முறைகள் கட்டவிழ்க்கப்பட்டன.

காஷ்மீரின் வடக்குப் பிராந்தியத்தில் இந்திய இராணுவத்திற்கும் காஷ்மீர் இளைஞர்களுக்கும் இடையில் வெடித்த வன்முறையில் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். 25 வயதான ஆஸிப் இக்பால் எனும் சாரதி வைத்தியசாலைக்கு நோயாளிகளை எடுத்துச் சென்றபோது இந்திய இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது உடலும் மறுக்கப்பட்டது.

தின்ட்புரா கிராமத்தில் மக்கள் பொலிஸாரை எதிர்த்து கிளர்ச்சியில் ஈடுபட்டனர். கிளர்ச்சியாளர்கள் என்று கூறி பொதுமக்களை இலக்கு வைப்பது இந்திய இராணுவத்தின் வாடிக்கையாக இருந்து வருகிறது. இந்திய கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீர் தொடர்ந்தும் மனித உரிமை மீறல்களின் ஆடுகளமாக இருந்து வருவதை மனித உரிமை செயற்பாட்டாளர்கள் வன்மையாகக் கண்டித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவின் உற்பத்திகளை பகிஷ்கரியுங்கள் இந்துனேஷியா வேண்டுகோள்




முஸ்லிம்களின் புனித நகரமான ஜெரூசலத்தை இஸ்ரேலின் தலைநகராக ட்ரம்ப் பிரகடனம் செய்ததைக் கண்டித்து அமெரிக்க உற்பத்திப் பொருட்களை முற்றாக பகிஷ்கரிக்குமாறு இந்தோனேசியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

உலகின் மிகப் பெரிய இஸ்லாமிய நாடான இந்தோனேசியாவில் கடந்த இரு வாரங்களாக ட்ரம்பின் பிரடகனத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. சமீபத்தில் நடந்த ஓர் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட சுமார் ஒரு லட்சம் மக்கள் ஜகர்த்தாவிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தை நோக்கி அணிவகுத்துச் சென்றனர். பலஸ்தீன் விவகாரத்தில் மலேசியா போன்று ஆதரவளிக்கின்ற மிகப் பெரும் முஸ்லிம் நாடாக இந்தோனேசியா விளங்குகின்றது. இந்தோனேசியாவின் மொத்த சனத்தொகையான 28 கோடி மக்களில் 25 கோடிப் பேர் முஸ்லிம்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


## பாதுகாப்புச் சபை தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தது அமெரிக்கா

### ட்ரம்பின் பிரகடனத்தை அடுத்து வன்முறைகளைத் தீவிரப்படுத்தும் இஸ்ரேல்

கடந்த 18 ஆம் திகதி ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகள் ட்ரம்ப் பிரகடனத்திற்கு எதிராக நிறைவேற்றிய தீர்மானத்தை அமெரிக்கா தனது ஒற்றை வீட்டோ அதிகாரத்தினால் தடுத்து நிறுத்தியுள்ளது. பாதுகாப்புச் சபைக்கான அமெரிக்கத் தூதுவர் ஹெலி இஸ்ரேலுக்கு ஆதரவாக, அதாவது ட்ரம்பின் பிரகடனத்திற்கு எதிரான தீர்மானத்தை ஆட்சேபித்து வாக்களித்தார்.

14 நிரந்தர உறுப்பு நாடுகள் நிறைவேற்றும் ஒரு தீர்மானத்தை வீட்டோ அதிகாரமுள்ள ஒற்றை அமெரிக்கா நிராகரித்திருப்பது இதுவே முதன் முறையல்ல. பாதுகாப்புச் சபையில் கடந்த 60 ஆண்டுகளாக இஸ்ரேலுக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட 70 இற்கும் அதிகமான தீர்மானங்களை அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி ரத்துச் செய்து வந்துள்ளது.

ட்ரம்ப் இஸ்ரேலின் தலைநகராக ஜெரூசலத்தை அமெரிக்கா அங்கீகரிப்பதாக வெளியிட்ட தன்னிச்சையான பிரகடனம் முஸ்லிம் உலகில் மட்டுமன்றி, மேற்கு நாடுகளிலும் பாரிய கொந்தளிப்பையும் எதிர்ப்பையும் உருவாக்கியுள்ளது.



இஸ்ரேலியப் பிரதமர் நெடன் யாஹு அமெரிக்காவுக்கு நன்றி கூறியுள்ளதோடு, பாதுகாப்புச் சபை தூதருக்கு விஷேட பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் காஸா மற்றும் மேற்குக்கரை மீதான இஸ்ரேலின் வன்முறைகள் தீவிரமடைந்துள்ளன. ட்ரம்ப் பிரடகனத்திற்குப் பின்னர் கிழக்கு ஜெரூசலத்திலுள்ள பலஸ்தீனர்களின் வீடுகளை தரைமட்டமாக்கும் இஸ்ரேலின் திட்டம் தீவிரமடைந்துள்ளது.

430 பலஸ்தீனர்களை இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு இராணுவம் கைதுசெய்துள்ளதோடு, 3500 பேரை தாக்கிக் காயப்படுத்தியுள்ளது. காஸாவில் இஸ்ரேல் மேற்கொண்ட ஆகாய வழித் தாக்குதலில் பலர் உயிரிழந்துள்ளனர். மேற்குக் கரை மற்றும் ஜெரூசலம் நகரில் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் 622 பேர் கடும் காயங்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர். பத்திற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

ட்ரம்பின் பிரகடனம் இஸ்ரேலுக்கு பெரிய உற்சாகத்தை வழங்கியுள்ளது என்று அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## ஸஅத் அல் ஜப்ரி பின் சல்மானிடம் ஒப்படைக்கப்பட்டார்

முன்னாள் பட்டத்திற்குரிய இளவரசர் முஹம்மத் பின் நாயிபின் வலக்கரம் எனக் கருதப்படும் சவூதி அமைச்சர் ஸஅத் அல் ஜப்ரியை முஹம்மதிடம் அமெரிக்க அதிகாரிகள் ஒப்படைத்துள்ளதாக நியூ கலீஜ் பத்திரிகை ஊர்ஜிதம் செய்துள்ளது. அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்து சென்றிருந்த ஜப்ரியை மீண்டும் சவூதியிடம் ஒப்படைக்குமாறு முஹம்மத் பின் சல்மான் விடுத்த வேண்டுகோளை அமெரிக்கா நிறைவேற்றியுள்ளது. ஜப்ரி, முஹம்மத் பின் சல்மானின் ஆட்சியை கடுமையாக விமர்சித்து வந்தவர்.

அமெரிக்காவிலுள்ள சவூதி குடும்பத்தவர்களுக்கு இடையில் சல்மானுக்கு எதிரான கூட்டணியொன்றை அவர் உருவாக்கி விடுவார் என்று முஹம்மத் பின் சல்மான் அஞ்சுகின்றார். இப்பின்னணியிலேயே ஸஅத் அல் ஜப்ரியை அமெரிக்கா சவூதியிடம் மீள ஒப்படைத்துள்ளது. ஸஅத் அல் ஜப்ரி சவூதி அறேபியாவின் அரசியல் மற்றும் பாதுகாப்பு விவகாரங்களுக்கான ராஜாங்க அமைச்சராகப் பணியாற்றியவர். அதேவேளை, பின் நாயிபுடன் நெருக்கமான உறவைப் பேணுபவர்.

## அர்தூகானை தாக்கும் சவூதி மற்றும் அமீரக ஊடகங்கள்



ஜெரூசலம் குறித்து தீர்மானம் மேற்கொள்வதற்கு உடனடியான உச்சி மாநாடொன்றுக்கு அழைப்பு விடுத்த அர்தூகானின் கூட்டத்திற்கு சமூகமளிக்காத சவூதியும் அமீரகமும் துருக்கிய ஜனாதிபதி ரஜப் தையிப் அர்தூகானை விமர்சிக்கத் தொடங்கியுள்ளதாக துருக்கிய ஊடகம் தெரிவித்துள்ளது.

இஸ்லாமிய ஒப்பந்த அமைப்பின் விஷேட கூட்டம் ஸ்தன்பூலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 57 முஸ்லிம் நாடுகளில் 17 நாட்டுத் தலைவர்களே இதில் பங்குகொண்டிருந்தனர். சவூதி அறேபியா, ஐக்கிய அறபு அமீரகம் என்பன இஸ்ரேலுக்கு ஆதரவளிக்கும் வகையில் இவ்வுச்சி மாநாட்டில் கலந்துகொள்ளாது தவிர்ந்து கொண்டன.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள துருக்கிய - அறபு மூலோபாய ஆய்வு நிறுவனத்தின் செயலாளர் பத்ருத்தீன் ஹபீப், "சவூதி மற்றும் அமீரகம் உச்சி மாநாட்டைப் பகிஷ்கரித்தது மட்டுமன்றி, அர்தூகானை நேர்மையற்ற முறையில் விமர்சிப்பது ஒரேயொரு விடயத்தையே எடுத்துக் காட்டுகின்றது. பலஸ்தீன விவகாரத்தைக் கைவிட்டு, முஹம்மத் பின் சல்மானின் ஆட்சியை அமெரிக்கா உறுதி செய்வதற்குப் பகரமாக, ஜெரூசலத்தை இஸ்ரேலுக்கு தாரைவார்க்கும் சியோனிஸத் திட்டத்தில் சவூதி பங்கு கொண்டுள்ளது என்பதே அந்த விடயமாகும்.

இஸ்லாமிய உலகில் துருக்கியை ஓரங்கட்ட நினைப்பது அமெரிக்க சியோனிஸத் திட்டமாகும். அதற்கு சவூதியும் அமீரகமும் ஆதரவளிக்கின்றது. ஜெரூசலம் குறித்த அமெரிக்கத் தீர்மானத்தை துருக்கி வன்மையாகக் கண்டிக்கின்றது. மட்டுமன்றி, பலஸ்தீன் தொடர்பான நேர்மையான நிலைப்பாட்டை வெளிப்படுத்துமாறு அறபு இஸ்லாமிய சமூகங்களை அது வலியுறுத்துகிறது" எனவும் பத்ருத்தீன் ஹபீப் தெரிவித்துள்ளார்.

## சவூதி தலைமையிலான வான் படை மேற்கொண்ட தாக்குதலில் 10 பெண்கள் உயிரிழப்பு



யெமன் மீது சவூதி தலைமையிலான அறபு நாடுகள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் வான் தாக்குதல்களில் குறைந்தது 10 பெண்கள் கொல்லப்பட்டுள்ளனர். திருமண வைபவமொன்றில் கலந்துகொண்டு வீடு திரும்பிய பெண்களே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர்.

ஹூதி கிளர்ச்சியாளர்களை இலக்கு வைப்பதாகக் கூறிக் கொண்டு நடத்தப்பட்ட தாக்குதலிலேயே பெண்கள் இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர். கடந்த இரண்டரை ஆண்டுகள் சவூதி தலைமையிலான வான் தாக்குதல்கள் ஹூதிகளுக்கு எந்தப் பின்னடைவையும் ஏற்படுத்தவில்லை. கொல்லப்பட்டவர்கள் அனைவரும் ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

2015 மார்ச் மாதத்திலிருந்து நடைபெற்று வரும் தாக்குதல்களில் இதுவரை 10,000 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 2 மில்லியன் யெமனியர்கள் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர் வாந்தி பேதி மற்றும் தொற்று நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள பெருந்தொகை யெமனியர்கள் மருத்துவ வசதிகளின்றி திண்டாடுகின்றனர். போர் நீடித்தால் 8.4 மில்லியன் யெமனியர்கள் பட்டினியை எதிர்கொள்ள நேரிடும் என்று ஐ.நா. எச்சரித்துள்ளது.

## பலஸ்தீனுக்கு ஸ்பெய்ன் 2 மில்லியன் யூரோ உதவி

பலஸ்தீன் அகதிகளுக்கான நிவாரண உதவியாக 2 மில்லியன் யூரோவை (2.35 மில்லியன் அமெரிக்க டொலர்களை) ஸ்பெய்ன் அரசு வழங்கியுள்ளது. ஸ்பானிய சர்வதேச கூட்டுறவு நிறுவனத்தினூடாக பலஸ்தீனில் செயல்படும் ஐ.நா. நிவாரண அமைப்புக்கு இத்தொகை கையளிக்கப்பட்டுள்ளது.

சமூகநலப் பணிகள், சுகாதாரம், பாதுகாப்பு ஆகியவற்றுக்கு இவ்வுதவித் தொகை பயன்படுத்தப்படவுள்ளது. 5.3 மில்லியன் பலஸ்தீன் அகதிகள் இதனால் பயனடையவுள்ளார்கள். ஐ.நா. நிவாரணப் பணிகள் இடம்பெறும் பலஸ்தீன பிரதேசங்களிலுள்ள 5 இலட்சம் சிறுவர்களின் கல்விக்காகவும் இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரோகத்தின் தருணம்

• றவூப் ஸெய்ன்

57 நாடுகளின் கூட்டமைப்பான இஸ்லாமிய ஒத்துழைப்பு அமையத்தின் விஷேட உச்சிமாநாடு ஸ்தன்பூலில் கடந்த வாரம் இடம்பெற்றது. 57 நாடுகளில் 16 நாடுகளின் தலைவர்களே அர்தூகானின் அழைப்புக்குப் பதிலளித்தமை ஜெரூசலம் குறித்த அறபு முஸ்லிம் நாடுகளின் தலைவர்களது அசட்டைத் தனத்தை துல்லியமாக வெளிப்படுத்தியுள்ளது. சில வளைகுடா நாடுகள் திட்டமிட்டே இவ் உச்சிமாநாட்டைப் பகிஷ்கரித்தன.



ட்ரம்ப் இஸ்ரேலின் தலைநகராக ஜெரூசலத்தை அங்கீகரிப்பதாகப் பிரகடனம் செய்தமை 200 கோடி முஸ்லிம்களின் முகத்தில் ஓங்கி அறைந்ததற்குச் சமமாகும். 57 முஸ்லிம் பெரும்பான்மை நாடுகள் இருந்தும் முஸ்லிம்களின் மூன்றாவது புனிதஸ்தலம் குறித்து அவை தீர்க்கமாக செயலாற்ற முடியாமல் இருப்பது அவற்றின் கையாலாகத் தன்மையை மட்டுமன்றி, பெரும் வரலாற்றுத் துரோகத்தையுமே எடுத்துரைக்கின்றது.



" ட்ரம்பின் பிரகடனம் சவூதி ஆட்சியாளர்களை எதுவும் செய்யத் தூண்டவில்லை. அவர்கள் அமெரிக்காவின் முடிவைக் கண்டிக்கவில்லை என்பது இஸ்ரேலுக்கு ஆதரவளிக்கின்றார்கள் என்பதையே காட்டுகின்றது. ஜெரூசல விவகாரம் அவர்களுக்கு எந்தவொரு பிரச்சினையாகவும் தோன்றவில்லை. நாம் ட்ரம்பின் பிரகடனம் குறித்து அவர்களிடம் நேரடியாகக் கேட்டிருந்தால் கூட அதை அவர்கள் ஆட்சேபித்திருக்க மாட்டார்கள். "

செட்லொப்

சவூதி அறேபியா, பஹ்ரைன், அறபு அமீரகம், எகிப்து என்பவை ஜெரூசலத்திற்கு சமீபமாக உள்ள நாடுகள். அவற்றின் வாசற்படியிலேயே சியோனிச இஸ்ரேல் உருவாக்கப்பட்டுள்ளது. துரதிஷ்டமாக இந்நாடுகள் எதுவும் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை. சமீபகாலமாக இஸ்ரேலுடன் உறவு வைத்துக் கொள்ளத் தொடங்கியுள்ள ரியாத், உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை என்பது ஆச்சரியத்திற்குரியதல்ல.

இஸ்லாத்தில் புனிதஸ்தலங்கள் மூன்று. அதில் இரண்டுக்கு மாத்திரம் பாதுகாவலர்கள் என்று தம்மை சுயபிரகடனம் செய்துள்ள சவூதி ஆட்சியாளர்கள், ஆக்கிரமிக்கப்பட்ட ஜெரூசலத்தையும் புனித அக்ஸா பள்ளிவாயலையும் கைவிட்டு 70 ஆண்டுகள் கடந்துவிட்டது. இன்று பலஸ்தீனர்களின் முதுகில் குத்தும் துரோகத்தை பச்சையாகவே செய்யும் நிலைக்கு சவூதி ஆட்சியாளர்கள் வந்து சேர்ந்துள்ளனர்.

ட்ரம்பின் பிரகடனம் அவர்களுக்கு எந்த ரோஷ உணர்வையும் உருவாக்கவில்லை. ட்ரம்பின் அசட்டுத் துணிச்சல் மிக்க இப்பிரகடனம் 200 கோடி முஸ்லிம்களுக்கு மிகப் பெரிய அவமானம் மட்டுமன்றி, ஆபத்தானதும் கூட. அப்படியிருந்தும் வெட்கக்கேடான அறபு ஆட்சியாளர்கள் இம்முடிவை விழுங்கிய நிலையில், அர்தூகானின் அழைப்புக்கு பதிலிறுக்கவில்லை என்பது ஒருவகையில் ஆச்சரியமானதல்ல.

ஆனால், இது மிக ஆபத்தான குறிகாட்டியாகும். இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் பக்கமிருக்கும் ரியாதும் அதனைச் சூழவுள்ள பிற அறபுத் தலைவர்களும் அறபு சியோனிஸ்டுகளாக உருமாற்றம் பெற்று வருவது மிக ஆபத்தானதுதான்.

உஸ்மானிய கிலாபத்தை வீழ்த்துவதற்கு தொடர்ந்து துருக்கியின் தலைவராக தௌனிமா இனத்தைச் சேர்ந்த ஒரு யூதன், முஸ்தபா கமால் என்ற பெயரில் நிறுத்தப்பட்டான். அவனது கைகளே இஸ்லாமிய உலகத்தை அழித்தது. இன்று அறபுலகிலுள்ள ஆட்சியாளர்கள் முஸ்தபா கமால்கள் போன்று செயல்படத் தொடங்கியுள்ளனர்.

இஸ்ரேலிய பத்திரிகையாளர் ஒருவர் சவூதியின் மௌனம் குறித்து கருத்து வெளியிடுகையில், ''ட்ரம்பின் அங்கீகாரத்திற்கு ரியாத் மௌன சம்மதம் வழங்கியுள்ளது'' என குறிப்புணர்த்தியுள்ளார். மொரோக்கோவிலிருந்து இந்தோனேஷியா வரையும் ட்ரம்பின் அதிரடிப் பிரகடனம் முஸ்லிம்களைக் கொந்தளிக்க வைத்துள்ளது.



ஆனால், ரியாத் ஆட்சியாளர்களோ மௌனத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கு அப்பால், கிழக்கு ஜெரூசலத்தை இஸ்ரேலுக்கு விட்டுக் கொடுத்து, கிழக்கு ஜெரூசலத்திற்கு தெற்குப் புறமாக உள்ள அபூ திஷ் எனும் ஒரு நகரை பலஸ்தீனர்கள் தங்களின் தலைநகராக ஏற்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். இதுதான் எதிர்கால சுதந்திர பலஸ்தீன தாயகத்தின் தலைநகர் என கூச்சல் போடுகின்றனர். தமது நேசர்களான இஸ்ரேலிய யூதர்கள் இரு நாட்டுத் தீர்வுத் திட்டத்தையே கிடப்பில் பொட்டு பல ஆண்டுகள் கடந்த நிலையில், சுதந்திர பலஸ்தீன் குறித்து அறபு ஆட்சியாளர்கள் கூறுவது என்ன? அபூ திஷ்ஷை பலஸ்தீன் தலைநகராக ஏற்க வேண்டுமென்று அப்பாஸை நிர்ப்பந்திக்கும் முஹம்மத், மேற்குக்கரையை காஸாவுடன் இணைக்கும் நிலத் தொடர்ச்சியைக் கூட தெளிவாக வலியுறுத்தவில்லை. காஸாவையும் மேற்குக்கரையையும் பிரித்தாளும் இஸ்ரேல், காஸா நோயாளர்களுக்கு மேற்குக்கரையில் பெறக் கூடிய மருத்துவ உதவியைக் கூற மறுத்து வருகின்றது.

23,000 சதுர கி.மீ. பரப்பைக் கொண்ட பலஸ்தீன் அறபுகளின் தாயகம். 1915 இலிருந்து யூதர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு வந்த இந்தத் தேசத்தில் இன்று 10 வீதமான நிலத்திலும் பலஸ்தீனர்கள் இல்லை. கிழக்கு ஜெரூசலத்திலும் மேற்குக்கரையிலும் நாளாந்தம் இடித்துத் தரைமட்டமாக்கப்படும் பலஸ்தீனர்களின் குடிமனைகள் இருக்கும் இடத்தில் யூத சியோனிஸ்டுகளின் கட்டடக் காடுகள் எழுப்பப்படுகின்றன. பலஸ்தீனர்களுக்கு அபூ திஷ்ஷை பிச்சை போடுவதற்கும் முழுமொத்த பலஸ்தீனை யூத சியோனிஸ்டுகளுக்கு தாரைவார்ப்பதற்கும் [illegible] யார்?

''நாம் அமெரிக்காவுடன் நட்புறவையும் இஸ்ரேலுடன் ஒத்துழைப்பையும் பேணுகிறோம்'' என்று முஹம்மத் பின் சல்மான் வாய்கூசாமல் கூறியுள்ள வார்த்தைகள் இஸ்லாமிய உலகைத் திடுக்கிட வைத்துள்ளது.

ஒவ்வொரு நாளும் பலஸ்தீனர்களின் குடிமனைகளை அவர்களின் கண்களுக்கு முன்னாலேயே இடித்துத் தரைமட்டமாக்கி, யூதக் குடியேற்றங்களை உருவாக்கி வரும் இஸ்ரேல், பலஸ்தீனர்களின் அடிப்படை உரிமைகளையே ஏற்க மறுக்கின்றது. ஆக்கிரமிப்பவனையும் ஆக்கிரமிக்கப்படுகின்றவனையும் சமமாக மதிப்பிடுவதே பலஸ்தீனைப் பொறுத்தவரையில் பெரும் துரோகமாகும். அறபு ஆட்சியாளர்களோ ஆக்கிரமிக்கப்பட்டவனை விட ஆக்கிரமிப்பாளனை நியாயம் காண்பதும் அவன் பக்கம் நிற்பதும் எத்துணை துரோகம் என்பதை நாம் ஊகிக்கலாம்.

சமீபத்தில் முஹம்மத் பின் சல்மானை சந்தித்த அமெரிக்கத் தூதுக் குழு, யெமன், கட்டார், லெபனான் மற்றும் ரியாதின் விஷன் 2030 பற்றியெல்லாம் விரிவாகக் கலந்துரையாடியுள்ளது. இக்கலந்துரையாடல் குறித்து Foriegn Policy சஞ்சிகையில் Satloff எழுதும்போது ''ட்ரம்பின் பிரகடனம் சவூதி ஆட்சியாளர்களை எதுவும் செய்யத் தூண்டவில்லை. அவர்கள் அமெரிக்காவின் முடிவைக் கண்டிக்கவில்லை என்பது இஸ்ரேலுக்கு ஆதரவளிக்கின்றார்கள் என்பதையே காட்டுகின்றது'' எனக் குறிப்பிடுகிறார்.

ஜெரூசலம் விவகாரம் அவர்களுக்கு எந்தவொரு பிரச்சினையாகவும் தோன்றவில்லை. நாம் ட்ரம்பின் பிரகடனம் குறித்து அவர்களிடம் நேரடியாகக் கேட்டிருந்தால் கூட அதை அவர்கள் ஆட்சேபித்திருக்க மாட்டார்கள் எனவும் செட்லொப் குறிப்பிட்டுள்ளார்.

பலஸ்தீன் விவகாரத்தை கிஞ்சிற்றும் கவனிக்காத ரியாத், இன்று நெடன் யாஹூவுடனும் ட்ரம்புடனும் காதல் கொண்டிருக்கும் சூழ்நிலையில், ட்ரம்பின் பிரகடனத்தை அவர்கள் எப்படியும் ஆட்சேபிக்கப் போவதில்லை. அபூ திஷ்ஷை மாற்று யோசனையாக முன்வைத்துள்ள ரியாத், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த காலகட்டத்தில் முஸ்லிம் உலகுக்கு இழைக்கும் மிகப் பெரும் வரலாற்றுத் துரோகம் இது.

200 கோடி முஸ்லிம்களின் முகத்தில் ட்ரம்ப் ஓங்கி அறைந்ததை அமைதியாக அங்கீகரிக்கும் இந்த அறபு நாட்டு ஆட்சியாளர்களின் நிலைப்பாடு, அறபுலக ஆட்சி பீடங்களில் அறபு சியோசிஸ்டுகள்தான் அமர்த்தப்பட்டுள்ளனரா என்ற ஐயத்தை எழுப்புகின்றது. இவர்கள்தான் முஸ்லிம் உலகினதும் இரு புனிதஸ்தலங்களினதும் பாதுகாவலர்கள் என்று சுய தம்பட்டம் அடிப்பது எத்துணை [illegible] இவர்களை ஒருபோதும் மன்னிக்காது.

முஹம்மத் பின் சல்மான் இப்படியொரு மாற்று யோசனையை முன்வைத்திருப்பது அறபுலகின் மோசமான எதிர்கால வரலாறு எழுதப்படுவதற்கான தொடக்கம் என்பதை குறிப்புணர்த்தியுள்ளது.

## பொஸ்பரஸ் கரையினிலே...

### துருக்கியின் வீழ்ச்சியும் எழுச்சியும் - 23

2016 ஜூலை 15 இல் இராணுவ சதிப் புரட்சியை திரைமறைவில் நின்று திட்டமிட்ட குலான்வாதிகள் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தமது முகத்திரையை மாற்றி வருகின்றனர். இவர்கள் ஹிஸ்மத் மூமன்ட் (Hismath Movement) என்ற பெயரில் சேவை இயக்கமாகவே தம்மை வெளிநாடுகளில் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

கேந்திர முக்கியத்துவம் மிக்க ஸ்தாபனங்களைக் கைப்பற்றும் நோக்கோடு பாடசாலைகள், கல்வி, கலாசார நிறுவனங்கள், தொழில்சார் அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் முதலானவற்றில் வெளிப்படையாக செயல்படும் இவர்களது வழிகெட்ட நம்பிக்கையின்படி இத்தகைய கைங்கரியங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு எந்தவகை சூழ்ச்சிகளைச் செய்வதும் ஆகுமானதாகும். மனிதர்களை இக்கட்டில் மாட்டிவிடுதல், சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடல் அனைத்தும் ஆகுமானதாகும்.

தமது இலக்கை எப்படியாவது அடைந்து கொள்வது இவற்றை விடப் புனிதமானது. தமது உலக இமாமின் சிந்தனைகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் அமைய புதியதோர் உலகை உருவாக்கவே இவர்கள் பாடுபடுகின்றனர். பல்லாண்டு கால இரகசியப் பயிற்சி மற்றும் கடுமையான கொள்கைத் திணிப்பு, பயிற்சிகளின் பின்னர் சாதாரண மக்களால் புரிந்துகொள்ள முடியாதளவு அதிஉயர் நிபுணத்துவமுள்ள விற்பன்னர்களாக இவர்கள் மாற்றப்படுகின்றனர்.

குலான் இயக்க அங்கத்தவர்கள் அதி உன்னத தியாகத்துடன் தமது எதிர்பார்க்கப்பட்ட மஹ்தியின் கட்டளைக்கு அடிபணிகின்றனர். அத்தோடு தம்மை தனித்துவமிக்க சிறப்புப் பொருந்திய மனிதர்கள் எனக் கருதுகின்றனர். இவர்கள் எந்த அணியுடனும் இணைந்து கொள்வார்கள். தமது அடையாளங்களை தேவைக்கேற்ப மாற்றிக் கொள்வார்கள். அவர்கள் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட தயங்குவதுமில்லை. அவசியமெனில் கொலையும் செய்வார்கள்.



#### குலான்வாதிகள் இதுவரை சாதித்தது என்ன?

குறிப்பாக, கடந்த 10 வருடங்களில் இதில் அங்கத்துவம் பெற்றுள்ள நீதிபதிகள், அரச தட்டத்தரணிகள், சிவில் பாதுகாப்புத் துறையினர் ஓர் இரகசியத் திட்டத்துடன் செயற்பட்டு தமது சூழ்ச்சியுடன் ஒத்துப் போகாத ஏராளமான இராணுவத்தினரையும் பொலிஸ் உத்தியோகத்தர்களையும் சிவில் உத்தியோகத்தர்களையும் போலிக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து சிறையில் தள்ளியும் வேறு பல வழிகளிலும் தண்டித்துள்ளனர்.

2012 இல் நாட்டு நிருவாகத்தைத் தம்மால் கைப்பற்ற முடியும் என்ற அவர்களது நம்பிக்கை மேலோங்கியது. அவ்வாண்டு ஒரு முக்கிய முயற்சியை முன்னர்த்தினர். அதாவது, உளவுப் பிரிவுத் தலைவர் குர்திஷ் தீவிரவாதிகளுடன் இணைந்து சட்டத்துக்கு முரணான வகையில் செயல்படுவதாகக் குற்றம்சாட்டி, அவரைக் கைதுசெய்ய முயன்றனர். அச்சதி முயற்சியின் ஆரம்ப கட்ட நடவடிக்கையாக அமைந்த இந்நிகழ்வு தோல்வியடைந்தது. அதன் பின்னர் 2013 டிசம்பர் 17-25 வரை புனையப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்களின் பெயரில் அரசாங்கத்தின் முன்னணி உறுப்பினர்களை சட்டவிரோதமாக கைதுசெய்ய முயற்சித்தனர். அதுவும் தோல்வியிலேயே முடிவடைந்தது.

குலான்வாதிகள் சமாதானத்தை விரும்பும் மத ரீதியான ஓர் அமைப்பாக தம்மை அடையாளப்படுத்தி சமாதானம், கலந்துரையாடல் மற்றும் சகிப்புத் தன்மை போன்ற விழுமியங்களைத் தவறாகப் பயன்படுத்தி வருகின்றனர். இதனூடாக நாட்டின் பாதுகாப்பு, நீதித் துறை மற்றும் புலனாய்வுத் துறைகளில் இவர்கள் ஊடுருவி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்கா நகர் தேசிய கல்வியியற் கல்லூரி

## செத்துப் பிழைக்கும் முஸ்லிம் கல்வி

அளுத்கம, தர்காநகர் தேசிய கல்வியற் கல்லூரி 1941ஆம் ஆண்டு 'அளுத்கமை முஸ்லிம் ஆசிரியர் கலாசாலையாக' ஆரம்பிக்கப்பட்டது. சேர் ராஸிக் பரீட், டொக்டர் எம்.சி கலீல் ஆகியோரின் முயற்சியால் உருவாக்கப்பட்ட முஸ்லிம் ஆசிரிய கலாசாலைக்கென தர்காநகரைச் சேர்ந்த அல்ஹாஜ் ஐ.எல்.எம். மஹ்மூத் அவர்கள் தமது 5 ஏக்கர் காணியை நன்கொடையாக வழங்கினார். இக்கல்லூரி 1941 முதல் 1957 வரை 16 ஆண்டுகளாக முஸ்லிம் ஆண்களுக்கான ஆசிரிய பயிற்சியை வழங்கியது. அதன் பின் முஸ்லிம் பெண்களுக்கான ஆசிரிய கலாசாலையாக உருவாக்கப்பட்டு தொடர்ந்து 60 வருடங்களாக இது வரை பெண்களுக்கான கல்லூரியாகக் காணப்படுகிறது.

ஜனாப் ஐ.எல்.எம். மசூர் 1941-51 வரையிலும், ஜனாப் ஏ.ஏ.ஏ. ஜிப்ரி 1951-55 வரையிலும், மீண்டும் ஜனாப் ஐ.எல்.எம். மசூர் 1961-62 வரையிலும் அதிபராக இருந்துள்ளனர். அப்போது இது ஆண்களுக்குரிய ஆசிரிய கல்லூரியாக இருந்துள்ளது. அதைத் தொடர்ந்து 1955 முதல் பெண்களுக்குரிய ஆசிரியக் கல்லூரியாக இது மாறிய போது திருமதி ஜாரியா மன்ஸூர், திருமதி கமாலுத்தீன், திருமதி ஸுபைதா காஸிம், திருமதி ஷகூர், திருமதி அஸாரியா நுபைல், ஜனாப் வாஹித், திருமதி பௌஸிய்யா நியாஸ் ஆகியோர் அதிபர்களாக இருந்துள்ளனர். ஜனாப் வாஹித் வெளியில் தங்கியிருந்தே கல்லூரிக்கு வந்து செல்பவராக இருந் துள்ளார்.

ஆசிரிய கலாசாலைகள் மூடப்படும் திட்டத்தின் அடிப்படையில் கல்லூரி மாற்றப்பட வேண்டிய தேவை ஏற்பட்டு, கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்னர் 2001 ஆம் ஆண்டு teacher training college 'தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரி' என்ற பெயரில் மேம்படுத்தப்பட்டது. இக்கல்லூரி 2001 இல் கல்வியியற் கல்லூரியாக மாற்றப்பட்டபோது திருமதி நூருல் ஹாரிஜா 2001 முதல் 2011 ஜூன் மாதம் வரை பீடாதிபதியாக சேவையாற்றினார். அதன்பின் யூ.எல். புஹாரி 2011.06 முதல் 2014 வரை பீடாதிபதியாக இருந்தார். அவரைத் தொடர்ந்து பீ. றிஸ்வி பீடாதிபதியாக இருந்தார்.

இந்தக் கல்லூரி உருவாக்கப்பட்டது முதல் அதிபர்களாகவும் பீடாதிபதிகளாகவும் முஸ்லிம்களே இருந்துள்ளனர். 2015 ஆம் ஆண்டு இங்கு பீடாதிபதியாக இருந்த முஸ்லிம் ஒருவர் (பீ. றிஸ்வி அவர்கள்) தமது சொந்த விடுமுறையில் வெளிநாட்டுக்குத் தொழில் வாய்ப்பு பெற்றுச் சென்றதனால், தமிழர் ஒருவர் பீடாதிபதியாக தொடர்ந்து 3 வருடங்களாக இருந்து வருகிறார்.

### கல்லூரியின் இன்றைய நிலை

தர்கா நகர் தேசிய கல்வியியற் கல்லூரி உருவாக்கப்படும் போது இதில் முஸ்லிம் பெண்கள் 80%மும், தமிழ் பெண்கள் 20%மும் என அறிக்கைப்படுத்தப்பட்டு இருந்தது. அதிலும் தென் மாகாணம், மேல் மாகாணம் ஆகியவற்றின் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்களை இணைக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், தற்போது தமிழ் பயிலுநர்களின் தொகை அரைவாசி என்ற நிலையில் உள்ளதால் முஸ்லிம் பயிலுநர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரிக்கு 90 வீதமான மலைநாட்டுத் தமிழர்கள் உள்வாங்கப்படுகின்றனர். அதே சமயம் தர்காநகர் கல்லூரிக்கும் அவர்கள் நுழைக்கப்படுகின்றனர். இதனால் முஸ்லிம் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. இது என்றும் நிரப்பப்படாத செய்தியாகவே பாடசாலைகள் இயங்கும் அவல நிலையிலுள்ளது.

இக்கல்லூரி ஆரம்பிக்கப்படுகின்ற பொழுது இருந்த பாடநெறிகள் குறைக்கப்பட்டு 03 பாடநெறிகளே எஞ்சியுள்ளன.

இப்பகுதியின் பாடசாலைகளின் கல்வித் தேவைகளின் அடிப்படையில் கணிதம், விஞ்ஞானம், இஸ்லாம், கணனி ஆகியவற்றின் தேவை நிலவுகிறது. குறிப்பாக வருடாந்தம் இஸ்லாம் பாடத்திற்கு 20 ஆசிரிய பயிலுநர்களே அட்டாளைச்சேனையில் இணைத்துக் கொள்ளப்படுகிறார்கள். இந்நாட்டின் முஸ்லிம் பாடசாலைகளின் இஸ்லாம் பாட ஆசிரியர்களின் தேவையை இது நிறைவு செய்வதாகயில்லை. குறிப்பாக களுத்துறை மாவட்டத்தில் 24 வெற்றிடங்கள் இஸ்லாம் பாடத்திற்கு நிலவுகிறது.

கல்விக் கல்லூரிகளுக்கு ஆட்சேர்ப்பின்போது குறிப்பாக முஸ்லிம் பாடசாலைகளின் ஆசிரியர் பற்றாக்குறை கவனத்தில் எடுக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். 2018 பயிலுநர் ஆட்சேர்ப்பு சுற்றறிக்கை வெளியிடமுன் இது விடயமாக முன்கூட்டியே கவனமெடுத்தல் அவசியம்.

2017 ஆம் ஆண்டு பயிலுநர்களுக்கான நேர்முகப் பரீட்சை சுற்றறிக்கையில் களுத்துறை மாவட்டத்தில் முதன் மொழித் தமிழுக்காக 03 பேருக்கு வெற்றிடம் இருந்தது. அதற்காக பயிலுநர்கள் விண்ணப்பித்தும் உள்ளனர். ஆனால் யாருக்கும் கடிதம் கிடைக்காததையிட்டு கல்வியமைச்சில் விசாரித்தபோது அவற்றுக்கான வெற்றிடங்கள் ''ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு'' அனுப்பப்பட்டதாக கூறினர். ஆனால் களுத்துறை வலயத்தில் மட்டும் பாடசாலைகளில் 15 க்கும் மேற்பட்ட தமிழ்மொழி பாட ஆசிரியர் தேவையுள்ளது.

எனவே இவ்வருட புது ஆசிரிய மாணவிகளின் தமிழ் பாட நெறிக்கான (Waiting list) இல் தர்கா நகர் கல்லூரிக்கு 13 பேர் தேவைப்படுகின்றனர். எனவே இதனைக்கவனத்தில் கொண்டு துரிதமாக பிரதேச முஸ்லிம் பயிலுனர்களுக்கு முன்னுரிமை வழங்கி நேர்முகப்பரீட்சைக்கு அழைக்க ஆவன செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம். இது குறித்து கல்வி அமைச்சருடாக ஆசிரிய கல்விப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டும் எவ்வித நடவடிக்கைளும் மேற்கொள்ளப்படவில்லை.




### பௌதீக வளப்பற்றாக்குறை மற்றும் ஏனைய வளப்பற்றாக் குறைகள்

#### போதிய விடுதி வசதி இல்லாமை.

இக்கல்லூரியில் தற்போது 318 ஆசிரிய பயிலுநர்கள் கற்று வருகின்ற நிலையில் வளங்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. பயிலுநர்கள் தம் அடிப்படை தேவைகளை பூர்த்திசெய்து கொள்ள முடியாத அவலநிலை இங்கு தொடர்கிறது. பயிலுநர் விடுதியில் இடநெருக்கடி நிலவுகின்றது. 100 பேர் ஒரே விடுதியில் இருக்க, அவர்களுக்கு 2 குளியலறைகளே காணப்படுகின்றன. அத்தோடு விடுதிகளில் மலசலகூடங்களின் பற்றாக்குறையும் நிலவுகிறது. விடுதியில் சிறிய அறைகளில் கூடுதலான பயிலுநர்கள் தங்கியிருப்பதால் பல வகையான இடர்பாடுகளை அவர்கள் சந்தித்து வருகின்றனர்.

#### தண்ணீர் வசதிகளின்மை

இக்கல்லூரியில் தண்ணீர் வசதிக் குறைபாடு நிலவுகிறது. பழைய கிணறுகள் புனர்நிர்மாணம் செய்யப்படாத நிலையில் காணப்படுகின்றது. அதில் ஒரு கிணறு சுகாதார பரிசோதகரால் மூடப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மஞ்சள் நிற நீரைப் பயன்படுத்தும் பயிலுநர்கள் அடிக்கடி தோல் நோய், காய்ச்சல் போன்ற தொற்று நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். இன்னும் இங்கு அடிக்கடி நீர் துண்டிக்கப்படுவதாகவும் நீர்ப்பற்றாக்குறை நிலவுவதாகவும் தெரிய வருகிறது.

#### பழைய கட்டிடங்கள்

ஆசிரிய பயிலுநர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் தங்கும் விடுதிகள், நிர்வாகக் கட்டிடங்கள் சகலதும் ஆசிரிய கலாசாலை ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களாகவே காணப்படுகின்றன. ஆசிரிய கலாசாலை கட்டப்பட்ட கட்டிடத்திலேயே வாசிகசாலைக் கட்டிடம் உள்ளது. இது நவீனமயப்படுத்தப்படாத நிலையில் உள்ளது. அத்தோடு வகுப்பறை வசதிகள் சரியான முறையில் இல்லை. ஆரம்பகாலத் தளபாடங்களே இன்றும் உள்ளது. இதை விட பாடசாலை வகுப்பறைகள் சிறந்த நிலையில் இருப்பதை எம்மால் ஊகித்துக்கொள்ள முடிந்தது. கணனிப் பாடம் இருந்தும் அதற்கான விரிவுரையாளர்களோ, கணினி வசதிகளோ இல்லாமல் இருக்கிறது. கணனிக் கூடத்தில் ஒரேயொரு கணனியே இயங்குநிலையில் உள்ளது.

#### ஏனைய வளப்பற்றாக் குறை

சிற்றுண்டிச்சாலை வசதிகள் எதுவும் இல்லாத நிலையில் கல்லூரி இயங்கி வருகிறது. அதற்கான கட்டிட வசதிகளும் இல்லை. அத்தோடு ஏனைய கல்லூரிகளில் வழங்கப்படுவது போன்று போக்குவரத்து (பஸ்) வசதிகள் இல்லை. கற்றல் துணைச்சாதனங்களின் குறைபாடுகளும் இங்கு பெருமளவில் நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. தர்காநகர் தேசியக் கல்வியற் கல்லூரியின் பீடாதிபதி தமிழராகவும், உப பீடாதிகளில் கல்விக்குப் பொறுப்பானவர் தமிழராகவும், மற்றையவர் முஸ்லிமாகவும், காணப்படுவதோடு முஸ்லிம் விரிவுரையாளர்கள் 06 பேரும், தமிழ் விரிவுரையாளர்கள் 04 பேரும், ஒரு சிங்கள விரிவுரையாளரும் கடமையாற்றி வருகின்றனர். 27 விரிவுரையாளர்களின் தேவை இருக்க 15 பேர்களே கடமையாற்றி வருகின்றனர்.

மேலும் கல்லூரியில் கடந்த 2013ஆம் ஆண்டு பெறுபேறுகளின் அடிப்படையில் 170 ஆசிரிய பயிலுநர்களில் 30 தமிழ் மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். ஆனால் இவ்வாண்டு 2014ஆம் ஆண்டு பெறுபேறுகளின் அடிப்படையில் 148 பயிலுநர்களில் 65 தமிழ் மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். தமிழ் மாணவர்களின் தொகை தர்காநகர் கல்லூரியில் இம்முறை இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது. அத்தோடு waiting list இல் உள்வாங்கப்பட்ட அனைவரும் தமிழ் மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பீடாதிபதியின் தலைமையில் கல்லூரி தமிழ் கல்லூரியாக மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டு வருகின்றது.

கடந்த மாதத்தின் இறுதிப்பகுதியில் ஆணையாளர் மற்றும் குழுவினர் கல்லூரிக்கு திடீரென விஜயம் செய்துள்ளனர். அவர் கல்லூரியைக் கண்டு ஆச்சரியப்பட்டதுடன் துரிதமாக கல்லூரியில் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளார். அன்றைய தினம் 50 இற்கு மேற்பட்ட பயிலுநர்கள் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் அதைக்கண்டு அவர் மனம் வருந்திய நிலையில் பீடாதிபதிக்கும் கல்லூரி நிர்வாகத்திற்கும் காரசாரமாக ஏசியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.




அத்துடன் முஸ்லிம் பெண்களுக்காக உருவாக்கப்பட்ட இக்கல்லூரியில் இனிவரும் காலங்களில் ஆண்மாணவர்களை சேர்த்துக் கொள்ளுமாறும் முஸ்லிம்களின் தனித்துவ அடையாளமாக விளங்கும் இக்கல்லூரியிலே தமிழ் மாணவர்கள் இணைந்து கற்பதோடு, சிங்கள ஊழியர்களும் வேலை செய்வதால் துரிதமாக கோயிலொன்றும், புத்தர் சிலையும் அமைக்கப்பட வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளார். இதனடிப்படையில் முதற்கட்ட பேச்சுவார்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இங்கு முஸ்லிம்களது கலாசார விடயங்கள் மெல்லச் சாவடிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. முஸ்லிம் ஆசிரியர் கலாசாலையாக துவங்கப்பட்ட கல்லூரி முஸ்லிம்களது கல்லூரி இல்லையென்றும் அது மொழிகளை போதிக்கும் கல்லூரி எனவும் பரவலாக கதைக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்படுகிறது. விடுதிகளுக்கு பொறுப்பாக உள்ள 3 விடுதிக் காப்பாளர்களும் இது முஸ்லிம்களின் கல்லூரியல்ல என்றும் அடிக்கடி கூறி வருவதாகவும் நம்பந் தகுந்த செய்திகள் தெரிவிக்கின்றன. அத்தோடு இவை குறித்து அங்குள்ள முஸ்லிம் விரிவுரையாளர்களும் கண்டுகொள்வதில்லை என்றும் அவர்களுக்குள்ளால் நிறைய கருத்து வேறுபாடுகள் நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### இக்கல்லூரியின் தேவைகள்

எனவே இக்கல்லூரிக்கு உடனடியாக தகுதி வாய்ந்த முஸ்லிம் ஒருவர் பீடாதிபதியாக நியமிக்கப்பட வேண்டியுள்ளது. கல்லூரியின் வாசிகசாலையில் சிங்கள மொழி தெரிந்த நான்கு பேர் இருப்பதால் வாசிகசாலைக்கு தமிழ் தெரிந்த அலுவலர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

விடுதிக் காப்பாளர்களாக 3 சிங்கள சகோதரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே இவர்கள் நீக்கப்பட்டு விடுதிக்காப்பாளர்கள் முஸ்லிம் பெண்களாக இருப்பது நல்லதென்ற கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

சமையல் ஊழியர்கள் 11 பேர்கள் இருக்க வேண்டிய இடத்தில் 06 பேர்கள் தற்போது இருக்கின்றனர். மேலும் 05 பேர் நியமிக்கப்பட வேண்டிய தேவை இருக்கின்றது. அதிலும் முஸ்லிம்கள் ஒருவரே இருக்கின்றார். அவரும் இவ் வருடம் ஓய்வுபெறும் நிலையில் உள்ளார். நோயாளர்களை கவனிப்பவர் (Sick Room Atten dance) மூன்று பெண்களின் தேவை இருக்கின்றது. அதில் ஆண் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு அங்கு செல்ல அனுமதி இல்லாதலால் அவர் வேலையின்றி சும்மா சம்பளம் பெறுகிறார். எனவே இங்கு முஸ்லிம் பெண்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளனர்.

சுத்தம் செய்யும் சிற்றூழியர்கள் 05 பேர்கள் தேவைப்படும் இடத்தில் 03 பேர்களே இருக்கின் றனர். Plumbing, Store Keeper, Librarian -3, Registrar, Language Translator, Building Supervisor, Machine operator, Office Assistance- 3, Sanitary Laborer (Lady) 01, Gent -01 மேற்படி வெற்றி டங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படாமலே உள்ளன.

விரிவுரையாளர் பற்றாக்குறை நிலவுவதால் மேலும் 12 விரிவுரையாளர்கள் தேவைப்படுகின்றனர். பழைய கட்டிடங்கள் நீக்கப்பட்டு புதுக்கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படவேண்டும். குளியலரை உட்பட கழிவறைக் குறைபாடு நிவர்த்தி செய்யப்பட வேண்டும். அத்துடன், Food Technology Lab நிர்மாணிக்கப்பட வேண்டும். Canteen மற்றும் Visitors Lodge நிர்மாணிக்கப்பட வேண்டும். வகுப்பறை இடவசதி போதமலுள்ளது. விடுதிகள் (பயிலுநர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும்) நிர்மாணிக்கப்பட வேண்டும். Perants and Guardians and Rooms தேவையாக உள்ளது. இது தவிர, வாகனத் தரிப்பிட கட்டிடம், கணினிக்கூடம், பீடாதிபதி விடுதி ஆகியன நவீனமயப் படுத்தப்பட வேண்டும். சிற்றூழியர் ஓய்வறையும் நோயாளர் அறையும் தேவையாக உள்ளது.

### முடிவாக

எமது சமூகத்தின் பாரம்பரியச் சொத் தாக உள்ள தர்காநகர் தேசிய கல்வியற் கல்லூரியை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம் அனைவருக்கும் உள்ளது. நாட்டின் ஏனைய கல்வியற் கல்லூரி களில் சிறந்த வசதிவாய்ப்புகள் ஏற்படுத் தப்பட்டுள்ள நிலையில் தர்காநகர் கல்வியற் கல்லூரி மாத்திரம் ஏன் இன்னும் மாற்றாந்தாய் பிள்ளை போல் கவனிக்கப்பட்டு வருகின்றது? முஸ்லிம் சமூகம் இனியாவது விளிக்க வேண் டும்.

எமது சமூகத்தின் அரசியல் தலைமைகள் இக்கல்லூரி எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். துவக்க காலத்தில் முஸ்லிம் சமூகத்தலைமைகள் அந்தந்த ஆட்பீடங்களுக்கு விசுவாசமாக இருந்து எமக்கென்று சில உரிமைகளை பெற்றுத் தந்துள்ளார்கள். இவ்வுரிமைகளை அன்றைய பெரும்பான்மை மற்றும் ஏனைய சிறுபான்மை மக்களும் அங்கீகரித்துள்ளனர். ஏனைய இனத்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது போன்று எமக்கான சில பாரம்பரிய உரிமைகளும் உள்ளன. அவை வரலாற்றில் தோற்றிய தலைவர்களால் கட்டிக்காக்கப்பட்டு வந்துள்ளன.

ஆனால் பிற்பட்ட காலங்களில் ஒரு சிலரின் குறுகிய நோக்கங்களுக்காக எமது உரிமைகள் மறக்கப்படிக்கப்பட்டு வருகின்றன. இன்று பெரும்பான்மை முஸ்லிம்களால் தெரிவுசெய்யப்பட்ட நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் இது போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வுகள் பெறப்படாமல் இருப்பது உண்மையில் துரதிஷ்டம். ஆதனால் தர்காநகர் தேசிய கல்வியயற் கல்லூரியில் நிலவி வரும் பிரச்சினைகள் தொடர்பில் உரிய கவனங்களை செலுத்தி அதற்கு விரைவில் தீர்வுகளை பெற்றுக்கொடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களிடமும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்களிடமும் வேண்டுகோள் விடுக்கின்றோம். இதனை எத்திவைக்கும் பொறுப்பு முஸ்லிம் சமூக அரசியல் தலைமைகளையே சாரும்.

- ஹெட்டி ரம்ஸி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும் போதே வாழ்த்தப்படும் ஆளுமை கலாபூஷணம் N.M. அமீன்

• அனஸ் அப்பாஸ்



கலாபூஷண விருது எழுத்து, சங்கீதம், திரைப்படம், நாடகம், சித்திரம், இப்படி கலைத் துறைகளில் பங்களித்தவர்களுக்கு பல்வேறு மட்டத்தில் வழங்கப்படுகின்றது. இந்நிலையில் மறைந்த ஆயுர்வேத வைத்தியர் S.A.R. நிஸாம்தீன் உடையார் - ஹாஜியாணி மர்யம் பீபி ஆகியோரின் மூத்த புதல்வராக அரநாயக்க, தல்கஸ்பிட்டியில் பிறந்து, மக்கள் அபிமானம் வென்ற சிரேஷ்ட ஊடகவியலாளர், முஸ்லிம் சமூகத்தின் மூத்த தலைமைகளுள் ஒருவராகத் திகழும் சமூக செயற்பாட்டாளர் அல்-ஹாஜ் என்.எம். அமீன் அவர்கள் அண்மையில் இடம்பெற்ற தேசிய விருது வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவினால் கலாபூஷண விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

60 வயதிற்கு மேற்பட்ட கலைஞர்களால் கலாசார திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்களில் இருந்து தெரிவாகி, பேராசிரியர்கள் ஆரியரத்ன கலுஆரச்சி, பெட்ரிக் ரத்னாயக்க, ஜடசுமண திஸ்ஸாநாயக்க ஆகிய மூவர் அடங்கிய குழுவால் உறுதிப்படுத்தப்படுபவர்களுக்கே இது வரை விருதுகள் கிடைத்தன. இம்முறை மேலதிகமாக இக்குழுவால் 40 பேர் விண்ணப்பமின்றி கலாபூஷண விருதுக்கு பிரேரிக்கப்பட்டனர். அந்த 40 பேரில் தகுதிபெற்ற விருது பெறும் ஒரேயொரு முஸ்லிம் அல்-ஹாஜ் என்.எம். அமீன் அவர்களே.

அடைவுகளே ஒரு மனிதனை சமூகத்துக்கு அடையாளப்படுத்தும். கலாபூஷணம் அமீன் அவர்கள் தனது அடைவுகளால் வென்ற அடையாளங்களையும் ஒரு அடைவாகப் பெற்றிருப்பதே சிறப்புக்குரிய அம்சமாக இங்கு நோக்க வேண்டியதாகும். ஆரம்பக் கல்வியை தல்கஸ்பிட்டிய முஸ்லிம் மகா வித்தியாலயம், ஹெம்மாதகம அல்-அஸ்ஹர் மகா வித்தியாலயம், மாவனெல்லை ஸாஹிராக் கல்லூரியிலும் கற்றதைத் தொடர்ந்து களனி பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை பூர்த்தி செய்தார் கலாபூஷணம் அமீன். பின்னர், லேக் ஹவுஸ் பிரசுரமான தினகரனில் இணைந்து அங்கு முகாமைத்துவ ஆசிரியர் பதவி வரை உயர்ந்து, 33 வருடங்கள் பணியின் பின் ஒய்வு பெற்றார். தற்போது நவமணி பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும், பணிப்பாளராகவும் 20 வருடங்களுக்கு மேலாப் பங்காற்றுகின்றார்.

**களனி பல்கலைக்கழக கற்கைக் காலத்தில்...**

- தாஜ்மஹால் சன சமூக நிலையத்தின் செயலாளர் (தல்கஸ்பிட்டிய சமூக எழுச்சித் திட்டங்கள்)
- தமிழ்ச் சங்க ஸ்தாபக பங்களிப்பு
- முஸ்லிம் மஜ்லிஸ் ஸ்தாபக பங்களிப்பு
- அனைத்து முஸ்லிம் மஜ்லிஸ்களதும் ஒருங்கிணைப்புக் குழு தலைவர்
- அனைத்து பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ்களதும் களனிப் பல்கலைக் கழக பிரதிநிதி
- மாணவர் சங்கத் தேர்தலில் இருமுறை வெற்றி
- கலைப் பீட சங்க உதவிச் செயலாளர்
- மாணவர் சங்க பத்திரிகை ஆசிரியர்

**பல்கலைக்கழக கற்றலுக்குப் பின்னர்...**

- அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிபர் முன்னணி (ACMLYF)யின் நிர்வாகச் செயலாளர்
- அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிபர் முன்னணியின் பொதுச் செயலாளர்
- ACMLYF இல் பாக்கிர் மாக்காருடன் இணைந்து 800 இற்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு விஜயம்
- வாலிபர் ஒன்றியத்தின் செயலாளர் (மாதாந்த விரிவுரைகளை நடாத்த பங்களிப்பு (அரசியல் மேம்பாடு)
- நான்கு பருவத்திற்கு மேல் வாலிபர் ஒன்றியத்தின் தலைவர்
- அகதிகள் நிவாரண நிலையத்தின் செயலாளர்
- இளைஞர் அமைப்புக்களின் ஒன்றியம் (பாமீஸ்) இன் உப தலைவர்
- பாமீஸ் அகதிகள் நிவாரண குழு தலைவர் (லிபிய அரசு அனுசரணை)
- முஸ்லிம் மீடியா போரத்தின் செயலாளர் (33 அங்கத்தவர்களுடன் முஸ்லிம் மீடியா ஃபோரத்தை உருவாக்க பங்களித்தார், 21 வருடங்களில் தற்போது சுமார் 850 அங்கத்தவர்கள்)
- SLMMF - ACMLYF இணைந்து RRC உருவாக்கம் (24 மணி நேர சுனாமி நிவாரணம்)
- RRC இன் பரிணாமத்தில்முஸ்லிம் கவுன்சில் (முஸ்லிம் சிவில் அமைப்புக்களின் கூட்டு) உருவாக்கம்
- இலங்கை பாராளுமன்றத்தின் பத்திரிகையாளர் சங்க செயலாளர்
- முஸ்லிம் கல்வி மாநாடு புனர் ஸ்தாபனங்களிப்பு
- இலங்கை தெற்காசிய ஊடக அமைப்பின் - இலங்கையின் வதிவிட அமைப்பாளர்

**தற்போதைய பதவிகள்**

- முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீ லங்கா' வின் தலைவர்
- ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா ஃபோரத்தின் தலைவர்
- பாலஸ்தீன ஒருமைப்பாட்டு இயக்கத்தின் உப தலைவர்
- நவமணி பத்திரிகையின் பிரதம ஆசிரியர்

''கடும்போக்கு அமைப்புக்களுடன் 5 வருடங்களுக்கு மேலாக கலந்துரையாடிய அனுபவம் இருக்கின்றது. 1000 வருடங்கள் இந்நாட்டில் முஸ்லிம்கள் வாழ்ந்தபோதும் எமது வழிபாடு, நடைமுறைகள் தொடர்பில் உரிய தெளிவை பிற சமூகங்களுக்கு தெளிவுபடுத்தத் தவறிவிட்டோம். இதன் விளைவாக சர்வதேச நிகழ்வுகளுடன் இலங்கை முஸ்லிம்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் மனோபாவம் இலங்கை பெரும்பான்மையினரிடம் வளர்ந்திருக்கின்றது. இதில் ஆன்மீக இயக்கங்களுக்கு பாரிய பொறுப்பு இருக்கின்றது. தனது வழிகாட்டலில் செயற்படும் மக்கள் தொடர்பில் இவர்கள் மீள்பரிசீலனை செய்ய வேண்டும். அவர்களை நெறிப்படுத்த வேண்டும்.''

''அரசியலைப் பொருத்த மட்டத்தில் தேசிய நீரோட்டத்தில் எமது கால்கள் பதிய வேண்டும். தனித்துவ கட்சிகள் இன்றைய சூழலில் தேவையா என்பது குறித்த மீளாய்வு அவசியம். A.C.S ஹமீட் அவர்கள் குறிப்பிட்டது போல ''கேக்கை வெட்டும் கத்தி எம்மிடம் இருந்தால் தான் நாம் விரும்புவதுபோல் சாப்பிட முடியும்''. தேசிய கட்சிகளில் தீர்மானமெடுத்தல் சபைகளில் நாம் பங்குபெற வேண்டும். 21 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தும், சரியான அழுத்தத்தை கொடுக்கத் தவறியதால் புதிய தேர்தல் முறையில் சிறுபான்மை பாதிக்கப்படும் அபாயம் இருக்கின்றது.

எமது இளைஞர்கள் ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய தேசிய கட்சிகள் அனைத்திலும் இணைந்து போட்டியிட வேண்டும். வருகின்ற உள்ளூராட்சி தேர்தலிலும் சமூகம் பிளவுபட்டுக் கொண்டிருக்கின்றது.

முன்னர் வாழ்ந்த எமது அரசியல்வாதிகள் அரசியல்ரீதியில் பிளவுபட்டாலும், சமூகம் என்று ஒன்றுபட்டு, பெரும்பான்மையுடன் சிறந்த உறவை பேணியதால் இன்று பல சலுகைகளையும், சிறந்த சட்டங்களையும் நாம் பெற்றுள்ளோம். அந்நிலை மீண்டும் உதயமாக வேண்டும்'' என நம்மை நோக்கி மொழிகின்றது பல்லின உறவை சிறப்புடன் பேணும் அவரது மனசாட்சி.

கலாபூஷணம் அமீன் அவர்களின் மனைவி கொழும்பு D.S. சேனாநாயக்க கல்லூரியில் தமிழ் பிரிவின் ஆசிரியையாக பணியாற்றி அண்மையில் ஓய்வு பெற்றார். இவர்களுக்கு மூன்று பிள்ளைகள். மகன் அஸ்லாம் அமீன் BBC செய்திச் சேவையின் இலங்கை பொறுப்பாளராக இருக்கின்றார். மகள் அஸ்ரா திருமணமாகி தற்போது லண்டனில் வசிக்கிறார். அடுத்து, மகன் அஸீம் அமீன் கொழும்பு பல்கலைக்கழகத்தில் இறுதி யாண்டு மாணவனாக இருக்கின்றார்.

ஒரு காலத்தில் அரசியலில் ஈடுபடும் ஆர்வமும் அக்கறையும் கலாபூஷணம் அமீனுக்கு இருந்தது. சப்ரகமுவ மாகாண சபைக்கு சந்தர்ப்பமும் கிடைத்தது, இருந்தாலும் குறித்த அரசியல்வாதி ஒருவரின் தலையீட்டால் அது பறி போனது. அரசியலில் ஈடுபட முடியாவிட்டாலும், சமூக சேவையில் தொடராகப் பங்களித்த ஆத்ம திருப்தியை தொடர்ந்தும் இளைய தலைமுறைக்கு பகிர்வதால் கலாபூஷணம் அமீன் அவர்கள் அக மகிழ்கின்றார்.

# பள்ளிவாசல் சம்மேளனங்களின் முக்கியத்துவம் உணரப்பட வேண்டிய காலம்

• இப்னு மரைக்கார்



இலங்கை நாலா புறமும் கடலால் சூழப்பட்ட தீவு நாடாக இருந்த போதிலும் கூட இங்கு பல்லின மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அதுவும் ஆயிரம் வருடங்களுக்கும் மேலாக இந்நாட்டில் முஸ்லிம்கள் வாழ்கின்றனர். சிங்களவரைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்நாட்டில் இற்றைவரையும் இரண்டாவது சிறுபான்மையினராகவே -அதாவது தமிழர்களுக்கு அடுத்தபடியான சிறுபான்மையினராகவே முஸ்லிம்கள் உள்ளனர்.

இரண்டு கோடி மக்கள் தொகையைக் கொண்ட இந்நாட்டில் 9.7 வீதத்தினர், -அதாவது 20 இலட்சம் பேர் முஸ்லிம்களாவர். இம்முஸ்லிம்களின் குடிப் பரம்பலை எடுத்து நோக்கினால், அவர்கள் நாட்டிலுள்ள எல்லா மாவட்டங்களிலும் பெரும்பான்மை சமூகத்தினருடன் ஒற்றுமையாகவும் புரிந்துணர்வுடனும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். எந்தவொரு மாவட்டமும் தனியே முஸ்லிம்களைக் கொண்டதாக இல்லை.

அந்தப் பின்புலத்தில் பள்ளிவாசல்களை அடிப்படையாகக் கொண்டு ஊர் நிர்வாகக் கட்டமைப்புக்களை உருவாக்கி முஸ்லிம்கள் வாழ்ந்தனர். இந்நிர்வாகக் கட்டமைப்பு கல்வி அறிவில் பெரிதும் பின்னடைந்திருந்த இந்நாட்டு முஸ்லிம்கள் தம் சமய, கலாசார அடையாளங்களைப் பாதுகாத்து வாழ பெரிதும் உதவின. இல்லாவிட்டால் இந்நாட்டு முஸ்லிம்களில் பெரும்பகுதியினர் ஏனைய சமூகங்களுக்குள் கரைந்து போயிருப்பர் அல்லது மதமாற்றத்திற்கு ஆளாகியிருப்பர். இதுவே இந்நாட்டு முஸ்லிம் முன்னோர்களின் கருத்தாகும்.

ஏனெனில், இதர சமூகங்கள் வாழும் பிரதேசங்களுக்கு மத்தியிலும் அவர்களுக்கு அருகிலும், அவர்களுடன் சேர்ந்தும் வாழும் போது அவர்களது சமய, கலாசார, விழுமியங்களில் கலந்துகொள்ளும் நிலைமை இயல்பாகவே ஏற்படும். அவற்றின் கவர்ச்சியால் சிலர் அச்சமய நிகழ்வுகளில் ஈர்க்கப்படலாம். அத்தோடு அவர்களது நடத்தைகளும், பழக்க வழக்கங்களும் முஸ்லிம்களுக்குள்ளும் ஊடுருவவே செய்யும். அவை மத மாற்றத்திற்கும் வழிவகுக்கும்.

இந்நிலைமையை உணர்ந்த அன்றைய முஸ்லிம்கள், பள்ளிவாசல் ஊர் நிர்வாகக் கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டு சில ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர். அதாவது கல்வி அறிவில் இந்நாட்டு முஸ்லிம்கள் வீழ்ச்சி அடைந்திருந்த காலப்ப[illegible] வேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறான ஏற்பாடுகளில் ஒன்று தான் இன்றும் சில முஸ்லிம் பிரதேச பள்ளிவாசல்களில் காணப்படும் கொடியேற்றமும் அது தொடர்பான விழாவுமாகும்.

அதாவது ஒரு காலத்தில் கொடியேற்றம், கூடு எடுத்தல் என்பவற்றிற்கு புத்தளம் தொகுதியிலுள்ள மதுரங்குளி, கணமூலை, நல்லாந்தழுவை, விருதோடை, புழுதிவயல் ஆகிய கிராமங்கள் பெயர் பெற்று விளங்கின. இந்நிலைமை 1980கள் வரையும் நீடித்த போதிலும் நல்லாந்தழுவையில் மாத்திரம் இந்நிகழ்வு இன்றும் காணப்படுகின்றது.

ஆனால் இதே கொடியேற்றம் மற்றும் அது தொடர்பான விழா கிறிஸ்தவ தேவாலயங்களிலும் பெரு விழாவாக இடம்பெறுகின்றது. அப்படியென்றால் பள்ளி [illegible] கிறிஸ்தவ தேவாலயங்களுக்குச் சென்றதா? அல்லது கிறிஸ்தவ தேவாலய கொடியேற்றக் கலாசாரம் முஸ்லிம் பள்ளிவாசல் வளாகங்களுக்கு வந்ததா? என்றொரு வினா எழுகின்றது. அது நியாயமான வினாவே.

இவ்வாறான பின்புலத்தில் விருதோடையில் வசித்து வந்த மர்ஹூம் நெய்னா முஹம்மத்திடம் இது தொடர்பில் ஒரு முறை வினவிய போது அவர் இவ்வாறு கூறினார்.

''விருதோடைக்கு மேற்கிலும், நல்லாந்தழுவைக்கு வடக்கிலும், நல்லாந்தழுவைக்கு அருகிலும் ஒரு கிறிஸ்தவ தேவாலயம் உள்ளது. அக்காலத்தில் அத்தேவாலயத்தில் பெரு எடுப்பில் கொடியேற்றமும் அது தொடர்பான விழாவும் இடம்பெற்று வந்தன. ஆனால் அக்காலப் பகுதியில் விருதோடையிலோ நல்லாந்தழுவையிலோ பள்ளிவாசல்களில் கொடியேற்ற விழா இடம்பெறவில்லை.

இவ்வாறான நிலையில் இத்தேவாலயத்தின் கொடியேற்ற விழாவில் இப்பிரதேச முஸ்லிம்களும் கலந்து கொள்ளும் நிலைமை ஏற்பட்டது. இது அவர்களது சமய கலாசார நிகழ்வுகளில் ஈர்க்கப்பட்டு முஸ்லிம்கள் மத மாற்றங்களுக்கு உள்ளாகக் கூடிய அச்சுறுத்தலைத் தோற்றுவித்தது. அத்தோடு முஸ்லிம்கள் வசிக்கும் பிரதேசத்திற்கு அருகில் அத்தேவாலயம் காணப்படுவதும் முஸ்லிம்கள் அதன் வைபவங்களில் கலந்துகொள்ள வழிவகுத்தது. இதன் பின்விளைவுகளை உணர்ந்த அன்றைய முஸ்லிம் முக்கியஸ்தர்கள் இத்தேவாலய கொடியேற்றம் மற்றும் அது தொடர்பான விழாவில் முஸ்லிம்கள் கலந்து கொள்வதைத் தவிர்க்கும் ஒரே நோக்கில் விருதோடையிலும் நல்லாந்தழுவையிலும் பள்ளிவாசல்களில் கொடியேற்றத்தையும் அது தொடர்பான விழாவையும் ஆரம்பித்ததாக எமது முன்னோர்கள் கூறினர்'' என்று குறிப்பிட்டார்.

இதன்படி முஸ்லிம்களைச் சமய, கலாசார ரீதியில் பாதுகாப்பதை நோக்காகக் கொண்டே இக்கொடியேற்ற விழா ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றது என்பது தெளிவாகின்றது. இதேபோன்று பள்ளிவாசல் நிர்வாக சபைகள் ஊர்க் கட்டுப்பாடு என்ற அடிப்படையில் இன்னும் சில சட்ட விதிகளைக் கூட நடைமுறைப் படுத்தி வந்தன. அதாவது வட்டி. சூதாட்டம், மதுப்பாவனை, விபசாரம் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டன. காணித் தகராறுகள், எல்லைப் பிரச்சினைகள் கூட பள்ளி நிர்வாக சபைகள் ஊடாகத் தீர்த்து வைக்கப்பட்டன.

(பக்.12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



• முஹம்மத் பகீஹுத்தீன்



# அரபு வசந்தம்

## விடியலுக்கான தொடக்கப் புள்ளி

அரபுலக அரசியல் விவகாரங்களையும், குறிப்பாக சவூதி அரேபியாவின் அதிரடி மாற்றங்களையும் பார்க்கும் போது அங்கே என்ன நடக்கிறது என்பது புரியாத புதிராகத் தோன்றும். நம்பவே முடியாத பல மாற்றங்கள் நடந்து முடிந்துள்ளன. இந்நிலையில் பொதுவாக அறபுலகின் எதிர்காலம் குறித்த ஒரு வாசிப்பாகவே இந்த ஆக்கம் அமைகிறது.

வரலாற்றை கொஞ்சம் பின்னோக்கிப் பார்க்கும் போது, ஐரோப்பிய மக்கள் புரட்சிக்கு ஜனநாயக ஒழுங்கை கட்டியெழுப்ப சுமார் ஒரு நூற்றாண்டு காலம் தேவைப்பட்டது. அவ்வாறே மேற்குலகில் தோன்றிய ஏனைய புரட்சிகளும் காலம் பல கடந்தாலும் அடிமைத் தளையிலிருந்து விடுதலையை வாங்கிக் கொடுத்தன.

ஆனால் திட்டமிட்ட சதிப் புரட்சிகள் ஊடாக உஸ்மானிய சாம்ராஜ்யம் வீழ்ந்தது. அதன் விளைவாக மேற்கில் உதித்த ஜனநாயக ஒழுங்கு அறபுலகில் மலரவில்லை. இராணுவ ஆட்சியும் மன்னராட்சியும் அறபுலகில் பாதுகாப்பாக வாழ்ந்தன. மேற்கு அதற்கு வேலியாக இருந்தது.

இரும்புக் கரங்களின் அடிமை வாழ்வில் வெதும்பிய அறபு மண்ணின் மைந்தர்களுக்கு விடியலைத் தரும் வெண்புறாவாக அறபு வசந்தம் 2011 இல் வெடித்தது. தூனிசியாவில் தொடங்கிய மக்கள் எழுச்சி லிபியா, எகிப்து, யெமன், சிரியா என வியாபித்தது. அதன் விளைவாக சர்வாதிகார ஆட்சியாளர்கள் மண்ணைக் கவ்வினார்கள். சுதந்திர தாகத்தோடு போராடிய அறபுலக மக்களுக்கு அரபு வசந்தம் இறையருளாகவே அமைந்தது.

மக்களின் நாட்ட சக்தி திரட்சி பெற்று, பொங்கி வந்து ஜனநாயக நீரோட்டத்தை நோக்கிப் பயணிப்பதை அமெரிக்க நிர்வாகம் மற்றும் சியோனிஸ சக்திகள் விரும்பவில்லை என்பது எப்படிப் போனாலும், அது அவர்களின் வயிற்றில் புளியைக் கரைத்தது. கொழுந்து விட்டெரியத் தொடங்கிய அறபு வசந்தத்தை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும் என அமெரிக்கா வரிந்து கட்டிக் கொண்டு களத்தில் இறங்கியது.

அதற்குக் காரணம் மேற்குலகின் சுய நலமே தவிர வேறு ஒன்றுமில்லை. வளங்களைச் சுரண்டுவதும் வளைகுடா பிராந்தியத்தை தங்களது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வதும் அமெரிக்க நிர்வாகத்தின் ஆசையாகும். வளைகுடாவில் இஸ்ரேலின் இருப்புக்கும் பாதுகாப்பிற்கும் முதன்மை இடம் கொடுப்பது இன்னொரு தீராத ஆசையாகும்.

முஸ்லிம்களை முஸ்லிம்களது கைகளாலேயே அழிப்பதும், முஸ்லிம்களுக்கு முஸ்லிம்களே முதல் எதிரிகள் என காண்பிப்பதும், முஸ்லிம்களை உலக அரங்கில் பயங்கரவாதிகள் என நிறுவுவதும் அமெரிக்காவின் உயர் இலக்குகளாகும். அந்த வகையில் அறபுலகில் ஜனநாயகம் மலர்வதை அவர்கள் என்றும் எதிர்த்தே வந்தார்கள்.

அறபு வசந்தத்தின் தொடரில் எகிப்தில் ஏற்பட்ட மாற்றம் குறிப்பிடத்தக்கதாகும். 2011 ஜனவரி 25 இல் எகிப்தில் மக்கள் புரட்சி வெடித்தது. சுமார் 80 வருடகால இராணுவ சர்வாதிகாரத்தில் அவஸ்தைப்பட்ட எகிப்து மக்கள் அருள் நிறைந்த அறபு வசந்தத்தின் மூலம் சர்வாதிகாரி ஹுஸ்னி முபாரக்கை பதவியில் இருந்து தூக்கி வீசினார்கள். முபாரக் சுமார் 30 ஆண்டு காலம் எகிப்தின் நவீன பிர்அவ்னாக தன்னை நிலைநிறுத்தியிருந்தார்.

1922 இல் சுதந்திரம் அடைந்த எகிப்தில் கடந்த 80 ஆண்டு காலமாக எந்தவொரு ஜனநாயகத் தேர்தலும் நடாத்தப்படவில்லை. ஊழலும் மோசடிகளும் நிறைந்த இந்நாட்டில் ஜனநாயகம் மலர்வதை மேற்கு நாடுகள் ஆதரிக்கவும் இல்லை.

புரட்சியின் விளைவால் பதவிக்கு வந்த ஜனாதிபதி முர்ஸியை சதிப் புரட்சியின் மூலம் சிறைக்கு அனுப்பிவிட்டு பதவிக்கு வந்த ஸீஸீ இதுவரை ஸ்திரமான அரசியலை உருவாக்க தவறி விட்டார். வறுமை, வேலையில்லாப் பிரச்சினை, விலைவாசி என ஏகப்பட்ட பிரச்சினைகளின் மடியாக எகிப்து தற்போது மாறியுள்ளது. சுமார் 6000 அப்பாவிப் பொதுமக்களை ஸீஸீயின் இராணுவம் படுகொலை செய்தது. கத்தக் கதற சுட்டுப் பொசுக்கிய சடலங்களை நகரசபை கழிவகற்றும் வண்டியில் அள்ளிக் கொட்டிய ஸீஸீ மீது ஷுஹதாக்களின் இரத்தம் சாபமாக வழிந்தோடும்போது உருப்படியான அரசை அவன் எப்படிக் கொண்டு வர முடியும்.

2011 இல் பொங்கிப் பிரவாகித்து வந்த அறபு வசந்தம் இன்று எதிரிகளின் சதி வலையில் சிக்கியுள்ளது. அது ஏன் என இன்று புரட்சியின் சொந்தக்காரர்கள் சிந்திக்க ஆரம்பித்துள்ளனர்.

ஏன் என்ற அந்தக் கேள்வி அவர்களை விழிப்பு நிலைக்குக் கொண்டு வந்துள்ளது. சீர்திருத்தப் பணியில் நீண்ட கள அனுபவங்களைப் பெற்ற புரட்சியின் மைந்தர்கள், அரசியல் அணுகுமுறை காரணமாக புரட்சி தடம்புரண்டுள்ளதை கவனிக்க ஆரம்பித்துள்ளனர். எனவே பாரிய அர்ப்பணங்களோடு பெற்ற அறபு வசந்தத்தை காவு கொடுப்பதற்கு இனியும் மக்கள் விரும்ப மாட்டார்கள்.

தவறு எங்கே என்பதை அறிந்து கொண்ட புரட்சியாளர்கள், அடுத்த கட்ட நகர்வு எப்படி அமைய வேண்டும் என்பதில் தடுமாற்றம் கொண்டிருப்பதை களத்தில் நாம் காணலாம். ஆனால் எழுச்சி வழியில் வந்த பாதையை திரும்பிப் பார்க்க ஆரம்பித்துள்ள போராளிகள் வெற்றியின் வழியில் முன்னேறுவார்கள் என்பது மிகுந்த நம்பிக்கை தருகிறது.

ஹமாஸ் அரசியல் பிரிவின் முன்னாள் தலைவர் காலித் மிஷ்அல் அவர்கள் புரட்சியாளர்களின் பயணம் குறித்து காத்திரமான ஒரு விமர்சனப் பார்வையை முன்வைத்துள்ளார். அது ஸ்தம்பிதம் கொண்டுள்ள புரட்சியைத் தொடர்வதற்கு பாதை காட்டுகிறது. இது போன்ற விமர்சனங்கள் போராளிகளின் விழிப்பு நிலைக்கும் தங்கள் செயற்பாடுகளை மீள்மதிப்பீடு செய்து முன்னேறுவதற்கும் பெரும் பங்காற்றி வருகிறது என்பதுகள யதார்த்தமாகும்.

அறபு வசந்தத்தின் போது இஸ்லாமிய இயக்கங்களைச் சார்ந்தவர்கள் இரண்டு தவறுக்கு உட்பட்டுவிட்டார்கள் என காலித் மிஷ்அல் கருதுகிறார்கள்.

ஒன்று: தங்களின் இயல் திறன்கள் பற்றிய மிகையான மதிப்பீடு. பாதிக்கப்பட்ட சக்திகளின் எதிர்வினைகள் உள்ளூரிலும் பிராந்தியத்திலும் எப்படி இருக்கும் என்பதில் தப்புக் கணக்கு போட்டதாகவே அதன் பொருள். இஸ்லாமிய அமைப்புக்கள் நம்மால் முடியும் என்ற அதீத நம்பிக்கையில் இறங்கியதால் எதிரிகள் எப்படி எப்படியெல்லாம் தாக்குப் பிடிப்பார்கள் என்பதை மதிப்பிட தவறி விட்டார்கள்.

களத்தின் துல்லியமான புள்ளிவிபரம் அறியாததாலும் அனுபவம் போதாமையாலும் தம் பலத்தில் மாத்திரம் நம்பிக்கை கொண்டதாலும் இஸ்லாமியவாதிகள் எதிரிகளிடத்தில் ஏமாற்றம் கண்டார்கள்.

இரண்டாவது தவறு: தேசத்தைக் கட்டியெழுப்பும் பணியில் ஈடுபாடுள்ள ஏனையவர்களுடான உறவைக் கையாளும் முறையில் காணப்பட்ட பலவீனமாகும்.

அதாவது தேர்தலின் போது பெரும்பான்மை வாக்குகளை மற்றும் பெற்றால் போதாது. அதிகப்படியான வாக்குகள் உண்டுதானே என நினைத்துக் கொண்டு தேசத்தைக் கட்டியெழுப்பும்போது தனித்து நின்று தீர்மானம் எடுத்தது பிழையான அணுகுமுறையாகும். ஏனைய சிவில் நிறுவனங்கள், அமைப் புக்களையும் கூட்டிணைத்துக் கொண்டுதான் பயணத்தை ஆரம்பிக்க வேண்டும் என்பது இஸ்லாமியவாதிகள் மனங்கொள்ள வேண்டிய முக்கிய புள்ளியாகும்.

இவ்வாறே முக்தார் ஷன்கீதி, அஹ்மத் ரய்ஸூனி, ஹஸன் துத்தா போன்ற பல இஸ்லாமிய அறிஞர்கள் அரபு வசந்தத்தை காவு கொடுக்காமல் பாதுகாக்கும் வகையில் புரட்சியாளர்களுக்கு வழிகாட்டல்களை வழங்கியுள்ளனர். விமர்சனங்களையும் வழிகாட்டல்களையும் உள்வாங்கியுள்ள புரட்சியின் மைந்தர்கள் விழித்துக் கொண்டுள்ளனர்.

எதிரிகள் வளைகுடாவில் ஷீஆ-சுன்னி பிரச்சினையை முதன்மைப்படுத்தி புரட்சியை மழுங்கடிக்கவே காய் நகர்த்தியுள்ளனர் என்பதை போராளிகள் விளங்கியுள்ளனர். இஸ்லாமிய எழுச்சிப் போராட்டத்தை மழுங்கடிக்கவே கடார் மீதான முற்றுகை கொண்டுவரப்பட்டுள்ளது. இஸ்ரேல் எந்தக் குற்றமும் செய்யாத ஒரு அப்பாவி நாடு. அதனுடன் நல்லுறவு பேணி உறவுகளை வளர்ப்பதே சுன்னி முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு. எனவே சவூதி தலைமையில் நாடகம் நடக்கிறது.

எனவே அறபு வசந்தம் சியோனிச அறபிகளின் சதிக்கு முன்னால் திணறுகிறது. ஆனால் வளர் கடா பிந்திவிட்டது என்றும் புலி பதுங்கிவிட்டது என்றும் எதிரிகள் கணக்குப் போட்டால் அது தப்புக் கணக்குத்தான். அரபு வசந்தம் விடியலுக்கான தொடக்கப் புள்ளியே தவிர அதுவே விடியல் அல்ல.

அறபு வசந்தம் தோல்வி கண்டு விட்டதாக அமெரிக்கா ஊதி வருகிறது. ஆனால் அறபு வசந்தம் வேறு வடிவம் பெறும் என்பதை களத்தின் யதார்த்த நிலை எமக்குச் சொல்லுகிறது. சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் இடையிலான போராட்ட வடிவம் மாறுபடலாம். சில காலம் அது தேக்கமடையலாம். ஆனால் போராட்டம் ஓய்வதில்லை.

பிரான்ஸிய புரட்சி ஐரோப்பிய உலகில் மாற்றம் தருவதற்கு 100 வருட காலம் எடுத்தது. அறபு வசந்தமும் அப்படித்தான். அது ஒரு சமூகவியல் நியதி. 2011 இல் சுதந்திர காற்று வீச ஆரம்பித்துவிட்டது. அது புயலாக மாறி ஓய்வதற்கு நிச்சயமாக ஒரு தவணை உண்டு.

உஸ்மானிய சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து எழுச்சிக்கான பயணம் ஆரம்பமாகியது. எழுச்சிப் போராட்டம் பல வடிவங்களைத் தாண்டி வந்துள்ளது. இது ஒரு நூற்றாண்டுப் பயணம். அதன் இறுதிக் கூறுகளில் நாம் வாழ்கின்றோம். அறபு வசந்தம் பத்தாவது தசாப்தத்தின் திருப்புமுனையாக மலர்ந்துள்ளது.

எனவே கனி தரும் இரண்டாயிரத்து இருபதுகள் பலத்த சோதனை காலமாக இருக்கும். உலகிற்கு ஒரு நற்செய்தியோடு அது முடிவடையும் என்பது வரலாற்று நியதியாகும்.

---

## பள்ளிவாசல்... (11 ஆம் பக்கத் தொடர்)

நாட்டின் சட்டங்கள் தடுத்துள்ள இவ்வாறான குற்றச்செயல்களைப் பள்ளிவாசல்கள் ஊடாக கட்டுப்படுத்தி அன்று ஒத்துழைப்பு நல்கப்பட்டன இந்த ஏற்பாடுகள் எதுவும் நாட்டின் சட்ட திட்டங்களோடு முரண்படவுமில்லை. அவற்றுக்கு சவாலாக அமையவுமில்லை.

என்றாலும் அறிவியல் வளர்ச்சி, சட்ட திட்டங்களின் மேம்பாடு என்பன காரணமாக பள்ளிவாசலின் ஊர்க் கட்டுப்பாடு என்ற சமூக நிர்வாக ஏற்பாடுகள் வீழ்ச்சியடைந்து விட்டன. இன்று பெரும்பாலான பிரதேசங்களின் பள்ளிவாசல் நிர்வாக சபைகள், பள்ளிவாசல்களில் ஜும்ஆ தொழுகைக்கு பின்னர் நிதி சேகரிப்பதும், அந்நிதியைப் பராமரிப்பதும், பள்ளிவாசல் இமாம், முஅத்தீனுக்கு சம்பளம் வழங்குதல், பள்ளிவாசலை அழகுபடுத்தல், பள்ளிவாசலின் சொத்துக்களை நிர்வகித்தல், பள்ளிவாசல் இமாமைக் கொண்டு சிறுவர்களுக்கு குர்ஆன் ஓதுவதற்கு பழக்கும் வகுப்புக்களை நடாத்தல், ரமழானில் அனுசரணையாளரைக் கொண்டு கஞ்சி ஏற்பாடு செய்தல் என்பவைதான் பணியென்ற நிலைக்கு வந்துள்ளன. சில பள்ளிவாசல்கள் சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்யவும், ஹஜ் கால உழ்ஹிய்யா ஏற்பாடுகளை செய்யவும், ஸகாத், ஸதகா நிதியை அறவிடவும் அவற்றைப் பகிர்ந்தளிப்பதையும் செய்கின்றன.

இவற்றைத் தவிர ஏற்கனவே சமூகத்திற்காக ஆற்றி வந்த எல்லா பணிகளையும் பள்ளிவாசல் நிர்வாக சபைகள் கைவிட்டு விட்டன. இதன் விளைவாக போதைப்பொருள் விற்பனை, அவற்றின் பாவனை, மதுப்பாவனை, சூதாட்டம், வட்டி, எல்லாமே முஸ்லிம் பிரதேசங்களில் இன்று மலிந்து விட்டன. சில பிரதேசங்களின் பாடசாலைகளில் 8 ஆம் 9 ஆம் வகுப்புக்களில் கற்கும் மாணவர்கள் கூட போதைப்பொருள் பாவிப்பவர்களாகவும், விற்பனை செய்பவர்களாகவும் உள்ளனர். இவை அனைத்துமே நாட்டின் சட்டங்களால் தடை செய்யப்பட்டவை. அவற்றைக் கட்டுப்படுத்தவென நாட்டின் சட்டக் கட்டமைப்பு கடுமையாக உழைத்து வருகின்றது. அதனால் அவற்றைக் கட்டுப்படுத்தவென நாட்டின் சட்டக்கட்டமைப்புக்கு கூட பள்ளிவாசல் நிர்வாகங்கள் ஒத்துழைப்பு நல்கலாம்.

தற்போது இந்நாட்டு முஸ்லிம்கள் மத்தியில் விவாகரத்து பெரிதும் அதிகரித்துள்ளது. இது ஆரோக்கியமானதல்ல. ஆனால் சில பிரதேசங்கள் இதனைக் கட்டுப்படுத்தவென கையாளும் நடவடிக்கைகள் முன்னுதாரணம் மிக்கவையாக விளங்குகின்றன. உதாரணமாக காத்தான்குடி பிரதேசத்தில் விவாகரத்து சம்பந்தமான ஒரு முறைப்பாடு காதி நீதிமன்றத்திற்கு வந்தால் அம்முறைப்பாடு முதலில் காத்தான்குடி பள்ளிவாசல் சம்மேளனத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அவர்கள் உள வள மருத்துவருக்கு சம்பந்தப்பட்டவர்களை அனுப்பி வைக்கின்றனர். அதன் பயனாக 90 வீதமான விவாகரத்து கோரிக்கைகள் கைவிடப்படுவதாக அதன் முக்கியஸ்தர் ஒருவர் அண்மையில் குறிப்பிட்டார். இதனை ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த முஸ்லிம்களும் முன்மாதிரியாகக் கொள்ளலாம்.

அதேநேரம் அன்று பள்ளிவாசல் பரிபாலன சபை செயலில் இருந்தபோது, என்ன தான் கட்சி, கொள்கையைச் சேர்ந்தவர் என்றாலும் பள்ளிவாசல் நிர்வாக சபையில் ஒன்றுபடக் கூடியவர்களாக இருந்தனர். அது முஸ்லிம் சமூகத்தின் பலத்தை பறைசாற்றக் கூடியதாக இருந்தது. இன்று அந்நிலைமை இல்லை. ஒவ்வொரு கிராமும், அங்கு வாழும் மக்களும் கட்சி அரசியல்வாதிகளாலும், சமய கொள்கை அமைப்புக்களாலும் [illegible]

அதனால் இன்று முஸ்லிம்கள் ஒன்றுபடக் கூடிய ஒரு தளமோ, மையமோ இல்லாத துர்ப்பாக்கிய நிலைமை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாகப் பெரும்பாலான பிரதேசங்களில் முஸ்லிம்கள் பலமிழந்துள்ளனர்.

ஆனால் இந்நாட்டின் ஒரு சில பிரதேசங்களைச் சேர்ந்த பள்ளிவாசல் நிர்வாகங்கள் சேர்ந்து உருவாக்கி இருக்கும் பள்ளிவாசல் சம்மேளனங்கள் அரசியல்வாதிகள் மாத்திரமல்லாமல், கட்சிகளும், சமய கொள்கை அமைப்புக்களும் ஒன்றுபடும் அல்லது கட்டுப்படும் மையங்களாக விளங்குகின்றன. இதற்கு காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம் குறிப்பிடத்தக்கதாகும்.


அத்தோடு சாய்ந்தமருது ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர், ''சாய்ந்தமருது பிரதேச சபையைப் பெற்றுத் தராமல் எந்தவொரு அரசியல்வாதியும் தம் பிரதேசத்திற்கு வரக் கூடாது'' என்று பகிரங்கமாகக் கூறியுள்ளார். இவ்வாறான சக்தி அவருக்கு எங்கிருந்து கிடைத்தது? இதனை ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்.

அந்த அடிப்படையில் ஒரு சில ஊர்களும், பிரதேசங்களும் பள்ளிவாசல்களைத் தளமாகக் கொண்டு வலுவான கட்டமைப்புக்களாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றில் அரசியல் கட்சி, சமய கொள்கை வேறுபாடுகளுக்கு அப்பால் சகலரும் ஒன்றுபட்டு செயற்படுகின்றனர். இந்நிலைமை முஸ்லிம்கள் செறிவாக வாழும் எல்லாப் பிரதேசங்களிலும் ஏற்படுத்தப்படுவது மிகவும் அவசியமானது. இதன் நிமித்தம் பள்ளிவாசல் நிர்வாக சபைகளை உள்ளடக்கி பள்ளிவாசல் சம்மேளனங்கள் அமைக்கப்பட வேண்டும். அதன் மூலம் தத்தம் பிரதேசங்களில் காணப்படும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்த முடிவதோடு, ஊருக்கும் பிரதேசத்திற்கும் தலைமை வழங்கும் தகைமையை பள்ளிவாசல்களால் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கும். இதன் ஊடாக பிரதேசத்தின் மேம்பாட்டுக்கு பெரும் பங்களிக்க முடிவதோடு, இதர சமூகங்களுடன் நல்லிணக்கம், சகவாழ்வு, ஒற்றுமை, புரிந்துணர்வு போன்ற வேலைத்திட்டங்களை முன்னெடுக்கக் கூடியதாகவும் இருக்கும்.

ஆகவே பிரதேச மட்டத்தில் பள்ளிவாசல் சம்மேளனங்களை அமைத்து செயற்படுவதில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். அதன் முக்கியத்துவமும் சிறப்பும் உணரப்பட வேண்டியது இன்றைய உடனடித் தேவை என்றால் அது மிகையாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனநலம் 07
# மகிழ்ச்சியும் உளநலமும்



உளநலத்தின் பிரதான குறிகாட்டிகளில் ஒன்று மகிழ்ச்சியாகும். அது பல்வேறு காரணிகளில் தங்கியுள்ளது. அக்காரணிகளில் சில நமது கட்டுப்பாட்டில் உள்ளவை; சில நமது கட்டுப்பாட் டிற்கு அப்பாற்பட்டவை. மகிழ்ச்சியை அடைய நம்மால் என்ன செய்ய முடியும் என்பதிலும் சில வரையறைகள் இருக்கவே செய்கின்றன.

எல்லா மனிதர்களும் ஒரே அளவு மகிழ்ச்சியை அனுபவிப்பவர்கள் அல்லர். சிலர் அதிகம் மகிழ்ச்சியானவர்களாகவும் சிலர் மகிழ்ச்சியை குறைந்தளவில் அனுபவிப்பவர்களாகவும் உள்ளனர். சிலர் மகிழ்ச்சியானவர்கள் போன்று தோன்றுகின்றனர். வெளிப்பார்வைக்கு அப்படித் தோன்றினாலும் உள்ளார்ந்த மகிழ்ச்சியை அவர்கள் அனுபவிக்கவில்லை.

மகிழ்ச்சி பற்றிய ஆய்வுகள் அதில் செல்வாக்குச் செலுத்தும் உள்ளார்ந்த மற்றும் வெளியார்ந்த காரணிகளை அடையாளப் படுத்தியுள்ளன. அவற்றுள் சில பின்வருமாறு.

*1. பரம்பரைக் காரணிகள்* **(Genetic Factors)**

மகிழ்ச்சி ஒரு நேர்ப்பாடான மனவெழுச்சியாகும். குறிப்பிடத்தக்க அளவு மகிழ்ச்சி உணர்வுடன் சிலர் பிறக்கின்றனர். பரம்பரைக் காரணிகளோடு மகிழ்ச்சி தொடர்புறுகின்றது. இவ்வாறான மனவெழுச்சிப் பண்பு தற்காலிக காரணிகளால் தடைப்படலாம். ஆனால், அது ஒரு பொழுதும் மாற்றமடைவதில்லை.

*2. ஆரோக்கியம்* **(Health)**

மகிழ்ச்சிக்கும் ஆரோக்கியத்திற்கும் இடையில் ஒரு தெளிவான தொடர்பு உள்ளது. மகிழ்ச்சியான மனிதர்கள் ஆரோக்கியமாகவும் ஆரோக்கியமான மனிதர்கள் மகிழ்ச்சியாகவும் உள்ளனர். நேர்மறையான மனவெழுச்சி உள்ளவன் குறைவாகவே வைத்தியசாலை வாசலைத் தரிசிக்கின்றான். அதிலும் மகிழ்ச்சியானவன் நோய்த் தாக்கங்களுக்கு உட்படுவது குறைவாகும். மாரடைப்பு, பக்கவாதம் என்பன அவனை இலகுவில் தாக்குவதில்லை.

*3. சமூக வாழ்வு* **(Social Life)**

உற்சாகமான சமூக வாழ்க்கைக்கும் மகிழ்ச்சிக்கும் இடையில் நெருங்கிய தொடர்புள்ளது. நல்ல வெற்றிகரமான நண்பர்கள், சந்தோசமான திருமண வாழ்வு, சமூகப் பணிகளில் பங்கேற்பு போன்ற சக மனிதர்களுடனான நெருங்கிய உறவு மகிழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

*4. தொழில் வாழ்வு* **(Work Life)**

திருப்திகரமான தொழில் அல்லது உத்தியோகம் ஒருவரது மகிழ்ச்சியில் குறிப்பிட்டளவு செல்வாக்கை கொண்டுள்ளது. தொழிலின் இயல்பு மற்றும் திருப்தி நல்ல மனப்பாங்கையும் மனவெழுச்சியையும் தருகின்றது. தீர்மானம் எடுப்பதற்கான உரிமை, சுயாதீனம், சுதந்திரம் போன்றவை தாராளமாகக் காணப்படும் தொழில் மகிழ்ச்சிக்கான விழுமியங்களைத் தருகின்றது.

*5. சமூகக் காரணி* **(Social Factor)**

ஒருவரது மகிழ்ச்சியில் வயது, பால்நிலை, இனம் போன்ற காரணிகளும் தாக்கம் செலுத்துகின்றன. எனினும், இவற்றின் தாக்கம் வரையறுக்கப்பட்டவை. இளமையில் உற்சாகம், உடற்பலம், தைரியம் என்பன அதிகமாக இருக்கும். அவை மகிழ்ச்சிக்கு வழிகோலும். வயது செல்லச் செல்ல இக்காரணிகள் குறைவடையும்போது மகிழ்ச்சிக்குரிய வாய்ப்புக்கள் குறைகின்றன.

*6. பணம்* **(Money)**

பணம் குறிப்பிடத்தக்களவு மகிழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்துகின்றது. பணத்தைத் தேடுவதற்கான எல்லை கடந்த உழைப்பு மகிழ்ச்சியை சிதறடிக்கின்றது. ஏனெனில், பணத்தை முகாமை செய்வதிலேயே முழுக் கவனமும் குவியும்போது பணமே கவலையின் பிறப்பிடமாகி விடும். பணத்தை முகாமை செய்வதும் ஏனையவற்றுக்கும் அதற்கும் இடையில் சமநிலை பேணுவதும் முக்கியம்.

*7. மனப்பாங்கு* **(Attitude)**

எமது சிந்தனைகள், நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள், மனப்பாங்குகள் எமது மகிழ்ச்சி உணர்வுடன் நெருக்கமான தொடர்புள்ளவை. மகிழ்ச்சியான மனிதர்கள் எப்போதும் நேர்ப்பாங்காக சிந்திக்கின்றவர்கள். எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருக்கின்றவர்கள், தன்னம்பிக்கை உள்ளவர்கள். சொந்த அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்பவர்கள்.

*8. கட்டுப்பாட்டு உணர்வு* **(Sense of Control)**

யாரும் தனக்கு உதவவில்லை அல்லது தான் ஒரு அநாதரவாளன் என மனிதன் உணரும்போது அவன் ஏனைய மனிதர்களின் கட்டுப்பாட்டில் உள்ளான் என்றே அர்த்தம். சுயாதீனம், சுதந்திரம், தீர்மானிக்கும் உரிமை, நமது கனவுகள் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப தீர்மானமெடுக்கும் சுதந்திரம், இவற்றிலிருந்துதான் மகிழ்ச்சி வருகின்றது. பிறரில் முற்றிலும் தங்கியிருப்போர் மகிழ்ச்சியானவர்களாக இருப்பதில்லை.

*9. வெற்றி* **(Success)**

கோட்பாட்டின்படி வெற்றி பெற்றவர்கள் மகிழ்ச்சியாளர்கள். மகிழ்ச்சியான மனிதர்கள் பெரும்பாலும் வெற்றி பெற்றவர்கள். ஆயினும், வெற்றி பெற்றோர் அனைவரும் மகிழ்ச்சியாளர்களா? வெற்றி பெறுதல் என்றால் என்ன? என்பதெல்லாம் சிக்கலான கேள்விகளே. ஒருவரது மனப்பாங்கைப் பொறுத்து வெற்றி மகிழ்ச்சியைத் தீர்மானிக்கலாம்.

## புத்திஜீவிகளின்... (03 ஆம் பக்கத் தொடர்)

பேராசிரியர் எம்.ஏ.நுஹ்மான் பேராசிரியர் எஸ்.எச்.ஹிஸ்புல்லாஹ், பேராசிரியர் எம்.ஏ.எம்.சித்தீக், எம்.எம்.நியாஸ், பேராசிரியர் எம்.எஸ்.எம்.அனீஸ், ஜே.முபாரக், டொக்டர்.எம்.இஸட்.எம்.நபீல், டொக்டர். ஏ.எஸ்.எம். நவ்பல், டொக்டர்.ஏ.எல்.எம். மஹ்றூப், ஜே.எம்.நிவாஸ், யூ.எம்.பாஸில் ஆகியோர் இணைந்து இது தொடர்பான ஒரு அறிக்கையில் ஒப்பமிட்டுள்ளனர். முஸ்லிம் பெண்களின் சமூக அந்தஸ்தை மேம்படுத்தவும், முஸ்லிம் சமூகத்தின் அபிவிருத்திக்கும் இந்த விடயத்தில் முக்கியமான மாற்றங்கள் அவசியம் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடல்கள் பற்றி சட்டத்தரணி. கலாநிதி றீஸா ஹமீட் குறிப்பிடுகையில் 'தற்போதுள்ள முஸ்லிம் குடும்பச் சட்டத்தில் எந்தவித மாற்றங்களைச் செய்யவும் உலமா சபை எதிர்ப்புத் தெரிவிக்கின்றது. இந்தச் சட்டம் அதன் தற்போதைய வடிவிலே மிகவும் சரியாக இருக்கின்றது அதற்கு எந்த மாற்றங்களும் தேவையில்லை என்று றிஸ்வி முப்தி பிரகடனம் செய்துள்ளார். துரதிஷ்டவசமாக உலமா சபை தலைவரின் இந்தக் கூற்றுக்கள் வருந்தத்தக்கவை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்லாம் மற்றும் முஸ்லிம்கள் தொடர்பான சட்டங்கள் என்பன பிரத்தியேகமாக உலமா சபை மட்டுமே கரிசனை கொண்ட ஒரு விடயமாக இருக்கக் கூடாது. இந்தக் கட்டுரையில் இது தொடர்பான சில விடயங்களை நான் தொட்டுள்ளேன்.

திருமணத்துக்கான ஆகக் குறைந்த வயது. பலதார மணம், பால் சமத்துவம் என்பன அதில் சில. மறுசீரமைப்பின் தேவை குறித்த கலந்துரையாடல்களுக்கு இது பங்களிப்புச் செய்யும் என எண்ணுகிறேன்.

உலமா சபையை இஸ்லாமிய அடிப்படையில் மறுசீரமைக்க வேண்டும் என்ற ரீதியில் பர்வீஸ் இமாமுத்தீன் குறிப்பிடுகையில் உலமா சபையின் கூற்றானது அதன் முன்னைய நிலைப்பாட்டில் செய்ய வேண்டிய மாற்றங்கள் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. அவர்கள் இன்னமும் தாங்கள் சரி என்றே நினைக்கின்றனர். ஆம் அவர்கள் தான் உலமா சபை. அவர்கள் தான் கல்வி மான்களின் கூட்டம். தங்களது தலைவரைக் காப்பாற்ற சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளனவே தவிர வேறு எதுவும் இல்லை.

முஸ்லிம் தனியார் சட்டத்தை உருவாக்கிய எமது முன்னோடிகள் அதை மிகவும் சரியான ஒன்றாக ஆக்குவதற்கு பெரும் முயற்சிகளை எடுத்துள்ளனர் என்பதே அவர்களின் நிலைப்பாடாகும். அன்றைய காலப்பகுதியை பொருத்தமட்டில் அது மிகச் சரியானதாகவே இருக்கலாம். அவை இன்று மறுசீரமைக்கப்படக் கூடாது அல்லது அவ்வாறான தேவை அற்றது என்பதோ இதன் அர்த்தம் அல்ல. குறிப்பாக குவாஸி நீதிமன்ற நிர்வாக முறைகளில்.

உலமா சபையின் தற்போதைய தலைவர் றிஸ்வி முப்தி. இஸ்லாமிய அறிவைப் பொறுத்தமட்டில் நாட்டில் இவர்தான் மிகவும் உயர் தரத்தில் உள்ள அதிகாரம் மிக்கவராகக் கருதப்படுகின்றார்.

நாட்டில் உள்ள மிகச் சிறந்த புத்திஜீவிகள் சிலர் கூட அவரை சவால் விடுக்க முடியாத ஒருவராகத் தான் கருதுகின்றனர். ஆனால் முக்கியமான கேள்வி இப்போது தான்; எழுப்பப்பட்டுள்ளது. உலமா சபையினதும் றிஸ்வி முப்தியினதும் நம்பகத்தன்மை என்ன? என்பதுதான் அந்த கேள்வி. அறிவுஜீவி என்பதற்கு இஸ்லாமிய வகைப்படுத்தல் என்ன? உலமா சபை உறுப்பினர்கள் அந்த வகைப்படுத்தலின் கீழ் வருகின்றனரா? அவர்கள் உண்மையிலேயே புத்தி ஜீவிகளா? ஒரு பிரிவின் சட்டம் இயற்றும் சிறப்புரிமை வழங்கப்பட்டுள்ள அவர்களுக்கு சட்டம் தொடர்பாக இருக்கின்ற அறிவும் தெளிவும் என்ன? பெண் புத்தி ஜீவிகளை ஏற்றுக் கொள்ளவோ அவர்களுக்கு இடமளிக்கவோ மறுக்கின்ற ஒரு அறிவுசார் அமைப்பை சமத்துவத்தை வெளிப்படுத்தும் ஒரு அமைப்பாக எப்படி நம்ப முடியும்?

தவறான கரங்களில் அதிகாரம் இருப்பது ஆபத்தானதும் அழிவை ஏற்படுத்தக் கூடியதும் ஆகும். உலமா சபையின் கூற்றானது அவர்களின் விடாப்பிடித்தனத்தின் தெளிவான வெளிப்பாடன்றி வேறில்லை. அறிவும் விழுமியமும் குறைவாகக் காணப்படும் இவர்கள் ஒரு சமூகத்தின் பொறுப்பைச் சுமக்கத் தகுதி உடைய[illegible]

> இஸ்லாமிய சட்டத்துறை பற்றி அடிப்படை அறிவில்லாத ஒரு கூட்டம் தான் இந்த நாட்டு முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது என்பது ஒன்றும் ஆச்சரியமானதல்ல.

பதையும் எண்ணிப்பார்க்க வேண்டியுள்ளது.

இஸ்லாமிய விஞ்ஞானத்தில் புலமை மிக்கவர்களாக தம்மை தாமே உரிமைக் கோரிக் கொள்ளும் ஒரு தனிநபர்கள் கூட்டத்தைக் கொண்டதே உலமா சபை. சட்டம் இயற்றுவதற்கு தேவையான அடிப்படைத் தகைமை இவர்களிடம் குறைவாக உள்ளதையே நாம் அவதானிக்க கூடியதாக உள்ளது. இஸ்லாமிய நீதித்துறையில் பொது நலன் என்பது மிகவும் முக்கியமானதாகும். இந்த அடிப்படை தகைமை இல்லாமல் இருந்தால் அவர்கள் எப்படி சட்டங்கள் பற்றி ஆராய முடியும். ஒரு சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் உரிமையை எப்படி இத்தகையவர்களிடம் வழங்க முடியும்?.

எவ்வாறேனும் இந்த நிலைமைக்கு உலமா சபையை மட்டும் குறை கூறவும் முடியாது. இந்தப் பாரதூரமான நிலைமை ஏற்படுகின்ற வரைக்கும் முஸ்லிம் புத்திஜீவிகள் சமூகம் அதில் மிதவாதிகள் என தம்மை அழைத்துக் கொள்பவர்கள் கூட மிகவும் மௌனமாகவே இருந்துள்ளனர். இஸ்லாத்தை உலமா சபை எவ்வாறு தவறாகப் பிரதிநிதித்துவம் செய்கின்றது என்பதை அவர்கள் அறிந்து வைத்திருந்தனர். அவர்களின் பிடிவாதம் அறிவீனம் என்பனவற்றை அறிந்திருந்தும் கூட அதை புத்திஜீவிகள் பொருட்படுத்தவில்லை.

உலமா சபையை விமர்சிப்பதில் இருந்து அவர்கள் தவிர்ந்தே வந்துள்ளனர். உலமா சபையின் பொறுப்பற்ற போக்கை புத்திஜீவி சமூகம் கண்டு கொள்ளவில்லை. ஒரு மாற்றுக் குழு பற்றியோ ஏற்பாடுகள் பற்றியோ அவர்கள் யோசிக்கவில்லை.

உண்மையில் அகில இலங்கை ஜம்மிய்யத்துல் உலமா என்பது உண்மையான உலமா சபை அல்ல உண்மையான புத்திஜீவிகள் கூட்டம் அல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டிய தருணம் இது. இஸ்லாமிய சட்டத்துறை பற்றி அடிப்படை அறிவில்லாத ஒரு கூட்டம் தான் இந்த நாட்டு முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது என்பது ஒன்றும் ஆச்சரியமானதல்ல. மாற்றங்கள் தேவைப்படுகின்றவர்கள் அதற்காக குரல் கொடுக்கும் வரை மாற்றங்கள் ஏற்படப் போவதில்லை. அறிவீனர்கள் அறிவீனர்களாகவே இருக்கலாம் அதற்கான காரணங்களும் அவர்களுக்கு இருக்கலாம். ஆனால் புத்திஜீவிகள் அவ்வாறு இருக்க வேண்டும் என்றோ அல்லது மௌனம் காக்க வேண்டும் என்றோ தேவையில்லை.

றிஸ்வி முப்தி உலமா சபையின் தலைவராக கடந்த 17 வருடங்களாக பதவியில் உள்ளார். கேள்விக்குரிய சூழ்நிலைகளின் கீழ் தான் இவர் தெரிவு செய்யப்பட்டார் என்ற குற்றச்சாட்டும் உள்ளது. இந்தப் பதவிக்காலப் பகுதியில் உலமா சபை ஒரு தனி மனித காட்சி நிறுவனமாக மாற்றப்பட்டுள்ளது. அவரை எதிர்த்து கேள்வி கேட்க அங்கு எவரும் இல்லை.

உலமா சபையை அவர் அரசியலுக்குள் இழுத்துச் சென்றதாகக் கூட குற்றச்சாட்டுக்கள் உள்ளன. வர்த்தகர்களுடன் கொடுக்கல் வாங்கல்கள், தலைமை பதவியை பயன்படுத்தி சொத்துக்களை சம்பாதித்துள்ளமை, ஏனைய உலமாக்களுக்கு போதிய சுதந்திரம் இன்மை, அடிக்கடி வெளிநாட்டு பயணம், பொது மக்களுக்கு தொடர்பற்ற நிலைமை, கொழும்பில் உள்ள வெளிநாட்டு நிலையங்களுடனான தொடர்பு, நபி முஹம்மத் (ஸல்) உலக முஸ்லிம்களுக்காக விட்டுச் சென்ற இஸ்லாத்துக்காக அன்றி பெற்றோல் டொலர் இஸ்லாத்துக்காகப் பணியாற்றல் என இன்னும் பல குற்றச்சாட்டக்கள் இவருக்கு எதிராக உள்ளன.

இந்த ஆரோக்கியமற்ற நிலை காரணமாக கௌரவத்துக்குரிய அங்கீகாரம் பெற்ற புத்திஜீவிகளைக் கொண்ட புதிய அமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற யோசனையை சிலர் முன்வைக்க வேண்டிய நிலை உருவாயிற்று. உதாரணத்துக்கு பிஸ்தான் பாச்சா என்ற பத்திரிகை எழுத்தாளர் இப்படிக் குறிப்பிடுகின்றார்.

"உலமா சபையில் களையெடுப்பு நடத்தப்பட வேண்டும். புரட்சிகர மாற்றங்கள் அங்கு அவசியமாகின்றன. புதிய சூழ்நிலைகளோடு பொருந்திப் போகக் கூடிய மார்க்கத் தீர்ப்புக்களை வழங்கக் கூடிய ஒரு பிரிவாக மக்கள் இதை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதேநேரம் மூன்றாம் மில்லேனியத்தில் அல்லது அடுத்த நூற்றாண்டில் மார்க்கத் தீர்ப்புக்களை வழங்கக் கூடிய மக்களை சரியாக வழிநடத்தக் கூடிய இஸ்லாமிய புத்திஜீவிகளைக் கொண்ட சமாந்திரமான ஒரு மாற்று அமைப்பை உருவாக்கவேண்டியதன் அவசியம் அதற்கான காலப்பகுதி என்பன பற்றியும் சமூகம் சிந்திக்க வேண்டும். உலமா சபையின் தற்போதைய கடப்பாடுகளை கண்மூடித்தனமாகப் பின்பற்ற வேண்டும் என்ற தேவை முஸ்லிம் சமூகத்துக்கு கிடையாது.

முஸ்லிம் சமூகம் இன்று அதன் இருப்பையே கேள்விக்குறியாக்கும் வகையில் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளது. அமெரிக்கா ஐரோப்பா யூத சக்திகள் இந்திய புலனாய்வு பிரிவு என பல முஸ்லிம் விரோத சக்திகள் அவற்றின் பிரத்தியேகமான நிகழ்ச்சி நிரலுடன் நாட்டில் உள்ளன. முஸ்லிம்களின் ஆதரவோடு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி என்று கூறப்படும் இந்த அரசு இவர்களுக்கு செங்கம்பளம் விரித்து வரவேற்று அவர்களோடு கைகோர்த்து செயற்படுகின்றன. இந்த சக்திகள் சிங்கள இனவாத சக்திகளை தூண்டிவிடுகின்றன. இந்த இனவாத சக்திகள் மீண்டும் தலைதூக்குகின்றன. அரசாங்கமோ அவர்களை கண்டு கொள்ளாமல் கண்களை மூடிக் கொண்டு இருக்கின்றது.

முஸ்லிம் அரசியல்வாதிகள் ஊழலுக்கு விலைபோனவர்களாக உள்ளனர். சிவில் சமூகம் அமைப்பு முறையில் இருந்து விலகிக் காணப்படுகின்றது. இவ்வாறான சூழலில் பண்டைய சிந்தனைகளோடு தமக்குத் தேவையானவர்களுக்கு சேவகம் புரியும் ஒரு உலமா சபை இருக்க வேண்டும் என்ற தேவையில்லை.

எனவே இன்றைய தேவை வெள்ளிக்கிழமை குத்பா பிரசாரங்களையும் ஏனைய போதனைகளையும் சிறந்த முறையில் மேற்கொண்டு முஸ்லிம் சமூகத்தை சரியான பாதையில் வழி நடத்தக்கூடிய புத்திஜீவிகளைக் கொண்ட ஒரு குழுவே ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு ஜெருசலத்தை... (01 ஆம் பக்கத் தொடர்)

இதனைத் தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் இந்த அறிவிப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இலங்கையில் பாரிய எதிர்ப்பு பேரணியொன்று இன்று (22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை) மாலை 3:30 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அனைத்து பலஸ்தீன நட்புறவு அமைப்புகள், அனைத்து மத தலைவர்கள், வெளிநாட்டு தூதுவர்கள், அரசியல் கட்சிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கம், கலைஞர்கள், சட்டத்தரணிகள் சங்கம் போன்ற பல்வேறு அமைப்புகள் இந்தப் பேரணியில் பங்குகொள்ளவுள்ளன. ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீ லங்கா பொதுஜன பெறமுண, தமிழ் தேசிய கூட்டமைப்பு, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜ கட்சி ஆகிய பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் இந்த எதிர்ப்பு பேரணியில் ஒன்றிணைந்துள்ளன. ஒரு பொது நோக்கத்துக்காக இலங்கையில் உள்ள அரசியல் கட்சிகள் ஒன்றிணையும் முதல் சந்தர்ப்பமாக பலஸ்தீனுக்குக் குரல் கொடுக்கும் இந்த நிகழ்வு அமையவுள்ளது.

கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்வு ''உலக அபிப்பிராயத்துக்கு மதிப்பு வழங்கு! கிழக்கு ஜெரூஸலத்தை பலஸ்தீனத்தின் தலைநகராக ஏற்றுக்கொள்'' ("Respect World Opinion! Accept East Jerusalem as the Capital of Palestine") எனும் தொனிப் பொருளில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பின்னர் சகல தரப்பினரும் இணைந்து கையொப்பமிட்டு தீர்மானமொன்றும் நிறைவேற்றப்படவுள்ளது. இந்தத் தீர்மானம் எதிர்வரும் 12.01.2018ம் திகதி ஐக்கிய அமெரிக்க தூதுரகத்தில் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரசவத்தின்... (07 ஆம் பக்கத் தொடர்)



கசிவால் இதனை கண்டுகொள்ளலாம். இவ்வாறு பல நோய்க் குணங்குறிகள் உள்ளன. கடைசி கட்டங்களில் இதை கண்டுபிடிக்க வைக்காமல் இதை முன்கூட்டியே 10 வருடங்களுக்கு முன்னரே கண்டுபிடிக்கலாம்.

- **இப்புற்றுநோயை ஏலவே கண்டு பிடிக்கக் கூடிய முறையை சற்று தெளிவுபடுத்த முடியுமா?**

சிறுவர்களுக்கு கையில் வைரஸால் உண்ணிகள் ஏற்படலாம். இது சில காலங்களில் மறைந்து போகும். இது human papilloma virus என அழைக்கப்படும். இது பொதுவாக உடற் தோலில் சர்வ சாதாரணமாகத் தோன்றி மறைந்து போகும். கிட்டத் தட்ட 100 வகையான வைரஸ்கள் காணப்படும். இதில் 16, 18 இலக்கங்களில் உள்ள வைரஸ்களே உக்கிரமானவை. இது ஆணிலிருந்து பெண்ணுக்கோ, பெண்ணிலிருந்து ஆணுக்கோ போகலாம். இது உடலுறவின் மூலம் ஒருவரிலிருந்து ஒருவருக்கு கடத்தப்படும். இதுவொரு பாலியல் நோயல்ல. இதை நாம் பொதுவாக பாலியல் நோய் எனக் கூறுவதில்லை.

இந்த வைரஸ் கர்ப்பப் பை கழுத்துப் பகுதியில் இருந்தால் கிட்டத் தட்ட 2 வருடங்களின் பின் அவை காணாமல் போய்விடும். ஆனால் ஒரு சிலருக்கு அவர்களுடைய நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாக இருந்தாலோ மற்றும் பல்வேறு காரணங்களால் இந்தக் கர்ப்பப் பை கழுத்தில் சிறு சிறு மாற்றங்களை ஏற்படுத்தி அப்பகுதி திசுக்களை புற்றுநோய்க் கலங்களாக மாற்றி அப்பகுதியில் புற்றுநோயை வரவைக்கும். இப்புற்றுநோய் மாற்றங்கள் கிட்டதட்ட 10 அல்லது 11 வருடங்களாக மெதுவாக நடைபெறும் மாற்றங்கள். இதனை ஆரம்பக் கட்டத்திலேயே கண்டுபிடிக்கலாம்.

- **இப்புற்றுநோயை எவ்வாறான பரிசோதனையின் மூலம் கண்டுகொள்ளலாம்.?**

இதனை கண்டுபிடிக்கும் பொதுவான முறை pap smear program என அழைக்கப்படுகின்றது. அதாவது ஒவ்வொரு பெண்ணும் 35 வருடத்திற்கு பின்னர் ஒவ்வொரு 5 வருடங்களுக்கு ஒரு முறையும் தமது அருகிலுள்ள MOH சிகிச்சை நிலையங்களுக்குச் சென்றால் அவர்கள் கர்ப்பப் பை கழுத்துப் பகுதியிலிருந்து ஒரு டெஸ்டை எடுப்பார்கள். அது ஆய்வு கூடத்திற்கு அனுப்பப்படும். ஆய்வுகூட ரிப்போட் நோர்மல் என வந்தால் அவர்கள் அடுத்த 5 வருடங்களின் பின் சென்று பார்த்தால் போதும். அதில் ஏதாவது கலங்களில் சில மாற்றங்கள் ஏற்படுவதாகக் கண்டு பிடிக்கப்பட்டால் அதற்கு இலகுவாக சிகிச்சையளித்து சத்திரசிகிச்சை இல்லாமலேயே இதை குணப்படுத்தலாம். இது எவ்வளவு கொடியதோ அவ்வளவு இலகுவானதும் கூட.

இம்முறை இலங்கையிலும் இருப்பதால் இங்குள்ள பெண்களும் அங்கு சென்று பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். நிறைய பெண்கள் கடைசி நேரத்தில் இப்புற்றுநோய் உடல் முழுவதும் பரவி கடைசி நேரத்தில் மிகவும் கஷ்டப்பட்டவர்களாக அனுமதிக்கப்படுவதை கண்டுள்ளேன்.

- **இதிலிருந்து விடுபடுவதற்கு ஒரு வெக்சின் (ஒரு தடுப்பூசி) மருந்து அறி முகப்படுத்தப்பட்டதாக கேள்விப்பட் டோம். இது தொடர்பில் குறிப்பிடுவ தாயின்..**

Human Papilloma Virus என்பது மருத்துவ உலகத்திற்கு புதியதொரு வைரஸல்ல. இது 1972 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இது தோலில் புற்றுநோயை உருவாக்கக் கூடியது என உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. அன்று முதல் பல்வேறு ஆராய்ச்சிகளுக்கு உட்படுத்தப்பட்டு கிட்டத்தட்ட 2008 ஆம் ஆண்டு இவ்வைரஸால் கர்ப்பப் பை வாயில் புற்று நோய் வருகின்றது என 'ஹெரல்ட் சூ ஹோஸன்' என்கின்ற ஜேர்மன் விஞ்ஞானி கண்டுபிடித்தார்.

அதற்கு 2008 இல் அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. அதன் பின்னர் பல்வேறு ஆராய்ச்சிகள் இடம்பெற்று ஒரு தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டது. இத்தடுப்பூசியை இங்கிலாந்து போன்ற நாடுகளில் 10, 15 வருடங்களுக்கு முன்னரே பாடசாலை மாணவர்களுக்கு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அமெரிக்க, ஜப்பான் போன்ற வளர்முக நாடுகளில் இது பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதனால் அவர்கள் பயன் பெற்றுமுள்ளார்கள். 16, 18 வகை வைரஸுக்கு எதிரான இவ்வெக்சினை பாது காப்பான முறையில் 2 வழங்குதலாக வழங்கப்படுகின்றது.

இலங்கையில் 98 பெண்களில் ஒருவருக்கு அவரது வாழ்நாளில் கர்ப்பப் பை கழுத்தில் புற்றுநோய் வரலாம் என ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வெக்சினை (தடுப்பூசியை) பெற்றிருந்தால் இவ்விகிதாசாரத்தை 70 வீதமாகக் குறைக்கலாம் என்றும் ஆய்வில் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவொரு புதிய முறையல்ல. இது குழந்தைகளுக்கு மலட்டுத்தன்மையையோ, பாதிப்புக்களையோ ஏற்படுத்தாது. இதனால் பல்வேறு பாரதூரமான பக்க விளைவுகளும் ஏற்படுவதில்லை. நாம் எத்தனையோ சிறுவர்களுக்கு வழங்கியுள்ளோம். ஆனால் எவ்வித பாதிப்புக்களும் அவர்களுக்கு ஏற்படவில்லை. நான் இங்கிலாந்தில் இரண்டு வருடம் பயிற்சி பெற்று வந்த காலத்தில் பேராசிரியர் 'எல்பர்ட் சிங்கர்' எனும் புகழ் பெற்ற வைத்தியர் இத்தடுப்பூசியை சிபாரிசு செய்திருப்பதைக் கண்டுள்ளேன்.

இத்தடுப்பூசி தற்போது இலங்கையிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பாடசாலை குழந்தைகளுக்கு 10-11 வயதுப் பிள்ளைகளுக்கு 6 மாதங்களுக்கு ஒரு தடவை 2 வழங்குதலாக வழங்கப்படும். இதை பெற்றுக்கொள்வது வளர்ந்த பின்னர் கருப்பையில் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை 70 வீதமாக குறைத்துக்கொள்ள முடியும் என்பதால் இது வழங்கப்படுகின்றது. இது பக்கவிளைவு ஏற்படும் என அச்சப்படத் தேவையில்லை. இது உலகளாவிய ரீதியில் பல நாடுகளில் வழங்கப்படுகின்றது என்பதால் நான் உங்கள் பிள்ளைகளுக்கும் இதை சிபாரிசு செய்கிறேன். இப்புற்றுநோய் இலங்கையில் இருப்பது உண்மையில் துரதிஷ்டம். இதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டும்.

## 1400 மலேசிய... (01 ஆம் பக்கத் தொடர்)



இராணுவ அதிகாரிகளுக்கான பயிற்சி, புலனாய்வு தகவல்களை பரிமாறிக் கொள்ளுதல், தூதுவர்களுக்கான பயிற்சி, ஈ- நீதிமன்ற தொழில்நுட்பம், விவசாயம் போன்ற துறைகள் குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டன.

மலேசியாவின் ஈ- நீதிமன்ற தொழில் நுட்பத்தின் மூலம் வழக்குகளை விசாரிப்பதற்கான கால எல்லையை பெரிதும் குறைக்க முடிந்துள்ளதாகத் தெரிவித்த மலேசியப் பிரதமர், இத்தொழில்நுட்பத்தை இலங்கைக்கு வழங்கவும் விருப்பம் தெரிவித்தார்.

இலங்கையில் 14,000 மத்திய தர வர்க்க வீடுகளை நிர்மாணிப்பதற்கு மலேசியா இணக்கம் தெரிவித்ததுடன், இது தொடர்பான கலந்துரையாடல் இன்னும் சில தினங்களில் நிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் 30 வருடங்களாக நீடித்த யுத்தத்தினால் இடம் பெயர்ந்த வட மாகாண முஸ்லிம்கள் இன்று வரை தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படாமலிருக்கின்றனர். யுத்தத்தினால் சேதமடைந்த வீடுகளுக்குப் பதிலாக குடியிருப்புக்கு வசதியான வீடுகள் வழங்கப்படாமை இவர்களது மீள்குடியேற்றத்துக்குப் பெருந்தடையாகவுள்ளது. வட மாகாண மக்களின் மீள்குடியேற்றத்துக்கென இந்தியா வழங்கிய வீடுகளிலும் முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்துக்குத் தேவையான வீடுகள் வழங்கப்படவில்லை. சுனாமிப் பேரழிவினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கென சவூதி அரசாங்கம் நுரைச்சோலையில் கட்டிக் கொடுத்த வீடுகளும் முஸ்லிம்களுக்கு வழங்கப்படவில்லை.

## கூட்டணியில்லாத... (03 ஆம் பக்கத் தொடர்)

துணைக் கட்சிகள் இருக்கின்றன. தற்போதைய நிலை யில், முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் இலங்கை தொழிலா ளர் காங்கிரஸும் டக்ளஸ் தேவாநந்தா வின் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியுமே சிலவேளை மைத்திரி அணியில் சேர லாம் எனக் கூற முடிகிறது. இவ்விரண்டு கட்சிகளும் அவற்றின் வரலாற்றில் எப் போதும் ஆளும் கட்சியுடன் கூட்டுச் சேரவே விரும்பியுள்ளன.

கட்சியாக இல்லாவிட்டாலும் தனி நபர்களாக விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியின் மூன்று தலைவர்களும் மஹிந்த அணியிலுள்ள தினேஷ் குணவர்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணியின் பெண் எம்.பி ஒருவரும் இந்த வாரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து ஸ்ரீ ல.சு.கவில் இணைந்து கொண்டனர்.

விமலின் கட்சியின் உபதலைவர் வீரகுமார திஸாநாயக்க, தேசிய அமைப்பாளர் பியசிறி விஜேநாயக்க மற்றும் முன்னாள் எம்.பி ஜயந்த விஜேசேகர ஆகியோரே அவ்வாறு ஜனாதிபதியுடன் இணைந்த விமலின் சகாக்களாவர்.

கடந்த தேர்தல்களின் போது, இருந்ததைப் போலல்லாது இம்முறை வித்தியாசமான ஒருநிலைமை வடக்கில் காணப்படுகிறது. 1972 ஆம் ஆண்டு, தமிழர் கூட்டணி அமைக்கப்பட்டது முதல் தமிழரசுக் கட்சி தலைமையிலான கூட்டணிகளுக்கு எதிராக வேறு கூட்டணிகள் போட்டியிடவில்லை. ஆனால், இம்முறை அவ்வாறானதோர் கூட்டணி உருவாகியிருக்கிறது.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து கடந்த மாதம் விலகிய பின், அதன் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் இணைந்து புதிய கூட்டணி அமைக்கப் போவதாக அறிவித்தார்.

ஆனால், அவ்வாறு கூட்டணி அமைப்பதற்காகப் பிரேமசந்திரன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி. ஆனந்தசங்கரியை அணுகியபோது, தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதய சூரியன் சின்னத்தின் கீழ், தாம் போட்டியிட விரும்பவில்லை எனக் கூறி, பொன்னம்பலம் ஒதுங்கிக் கொண்டார்.

மட்டக்களப்பு மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில், இட ஒதுக்கீடு தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்புக் கட்சிகளான இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்துக்கும் (டெலோ) இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டபோது, இனித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு கூட்டுச் சேர்வதில்லை என டெலோத் தலைவர்கள் அறிவித்தனர். ஆனால், பின்னர் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுடன் மீண்டும் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பயனாக, டெலோ மீண்டும் கூட்டமைப்பில் சேர்ந்து கொண்டது.

தமிழீழ விடுதலை புலிகளின் தேவைக்கு அமையவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2001 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. கூட்டமைப்பு அமைக்கப்படும் போது, தமிழரசுக் கட்சி, தமிழர் விடு



தலைக் கூட்டணி என்ற பெயரிலேயே இயங்கியது. டெலோவும் ஈ.பி.ஆர்.எல். எப் கட்சியும் புளோட்டும் கூட்டமைப்பில் இருந்த ஏனைய கட்சிகளாகும்.

பின்னர், கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி புலிகளுடன் முரண்பட்டுக் கொண்டு, கூட்டணியின் பெயரையும் அதிலிருந்த சிலரையும் எடுத்துக் கொண்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறினார். எனவே, கூட்டணியின் பெரும்பான்மையினர் தமிழரசுக் கட்சியாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் செயற்பட ஆரம்பித்தனர்.

இப்போது வடக்கில், இரண்டு தமிழ்க் கூட்டணிகள் களத்தில் இருக்கின்றன. ஒன்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகும். அதில், கூட்டமைப்பின் ஆரம்பக் கட்சிகளில் மூன்று கட்சிகள் இப்பொழுதும் இருக்கின்றன. அவை, இலங்கைத் தமிழரசுக் கட்சி, டெலோ மற்றும் புளோட் ஆகியவைகளாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஆரம்பத்தில் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சி தற்போது கூட்டமைப்பில் இருந்து வெளியேறி, தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது. அது தான் களத்தில் இருக்கும் இரண்டாவது கூட்டணியாகும்.

இந்த இரண்டு கூட்டணிகளில், தமிழரசுக் கட்சி மற்றும் டெலோ தவிர்ந்த ஏனைய கட்சிகளின் தலைவர்கள், கடந்த தேர்தல்களில் தோல்வி கண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவற்றுக்கு புறம்பாக டக்ளஸ் தேவாநந்தாவின் தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தாம் போட்டியிடப் போவது தனித்தா, கூட்டுச் சேர்ந்தா என்பதை இன்னமும் வெளியிடவில்லை.

ஐ.தே.க, ஸ்ரீ ல.சு.க மற்றும் மக்கள் விடுதலை முன்னணி போன்ற தேசிய கட்சிகளும் இம்முறையும் வடக்கில் போட்டியிடக் கூடும். ஆனால், அவற்றினால் அங்கு எந்த வித தாக்கத்தையும் ஏற்படுத்திவிட முடியாது.

கிழக்கில் மு.காவிலிருந்து அதன் முன்னாள் தவிசாளர் பஷீர் சேகுதாவூதும் பொதுச் செயலாளர் ஹசன் அலியும் சில மாதங்களுக்கு முன்னர் பிரிந்து சென்றனர். பின்னர், அவர்கள் தூய முஸ்லிம் காங்கிரஸ் என்ற பெயரில் கட்சியொன்றை அமைக்கப் போவதாகச் செய்திகள் கூறின.

ஆனால், இப்போது அவர்கள் ஐக்கிய சமாதானக் கட்சி என்ற பெயரிலேயே செயற்படுகிறார்கள். அந்தக் கட்சியும் ரிஷாத் பதியுதீனின் மக்கள் காங்கிரஸும் இணைந்து புதிய கூட்டணியொன்றை ஆரம்பித்திருக்கிறார்கள்.

இவ்வாறுதான் தேர்தலுக்காகக் கட்சிகள், அணிகளை அமைத்துக் கொண்டு இருக்கின்றன. எதிர்வரும் நாட்களிலும் மேலும் சில மாற்றங்களை எதிர்பார்க்கலாம். அநேகமாகத் தனி நபர்களாகப் பலர், இந்தக் கட்சியிலிருந்து அந்தக் கட்சிக்கும் அந்தக் கட்சியிலிருந்து இந்தக் கட்சிக்கும் தாவலாம்.

மொத்தத்தில் வடக்கிலும் தெற்கிலும் கிழக்கிலும் தேர்தல் கூட்டணிகளைப் பார்க்கும் போது, அவற்றுக்குக் கொள்கை அடிப்படை என்ற எதுவுமே இல்லை என்பதுதான் பொதுவான அடையாளமாக இருக்கிறது. வாசுதேவ நாணயக்கார போன்ற அதிகாரப் பரவலாக்கலை வலியுறுத்துவோர் மஹிந்தவின் தலைமையில் எவ்வாறு கூட்டுச் சேரலாம்?

ஐ.தே.க பலம் பெறும் வகையில் விமல் வீரவன்ச செயற்படுகிறார் என்று குற்றஞ்சாட்டி அவரது கட்சியிலிருந்து பிரிந்தவர்கள், ஐ.தே.கவுடன் அரசாங்கத்தை நடத்தும் மைத்திரிபாலவுடன் எவ்வாறு கூட்டுச் சேரலாம்?

கொள்கை வித்தியாசம் எனக் கூறி, இரண்டு கட்சிகளை அமைத்துக் கொண்டு இருக்கும் ஹக்கீமும் ரிஷாத்தும் ஐ.தே.கவின் கீழ் ஒரே அணியில் எவ்வாறு இருக்கலாம்? மு.காவை எதிர்ப்பதைத் தவிர, ஐக்கிய சமாதான முன்னணிக்கும் மக்கள் காங்கிரஸுக்கும் இடையே ஏதாவது கொள்கை அடிப்படை உண்டா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தம்மோடு இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதய சூரியன் சின்னம் இப்போது பொன்னம்பலத்துக்கு ஏன் பிடிக்கவில்லை? கொள்கை காரணமாகத்தான் ஈ.பி.ஆர்.எல்.எப் கூட்டமைப்பிலிருந்து பிரிந்தது என்றால் வெறும் ஆசனப் பங்கீட்டுப் பிரச்சினைக்காகக் கூட்டமைப்பிலிருந்து விலக முற்பட்ட டெலோவை அக்கட்சி எவ்வாறு தம்மோடு இணைத்துக் கொள்ள முன்வந்தது? என்ன கொள்கை அடிப்படையில் டெலோ, தமிழர் விடுதலை கூட்டணியின் தலைமையிலான கூட்டணியில் சேர முயற்சித்தது?

இவ்வாறு சகல கட்சிகளிடமும் இப்போது கொள்கை என்ற அடிப்படையில் மேலும் பல கேள்விகளை கேட்கலாம். அவர்கள் என்ன தான் பதில்களை வழங்கினாலும் இந்த விடயத்தில் எவருக்கும் கொள்கை எதுவும் இல்லை என்பதே உண்மை.

### மீள்பார்வை — உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்

| | | | |
|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி - ரூபா 40.00 | இந்தியா | மத்திய கிழக்கு நாடுகள் - 4000.00 | ஐக்கிய இராச்சியம் - 5500.00 |
| 12 இதழ்கள் - ரூபா 600.00 | தனிப் பிரதி - ரூபா 100.00 | மலேசியா - 4000.00 | அமெரிக்கா - 6500.00 |
| 24 இதழ்கள் - ரூபா 1200.00 | ஒரு வருடம் - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் - 4000.00 | அவுஸ்திரேலியா - 4700.00 |
| | | | சீனா - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்.

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777 581 661 People's Bank A/c: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாசமான உதவி



ஒரு காட்டில் ஒரு இளைஞன் நடந்து போய்க் கொண்டிருந்தான். அவனுக்குப் பசியெடுத்தது. ஒரு மரத்தில் உயரத்தில் கனிந்த பழங்கள் இருப்பதைக் கண்டான். மரத்தின் மேல் சரசரவென்று ஏறி அவற்றில் சில பழங்களைப் பறித்துத் தின்றான். மிகக் கனிந்த வாசனையுள்ள பழங்கள் கிளைகளின் நுனியில் இருந்தன. அவற்றை எட்டிப் பறிக்கக் கிளையின் மேல் நகர்ந்து சென்ற போது அவனது பாரம் தாங்காமல் ஒரு கிளை முறிந்து விட்டது.

சட்டென்று சுதாரித்த அவன் கீழே இருந்த ஒரு கிளையைப் பிடித்துக் கொண்டு தொங்க ஆரம்பித்தான். குனிந்து பார்த்தால் தரை வெகு கீழே இருந்தது.

ஏற்கனவே பயந்து போயிருந்த அவன் மேலும் பயந்து கண்ணை மூடிக் கொண்டு 'யாராவது காப்பாற்றுங்கள்' என்று திரும்பத் திரும்ப அலற ஆரம்பித்தான். உள்ளங்கை வியர்த்து வழுக்க ஆரம்பிக்கும் நிலை வந்து விட்டது.

தற்செயலாக அப்போது அந்தப் பக்கம் ஒரு முதியவர் வந்தார். மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தவனைப் பார்த்தார். அவன் மேல் ஒரு சிறிய கல்லை விட்டு எறிந்தார். கல் பட்டவுடன் வலியில் கீழே பார்த்தவனுக்கு ஆத்திரம் வந்தது. 'பெரியவரே, உதவச் சொன்னால் கல்லால் அடிக்கிறீரே. அறிவில்லையா உமக்கு' என்று கோபத்துடன் கேட்டான்.

பெரியவர் பதில் பேசாமல் மற்றொரு சிறிய கல்லை எடுத்து அவன் மேல் எறிந்தார். மேலும் கோபமுற்ற இளைஞன் பெருமுயற்சி எடுத்து கையை வீசி மேலிருந்த கிளை ஒன்றை பலமாக பற்றிக் கொண்டு 'நான் கீழே வந்தால் உம்மைச் சும்மா விட மாட்டேன்' என்று எச்சரித்தான்.

மீள்பார்வை

தொகுப்பு: அஸாருதீன்

பெரியவர் மேலும் ஒரு கல்லை அவன் மேல் வீசினார். இளைஞன் இப்போது இன்னொரு பெருமுயற்சி எடுத்து கிளை மேல் ஏறி விட்டான். விடுவிடுவென இறங்கி வந்த அவன் நேராகப் பெரியவரிடம் வந்தான். அவரை சரமாரியாகத் திட்டினான். 'ஏன் அப்படிச் செய்தீர்? உம்மை நான் உதவிதானே கேட்டேன்?' என்றான்.

பெரியவர் அமைதியாக சிரித்துக் கொண்டே 'தம்பி... நான் உனக்கு உதவிதான் செய்தேன்' என்றார். இளைஞன் திருதிருவென முழித்தான்.

பெரியவர் விளக்கினார். 'நான் உன்னை முதலில் பார்த்த போது நீ பயத்தால் உறைந்து போயிருந்தாய். உன் மூளை வேலை செய்யவில்லை. நான் கல்லை விட்டு எறிந்ததும் பயம் மறைய ஆரம்பித்து நீ என்னை எப்படிப் பிடிப்பது என்று யோசிக்க ஆரம்பித்தாய். யோசிக்க ஆரம்பித்தவுடன் நீயாகவே உன்னைக் காப்பாற்றிக் கொண்டு கீழே இறங்கி விட்டாய். உன்னை உன்னாலேயே காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று உன் அறிவுக்கு முதலில் புலப்படவில்லை. உன் பயம் உன் கண்ணை மறைத்துக் கொண்டிருந்தது. அதிலிருந்து உன்னை நான் திசை திருப்பினேன்' என்று சொல்லி விட்டுத் தன் வழியே அவர் போய் விட்டார்.



## ஜாக் டோர்சே (Jack Dorsey)

ஜாக் டோர்சே உலகின் முன்னணி சமூக வலைத்தளமான Twitter இன் இணை நிறுவனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி. சிறுவயதிலிருந்தே கணினி மற்றும் மென்பொருட்கள் உருவாக்கத்தில் ஆர்வம் இருந்தது. அவர் Missouri University of Science and Technology கல்லூரியில் சேர்த்தார். அதிலிருந்து விலகி பின்னர் New York University Tandon School of Engineering இல் சேர்ந்தார். ஆனால் அதிலிருந்து கல்லூரிப் படிப்பை இடையில் நிறுத்திக் கொண்டார்.

பிறகு 2010 இல் ஒக்லாண்ட் நகரில் இணையத்தின் மூலம் தேவைப்படுவோருக்கு கார்களை அனுப்பி வைக்கும் நிறுவனத்தைத் தொடங்கினார். இந்த துணிகர முயற்சியே Twitter எனும் மிகப் பெரிய சமூக வலைத்தளத்தைத் தொடங்குவதற்கான சிந்தனையை அவருக்குக் கொடுத்தது. 2006 இல் ஜாக் டோர்சே, இவான் வில்லியம்ஸ் (Evan Williams) மற்றும் சில பேர் சேர்ந்து Twitter ஐ தொடங்கினர்.

## ஜான் கோம் (Jan Koum)



இன்றைய உலகின் தகவல் ஜாம்பவானாக WhatsApp திகழ்கிறது. உக்ரைனிலிருந்து வாழும் வழி தேடி அமெரிக்காவுக்கு வந்த ஜான் கோம் (Jan Koum) தான் WhatsApp ஐ தொடங்கியவர்.

1995 இல் San Jose State University பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். மேலும் படிப்புச் செலவுக்காக ஒரு கம்ப்யூட்டர் நிறுவனத்தில் பகுதி நேர வேலையிலும் சேர்ந்தார். அந்த சமயத்தில்தான் Yahoo நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தார். ஜான் கோமுக்கு யாஹூ நிறுவன வேலை பிடித்துப் போனதால் கல்லூரி படிப்பைப் பாதியிலேயே நிறுத்தினார்.

அங்கு பிரையன் ஆக்டனின் (Brian Acton) நெருங்கிய நண்பரானார். இருவரும் இணைந்து 2004 இல் WhatsApp ஐ துவக்கினர். பல சோதனைகள் மற்றும் இழப்பிற்குப் பிறகு 2014 இல் Facebook நிறுவனம் WhatsApp ஐ $19.3 பில்லியன் டாலர் தொகைக்கு கையகப் படுத்தியது.

# உழைப்பே அதிஷ்டம் தரும்

ஒரு விவசாயிக்கு வயது அதிகமானதால் இறக்கும் தருவாயில் இருந்தார். தம் பிள்ளைகள் பொறுப்பில்லாமல் இருப்பதை பற்றிக் கவலையாக இருந்தார். ஒரு நாள், அவர் தம் பிள்ளைகளை அருகில் அழைத்தார். தன்னுடைய நிலங்களை அவர்களுக்குப் பிரித்துக் கொடுத்தார். அது மட்டுமல்லாமல், அந்த நிலங்களில் ஓரிடத்தில், ஓரடி ஆழத்தில் புதையல் இருப்பதாகச் சொன்னார். அதைத் தேடி எடுத்துக் கொள்ளும்படிச் சொல்லி விட்டு இறந்து போனார்.

பிள்ளைகள் மூவரும் தந்தைக்குச் செய்ய வேண்டிய இறுதிக் காரியங்கள் அனைத்தையும் செய்தார்கள். அதன்பின், அவர் குறிப்பிட்டிருந்த புதையலை எடுப்பதற்காக நிலத்தைத் தோண்ட ஆரம்பித்தார்கள்.

முதலில் மூத்த மகனின் நிலம் முழுவதையும் ஒரு அடி ஆழத்துக்கு தோண்டினார்கள். புதையல் எதுவும் கிடைக்கவில்லை. ஒருவேளை, அப்பா 'இரண்டடி' என்று சொல்வதற்கு பதிலாக 'ஓரடி' என்று சொல்லி விட்டாரோ என்ற சந்தேகத்தில் பிள்ளைகள் மூவரும் சேர்ந்து, மூத்தவனின் நிலத்தை இன்னும் ஓரடி ஆழமாகத் தோண்டினார்கள். அப்போதும் அவர்களுக்குப் புதையல் கிடைக்கவில்லை.

எப்படியும் புதையலைக் கண்டுபிடித்து விட வேண்டும் என்ற வெறியில், இரண்டாவது மகனின் நிலத்தையும் இரண்டடி வரை தோண்டினார்கள்.



ஏமாற்றம்தான் மிஞ்சியது. 'இவ்வளவு தூரம் வந்த பின் எப்படி விட முடியும்' என்று கடைசி மகனின் நிலத்தையும் இரண்டடி தோண்டினார்கள். மறுபடியும் ஏமாற்றமே!

அப்பா மேல் வருத்தம் வந்தாலும், அவர்கள் 'சரி.. தோண்டியது வீணாக வேண்டாம்' என்று எண்ணி, அந்த நிலங்களில் விதை விதைத்தார்கள். நீர் பாய்ச்சினார்கள். உரம் போட்டார்கள். உழைப்பு வீண் போகுமா? ஆண்டு முடிவில் அவர்கள் நிலத்தில் அமோக விளைச்சல். அறுவடை செய்து விற்றதில் அவர்களுக்குக் கொள்ளை லாபம்.

இப்படி உழைப்பால் வரும் பயனைத்தான் அப்பா புதையல் என்று குறிப்பிட்டார் என்று பிள்ளைகள் மூவரும் புரிந்து கொண்டார்கள்.

# இடைத்தங்கல் இடமாக...

நாளைய மஹ்ஷர் மைதானமே
இன்றைய ஜெரூஸலம்
ஒத்திகை பார்க்கின்றாரோ
யூ.எஸ்.ஏ. ட்ரம்ப் ஐயா

நபிமார்களுக்கெல்லாம் இமாமாக
நபிகளார் தொழுவித்த இடத்துக்கு
சொந்தங் கொண்டாடுகிறது
சாத்தான் தேசம்

மூன்றாவது புனிதஸ்தலம்
இப்லீஸின் தலைநகர் என்றால்
அது உம்மத்தின்
கையாலாகாத்தனம் அன்றோ!

போரைத் தூண்டியவர்கள்
இஸ்லாமிய உணர்வின்
வேரையும் தூண்டியதுதான்
சந்தோஷத்துக்குரிய செய்தி
அடங்கிப் போயிருந்த
விடுதலை வேட்கையையும்
சேர்த்தே பிரகடனப்படுத்தினார்கள்

முதல் கிப்லா
முதல்தர சாக்கடைகளிடம்
சிக்கிச் சீரழிவதைச்
சகிக்க மாட்டான் எந்த முஸ்லிமும்

அன்பியாக்கள் பலரின் தாயகத்தை
தங்கள் தலைநகர் என்கிறார்கள்
தலை நகலாமலிருக்க
தைலமெடுத்துத் தேய்த்துவிடுவோம்

புண்ணிய பூமியை அந்நிய பூமியாக்கிவிட்டார்கள்
வேண்டாம் ஒப்பாரி
ஈமான் ஈட்டியுடன்
எழுந்து புறப்படுவோம்.

விண்வெளிப் பயணத்துக்கே
இடைத்தங்கல் இடம்
சமூக விடுதலைக்கு
இடைத்தங்கல் இடமாக
இருக்கக் கூடாதா?

-கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ்-


## தேர்தல்... (01 ஆம் பக்கத் தொடர்)

அறிக்கை இறுதிப்படுத்தப்படும் தரு வாயில் அகில இலங்கை ஜம்இய்ய துல் உலமா முன்வைத்த அறிக்கைக்கு குழுவினரில் பெரும்பான்மையினர் கையொப்பமிட்டு முன்வைத்துள்ளனர். இருந்த போதிலும் குழுவின் பெரும் பான்மையினர் முன்வைத்த இந்த அறிக்கை குழுவினரால் ஏற்றுக் கொள் ளப்படவில்லை எனத் தெரிகிறது.

இந்த நிலையிலேயே குழுவினர் தயாரித்த அறிக்கையில் கைச்சாத்திடுவதற்கென கடந்த 20 ஆம் திகதி குழு வின் அங்கத்தவர்கள் அனைவரும் மீண் டும் அழைக்கப்பட்டிருந்தனர். ஆனா லும் அகில இலங்கை ஜம்மியதுல் உலமா அங்கத்தவர்கள் உட்பட பெரும் பாலானவர்கள் இந்தக் கூட்டத்துக்குச் சமுகமளிக்கவில்லை. இதனால் இஸ்லா மிய சட்டத்துக்கு முரணான வகையில் பெரும்பான்மையின் சம்மதம் இன்றியே அறிக்கை பூரணப்படுத்தப்படுவதற் கான வாய்ப்புக்கள் இருப்பதாக தெரிய வருகிறது.

இந்த நிலையில் நீதியரசர் ஸலீம் மர்சூப் தலைமையிலான குழுவினர் இது தொடர்பான ஊடக அறிக்கை யொன்றை விரைவில் வெளியிடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

# போதைவஸ்து குற்றம் தொடர்பான கைதுகளின் எண்ணிக்கை வீழ்ச்சி



2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2016 ஆம் ஆண்டு போதைப் பொருட்கள் தொடர்பான குற்றச் செயல்களுக்காக கைதுசெய்யப் பட்டவர்களின் எண்ணிக்கை 4 சத வீத வீழ்ச்சியை காட்டியுள்ளதாக தேசிய அபாயகர மருத் துவ கட்டுப்பாட்டுச் சபை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப் பிட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு போதைப் பொருட்கள் தொடர்பான குற்றச் செயல்கள் தொடர்பில் 82 ஆயிரத்து 482 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த 2016 ஆம் ஆண்டில் 79 ஆயிரத்து 378 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தேசிய அபாயகர மருத்துவ கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

இவர்களில் 35 வீதமானோர் ஹெரோயின் தொடர்பான குற்றங்களுக்காகவும், 60 வீதமானோர் கஞ்சா போதைவஸ்து தொடர்பான குற்றங்களுக்காகவும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டில் போதைப்பொருட்கள் தொடர்பான குற்றச் செயல்கள் தொடர் பில் கைதானவர்களின் வீதம் மொத்த சனத்தொகையுடன் ஒப்பிடுகையில், ஒரு லட்சம் பேருக்கு 350 என்ற அளவில் காணப்பட்டதாக தேசிய அபாயகமருத்துவ கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

## மூன்று லட்சம்... (01 ஆம் பக்கத் தொடர்)

பிறப்புச் சான்றிதழ் இல்லாதவர்கள் தேசிய அடையாள அட்டையை பெறுவதற்கு விண்ணப்பத்தில் தமது சுய விபரங்களை பூர்த்தி செய்ய வேண்டும். இதன் பின்னர் பிறப்புச் சான்றிதழுக்கு பதிலாக உறவினர் மூவரின் தேசிய அடையாள அட்டையின் விபரங்களையும் உறவினர் அல்லாத மூவர் அதாவது நீண்டகாலமாக அந்த பிரதேசத்தில் வசிக்கும் மூவரினது தேசிய அடையாள அட்டை விபரங்களையும் உள்ளடக்கிய சத்திய கடிதத்தையும் சமர்ப்பிக்க வேண்டும்.

இதனை கிராம உத்தியோகத்தர் மூலமாக பிரதேச செயலகத்தில் உறுதி செய்து திணைக்களத்தில் உள்ள விசேட பிரிவுக்கு விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

வாக்காளர் டாப்பில் உள்ள பதிவையும் இதற்காக பயன்படுத்த முடியும். இவ்வாறு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை சமர்ப்பிப்போருக்கு ஒரு மாத காலத்திற்குள் தேசிய அடையாள அட்டை விநியோகிக்கப்படும் என்றும் தேசிய ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

இந்த விசேட பிரிவுக்கு இதுவரையில் 5 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இதில் 1000 பேருக்கு தேசிய அடையாள அட்டை விநியோகிப் பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தேர்தல்... (01 ஆம் பக்கத் தொடர்)



கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டும் நடவடிக்கைகளுக்கு அரச வளங்களைப் பயன்படுத்தல், இலஞ்சம் வழங்குதல், சமய தளங்களை அரசியல் பிரச்சார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தல், வேட்பு மனு தாக்கல் செய்த தினத்திலிருந்து தேர்தல முடிந்து அடுத்த நாள் வரையுள்ள காலப்பகுதிகளில் சமய, சமூகப் பணிகள் தவிர்ந்த ஊர்வலங்கள், நடைபவனி, வாகனப் பவனிகள் நடத்துதல், அனுமதியற்ற இடங்களில் சுவரொட்டிகள், பதாதைகள் போன்றவற்றை காட்சிப்படுத்தலும், துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தலும் போன்ற தேர்தல் சட்டங்களை மீறும் சகல செயற்பாடுகள் சம்பந்தமாகவும் இந்த விஷேட அலுவலகத்தில் முறையிட முடியுமென அவர் மேலும் தெரிவித்தார்.

சுவரொட்டிகளும் பதாதைகளும் காட்சிப்படுத்த முடியுமான மூன்று சந்தர்ப்பங்கள் மட்டுமே தேர்தல் விதிகளுக்கு உட்பட்டதாகும். வேட்பாளர் ஒருவர் வாகனத்தில் இருக்கும் நிலையில் அவர் பயணம் செய்யும் வாகனம், தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெறும் இடத்தில் குறித்த சந்தர்ப்பத்தில் மட்டும், ஒவ்வொரு கட்சிகளதும் மத்திய நிலையங்களிலும் கிளைக் காரியாலயங்களிலும் ஆகிய மூன்று சந்தர்ப்பங்கள் மட்டுமே தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டவைகளாகும்.

தேர்தல் விதிமுறை மீறல் தொடர்பான முறைப்பாடுகளை 0112 864416 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவோ, 0112 864308 என்ற தொலைநகல் ஊடாகவோ தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்ய முடியும்.

எதிர்காலத்தில் மாவட்ட செயலக மட்டத்திலும் இவ்வாறான அலுவலகங்களை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.முஹம்மத் மேலும் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# டெஸ்ட் போட்டி முறைகளில் மாற்றம்



நான்கு நாட்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் தினமும் 98 ஓவர்கள் வீச வேண்டும் என்று, பாலோ-ஆன் கொடுப்பதற்கான ஓட்ட வித்தியாசம் 150 ஓட்டங்கள் எனவும் ஐ.சி.சி. கூறியுள்ளது.

கிரிக்கெட்டில் தற்போது டெஸ்ட், 50 ஓவர்கள் கொண்ட ஒருநாள் மற்றும் 20 ஓவர்கள் கொண்ட டி20 என மூன்று வகை போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் ஒரு வீரரின் உண்மையான திறமையை கண்டறிய டெஸ்ட் போட்டிதான் சிறந்ததாக இருந்து வருகிறது.

காலப்போக்கில் ஐந்து நாட்கள் முழுவதும் செலவழித்து டெஸ்ட் போட்டியை காண ரசிகர்கள் விரும்புவதில்லை. இதனால் ஒருநாள் போட்டிக்கு முக்கியத்தும் கொடுத்த ரசிகர்கள், தற்போது டி20 கிரிக்கெட்டிற்கு மாறி வருகின்றனர். இதனால் பாரம்பரிய போட்டியாக கருதப்படும் டெஸ்டிற்கு ஆபத்து ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் காலையில் நடைபெற்று வந்த டெஸ்ட் போட்டிகளை பகல் - இரவு டெஸ்ட் போட்டியாக நடத்த அனைத்து நாடுகளும் ஆர்வம் காட்டி வருகின்றன. ஆஸ்திரேலியா இதில் முன்னணியாக விளங்குகிறது. அந்த அணி அடிலெய்டில் பகல் - இரவு டெஸ்ட் போட்டிகளை நடத்தி வருகிறது.

இந்நிலையில் டெஸ்ட் போட்டிகளை நான்கு நாட்களாக குறைக்க வேண்டும் என்ற கருத்துக்கள் நிலவி வருகிறது. முதற்கட்டமாக தென்ஆப்பிரிக்கா இந்த முயற்சியை கையில் எடுத்துள்ளது. இதற்கு ஐ.சி.சி. சம்மதம் தெரிவித்துள்ளது.

தென்ஆப்பிரிக்கா கிரிக்கெட் வாரியம் தென்ஆப்பிரிக்கா - ஜிம்பாப்வே இடையில் வருகிற 26ம் திகதி 'பாக்சிங் டே' டெஸ்டாக இதை நடத்துகிறது. இந்த டெஸ்ட் எத்தனை மணி நேரம் நடக்கும்? எத்தனை ஓவர்கள் வீச வேண்டும் என்ற விதிமுறை வகுக்கப்படாமல் இருந்தது.

இந்நிலையில நான்கு நாட்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஒரு நாள் 98 ஓவர்கள் வீச வேண்டும் என்றும், பாலோ-ஆன் 150 ஓட்டங்களாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும், 6.30 மணி நேரம் போட்டி நடக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# P.D. சிறிசேன:

## இலங்கையின் கால்பந்து பிதாமகன்



இலங்கை கால்பந்து விளையாட்டில் உருவான அதிசிறந்த கால்பந்து வீரரும், இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் முன்னாள் தொழில்நுட்பப் பணிப்பாளருமான P.D. சிறிசேன தமது 77 ஆவது வயதில் கடந்த 18 ஆம் திகதி காலமானார்.

ராஜகிரிய - சங்கராஜா மகா வித்தியாலயம் மற்றும் மருதானை மத்திய கல்லூரியின் ஊடாக இலங்கை தேசிய கால்பந்து அணிக்குத் தெரிவான இவர், சுமார் 15 வருடங்கள் இலங்கை தேசிய அணிக்காக விளையாடியதுடன், இலங்கை அணியின் தலைவராகவும் செயற்பட்டு அணிக்கு பல்வேறு வெற்றிகளையும் பெற்றுக்கொடுத்துள்ளார்.

அது மாத்திரமின்றி, சௌண்டர்ஸ் கழகத்துக்காக (1956 - 1972) விளையாடிய அவர், 21 FA கிண்ணம் மற்றும் சம்பியன் லீக் கால்பந்து கிண்ணங்களையும் அவ்வணி வெற்றிகொள்வதற்கு முக்கிய காரணமாக இருந்தார்.

அத்துடன், இலங்கை மற்றும் மாலைதீவுகள் தேசிய அணிகளின் சிறந்த பயிற்றுவிப்பாளராக விளங்கிய அவர், 1976 - 1979 மற்றும் 1980 - 1987 ஆகிய காலப்பகுதியில் இலங்கைக்கும், 1988 இல் மாலைதீவுகள் தேசிய அணி மற்றும் அந்நாட்டின் நியூ ரேடியன்ட் எப்.சி அணிக்கும் பயிற்சியாளராக கடமையாற்றியுள்ளார். அதன் பிறகு கால்பந்து ஆலோசகராகவும் பல வருடங்களாக கடமையாற்றியுள்ளார்.

மேலும், ஆசிய கால்பந்து சம்மேளனத்தின் தொழில்நுட்ப ஆலோசகராக கடமையாற்றிய முதல் இலங்கையர் என்ற பெருமையையும் அவர் பெற்றுக்கொண்டார்.


இந்நிலையில், இலங்கையின் கால்பந்து விளையாட்டுக்கு வழங்கிய அன்னாரது சேவையை கௌரவிக்கும் வகையில் மறைந்த முன்னாள் ஜனாதிபதியான ரணசிங்க பிரேமதாஸவின் பிறந்த இடமான மாளிகாவத்தையில் அமைந்துள்ள கால்பந்து மைதானத்தை, P.D. சிறிசேன மைதானம் எனப் பெயரிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சிறிசேன மாஸ்டர் மற்றும் கால்பந்து சிறா என கால்பந்து வீரர்கள் மற்றும் ரசிகர்களினால் செல்லப் பெயர் கொண்டு அழைக்கப்பட்ட அன்னார், இந்நாட்டின் கால்பந்து விளையாட்டின் வளர்ச்சிக்கு சுமார் 70 வருடங்கள் அளப்பெரிய சேவையாற்றியுள்ளதுடன், தேசிய மற்றும் சர்வதேச விருதுகள் பலவற்றையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

ஐரோப்பிய கழகங்களுக்காகவும், 1970ஆம் ஆண்டுகளில் இலங்கை அணிக்காக விளையாடிய ஒரேயொரு வீரராவார்.

அன்னாரது பூதவுடல் P.D. அவர் விளையாடிய கழகம் (சௌண்டர்ஸ்) அமைந்துள்ள டாம் வீதியில் கடந்த 19 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி மாலை வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக் கிரியை இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் பூரண பங்களிப்புடன் பொரல்லை பொது மயானத்தில் நடைபெற்றது.

# பிராவோவுக்கு இனி வாய்ப்பில்லை



நட்சத்திர வீரரான டுவைன் பிராவோ, இனி மேற்கிந்திய அணிக்காக விளையாட வாய்ப்பில்லை எனத் தெரிகிறது.

மேற்கிந்தியாவின் சகலதுறை வீரர் டுவைன் பிராவோ (34 வயது), நடு வரிசையில் ஓட்டம் எடுக்கும் இவர் கடைசி கட்ட ஓவர்களில் வேகத்தால் அசத்துவார். ருவென்ரி 20 உலகக் கிண்ணம் வென்ற இரண்டு முறையும் ( 2012, 16) அணியில் இடம்பெற்றிருந்தார்.

இதுவரை 40 டெஸ்ட் (4527 ஓட்டம், 86 விக்.) 164 ஒருநாள் ( 3606 ஓட்டம், 199 விக்.), 66 ருவென்ரி 20 போட்டிகளில் ( 981 ஓட்டம், 52 விக்.) விளையாடியுள்ளார்.

கடைசியாக தேசிய அணிக்காக பாகிஸ்தானுக்கு எதிராக அபுதாபியில் நடந்த ருவென்ரி 20 போட்டியில் விளையாடினார். கடந்த ஆண்டு டிசம்பரில் அவுஸ்திரேலியாவில் நடந்த பிக் பாஷ் உள்ளூர் ருவென்ரி 20 தொடரின் போது (மெல்போர்ன் அணி) இடது தொடையின் பின்பகுதியில் காயம் ஏற்பட்டது. இதன்பின் சர்வதேச போட்டிகளில் பங்கேற்கவில்லை.

இது குறித்து பிராவோ கூறுகையில்; சிறப்பான உடற்தகுதியுடன் இருந்தபோதே தேசிய அணியில் இடம் கிடைக்கவில்லை. தற்போது எனக்கு 34 வயதாகிவிட்டது. மீண்டும் மேற்கிந்தியாவுக்காக விளையாடுவேன் என நினைத்துப் பார்க்க முடியவில்லை.

உலகம் முழுவதும் எனக்குள்ள ரசிகர்களுக்காக பல்வேறு ருவென்ரி 20 தொடரில் விளையாடுவேன். இதற்குத் தான் முன்னுரிமையும் கொடுப்பேன். மீதமுள்ள நாட்களில் இப்படியே விளையாடி மகிழ்ச்சியடைந்து கொள்வேன் என்றார்.

எனவே, இனி பிராவோவின் ஆட்டத்தை ஐ.பி.எல்., கரீபியன் பிரிமியர் லீக் உள்ளிட்ட தொடரில் மட்டுமே ரசிகர்களால் காணமுடியும்.


## வெளிவந்து விட்டது

# நாடுவது நலம்

**ஓர் அரசியல்வாதியின் சமூக அனுபவங்கள்**




இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் மீள்பார்வையில் எழுதிய பத்திகளின் தொகுப்பு ஒரு நூலாக...

விலை 300.00

வெளியீடு :

FOCUS MEDIA (Pvt) Ltd




வருடம் தோரும் நவம்பர் மாதம் நடைபெறும் மீள்பார்வை வாரம் இம்முறையும் வெகு சிறப்பாக நடைபெற்றது. இதன்போது, சுற்றுச் சூழலைப் பாதுகாப்போம் சுகமாய் வாழ வழிசெய்வோம் எனும் தலைப்பிலான 2018 மீள்பார்வைக் கலண்டர் நாட்டின் பல பாகங்களிலும் மற்றும் வெளிநாடுகளிலும் விநியோகிக்கப்பட்டன. நிகழ்வுகள் நடைபெற்ற சில இடங்களின் புகைப்படங்களை கீழே காணலாம்.

Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org